



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:258 | 03-04-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

03.04.2026 பங்குனி 20
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 6.11

திதி:
இன்று காலை 8.51 வரை
பிரதமை பின்பு துவிதியை.

நட்சத்திரம்:
இன்று இரவு 7.25 வரை
சித்திரை பின்பு சுவாதி.

யோகம் :
இன்று பிற்பகல் 2.06 வரை
வ்யாகாதம் பின்பு ஹர்ஷனம்.

கரணம்
இன்று காலை 8.51 வரை
கௌலவம் பின்பு இரவு 9.30
வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும்
சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 7.25 வரை
பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
காலை 10.30 – 12.00.

எமகண்டம்
பிற்பகல் 3.00 – 4.30.

குளிகை
காலை 7.30 – 9.00.

இன்று புனித வெள்ளி நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும், அதிமுக ஆட்சிக்கும் பெரிய வரலாறே உள்ளது

**முதல்வர் ஸ்டாலின்**



**ஈரோடு, ஏப்.3:**

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும், அதிமுக ஆட்சிக்கும் பெரிய வரலாறே உள்ளது என்று தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை சாலை திண்டல் அருகே அமைக்கப்பட்டுள்ள திடலில் திமுக மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் ஸ்டாலின் வியாழக்கிழமை பிரசாரம் மேற்கொண்டார்.

“குழந்தை திருமணம், பாலியல் வன்கொடுமை, குடும்ப வன்முறை உள்ளிட்டவற்றைக்கு தீர்வு காண பாலின வள மையங்களை உருவாக்கியுள்ளோம். சிறுமிகளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்துள்ளோம். 86 சதவிகித வழக்குகளில் 60 நாள்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளோம். இந்தியாவிலேயே அதிக பெண்கள் வேலைக்கு போகும் மாநிலம் தமிழ்நாடுதான். சட்டம் - ஒழுங்கு இருப்பதால்தான் பெண்கள் வேலைக்கு போகிறார்கள்.

பாஜகவின் கிளைச் செயலாளராக இருக்கும் பழனிசாமிக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கண்டு வயிறு எரிகிறது. கால்களில் தவழ்ந்து சென்று, கால்களை வாரிவிட்டு ஆட்சிக்கு வந்தோம். ஆனால், திமுகவும் ஸ்டாலினும் ஒரு தேர்தலில் கூட வெற்றி பெற விடுவதில்லை என நினைத்துக் கொண்டுள்ளார்.

பெண்கள் பாதுகாப்பு பற்றி பேசுவதற்கு பழனிசாமிக்கு அருகதை இருக்கிறதா? அதிமுகவின் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கே தெரியும். அப்பாவி பெண்களின் கதறல்கள் இன்னும் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கில் எவ்வளவு நாடகம் நடத்தினார் பழனிசாமி. அந்த வழக்கை முறையாக நடத்தி, குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வாங்கிக் கொடுத்தது திமுக ஆட்சிதான்.

அவர் ஆட்சியில் டிஜிபியாக இருந்தவர் பெண் எஸ்பிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். அதை பாதுகாத்தது அன்றைய முதல்வர் பழனிசாமிதான். இந்த வழக்கிலும் தண்டனை வாங்கிக் கொடுத்தது திமுக ஆட்சியில்தான்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும், அதிமுக ஆட்சிக்கும் பெரிய வரலாறே உள்ளது. தருமபுரி பேருந்தில் மாணவிகள் எரிக்கப்பட்டது, பெண் ஐஏஎஸ் மீது ஆசிட் வீச்சு என பெரிய பட்டியலே போடலாம். ஆனால், பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு மரண தண்டனை கொடுக்கும் சட்டத்தை திமுக இயற்றியுள்ளது” என்றார்.

# “கேரள மக்கள் பாஜகவை உற்சாகமாக ஆதரிக்கின்றனர்”



**புதுடெல்லி, ஏப்.3:**

கேரள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை வலுவாக ஆதரித்து வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மேலும், எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை வாக்காளர்கள் புரிந்துகொண்டுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "கேரளம் முழுவதும் உள்ள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை உற்சாகமாக ஆதரித்து வருகின்றனர்.

எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை அவர்கள் நன்கு புரிந்துகொண்டுவிட்டனர். இன்று மாலை 4:30 மணிக்கு நடைபெறவுள்ள 'மேரா பூத் சப்சே மஸ்பூத் சம்வாத் கேரளம்' நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2026-ஆம் ஆண்டிற்கான கேரள சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஏப்ரல் 9-ஆம் தேதி நடைபெறவுள்ளன. வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் எல்டிஎஃப், யுடிஎஃப் மற்றும் என்டிஏ என மும்முனைப் போட்டி நிலவுகிறது.

மார்ச் 31 அன்று, கேரள பாரதிய ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால், கேரளத்தை உலகின் முக்கியமான சுற்றுலாத் தலமாக உருவாக்குவதாகவும், திருவனந்தபுரத்தை தகவல் தொழில்நுட்பத் தலைநகராகவும், கொச்சியை இந்தியாவின் கப்பல் கட்டுமான மையமாகவும், கோழிக்கோட்டை சுகாதாரம் மற்றும் மருத்துவ தலைநகராகவும், திருச்சூரை கலாச்சாரச் சுற்றுலாத் தலைநகராகவும், கடல்சார் ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கொல்லத்தை சர்வதேச அளவில் போட்டியிடக்கூடிய 'நீலப் பொருளாதார' மையமாகவும், கண்ணூரைப் பாதுகாப்புத் துறை சார்ந்த புத்தாக்க மையமாகவும் மேம்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 'பக்ஷ்ய ஆரோக்கிய சுரக்ஷா அட்டை' மூலம், மருந்துகள் மற்றும் மளிகைப் பொருட்களை வாங்குவதற்காக மாதந்தோறும் ரூ. 2,500 தொகையை பெறலாம். மேலும், கேரளாவில் எய்ம்ஸ் மருத்துவமனை ஒன்றை நிறுவுவதாகவும், திருவனந்தபுரத்தை கண்ணூருடன் இணைக்கும் அதிவேக ரயில் பாதையை மேம்படுத்துவதாகவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு இரண்டு இலவச எல்பிஜி சிலிண்டர்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் மாதந்தோறும் 20,000 லிட்டர் இலவச தண்ணீர் வழங்கப்படும் எனவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தி.மு.க. பா.ஜ.க. கள்ளக்கூட்டணி: திருச்சியில் விஜய் தாக்கு



**திருச்சி, ஏப்.3:**

தி.மு.க.வும் பா.ஜ.க.வும் கள்ளக்கூட்டணி வைத்திருப்பதாக த.வெ.க. தலைவர் விஜய் பேசினார்.

திருச்சி கிழக்குத் தொகுதியில் போட்டியிடுவதற்காக திருச்சி பாலக்கரை பகுதியிலுள்ள மாநகராட்சி 2-வது மண்டல அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியிடம் விஜய் வேட்பு மனு தாக்கல் செய்தார். அங்கிருந்து பிரச்சார வாகனத்தில் புறப்பட்ட விஜய் மரக்கடைப் பகுதியில் இருந்த எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

திருச்சி மக்களே, கியாஸ் சிலிண்டருக்கு புக் செய்துவிட்டீர்களா? கியாஸ் வந்துவிட்டதா? கியாஸ் பிரச்சினையால் எவ்வளவு பிரச்சனைகள். எவ்வளவு டீக்கடைகள், ஓட்டல்கள் மூடிவிட்டார்கள். எவ்வளவு நஷ்டங்கள். அவங்க கொஞ்சம் உஷாராக இருந்தால் இந்த தட்டுப்பாடு வராமல் தடுத்திருக்கலாம். இவங்களாவது கொஞ்சம் முன்னெச்சரிக்கையாக இருந்திருந்தால், குறைந்தபட்சம் நம்ம ஊரிலாவது தட்டுப்பாடு இல்லாமல் தடுத்திருக்கலாம். இதற்கு இவர்கள் 2 பேரும் தான் காரணம். நம்ம ஸ்டாலின் சாரை கேட்டால் நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்வார். ஆனால் அவர் வீட்டில் ஏதாவது ஒரு ‘ரைடு’ வந்தால், அல்லது அவர் வீட்டில் ஏதாவது பிரச்சனை என்றால் டெல்லிக்கு பறந்து போயிட்டு வருவார். இந்த கியாஸ் சிலிண்டர் பிரச்சனைக்கு கொஞ்சம் டெல்லிக்கு பறந்து போயிட்டு வரலாமே?

**பொய் வாக்குறுதி கொடுத்து ஏமாற்றுவதே வேலை**

கியாஸ் சிலிண்டருக்கு ரூ. 100 மானியம் தருவதாக சொன்னீர்களே? என்ன ஆனது. கரும்புக்கு ஆதார விலையாக ரூ. 4 ஆயிரம் தருவதாக சொன்னீர்களே? என்ன ஆனது. ரேஷனில் சர்க்கரை ஒரு கிலோ கூடுதலா தருவதாக சொன்னீர்களே, உளுத்தம் பருப்பு தருவதாக கூறினீர்களே என்ன ஆனது. நானும் எத்தனை முறைதான் சொல்வேன் என்று தெரியவில்லை. ‘நீட்’ தேர்வை ரத்து செய்வதாக சொன்னீர்களே என்ன ஆனது? எதெல்லாம் அவரால் செய்ய முடியாதோ அவற்றை எல்லாம் பொய் வாக்குறுதியாக கொடுத்து ஏமாற்றுவதே அவரது வேலை. அடுத்தக் கட்ட பொய் வாக்குறுதிகளை அவர் தயார் செய்து விட்டார்.

**கள்ளக்கூட்டணி**

இந்த காங்கிரஸில் இருப்பவர்களை கையில் வைத்துக் கொண்டு, சிறுபான்மையினரை ஏமாற்ற பாதி கதர் கூட்டணி. மற்றும் பலர் கூட்டணியின் டெல்லி உரிமையாளருடன் ஒரு கள்ளக்கூட்டணி அதாவது பாதி காவி கூட்டணி... அதனால் தி.மு.க.வையும் நம்பாதீர்கள்... பா.ஜ.க.வையும் நம்பாதீர்கள். இரண்டு பேரும் வேறு வேறு கூட்டணி கிடையாது. அவர்கள் 2 பேரும் ஒரே கூட்டணி தான். நீங்கள் தி.மு.க.வுக்கு ஓட்டு போட்டாலும், பா.ஜ.க.வுக்கு ஓட்டு போட்டாலும் ஒன்று தான். வருகிற தேர்தலில் த.வெ.க ஆதரவு கொடுங்கள். இன்னும் பல வருடங்கள் தமிழ்நாடு சூப்பராக இருக்கும்.

உங்கள் விஜய்க்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடுங்கள். தயவு செய்து விசில் சின்னத்திற்கு ஓட்டுப்போடுங்கள். இது ஒரு விசில் புரட்சி தேர்தலாக இருக்க வேண்டும். நமது வேட்பாளர்கள் வேற நான் வேற என்று பிரித்து பார்க்காதீர்கள். அவர்கள் அனைவரையும் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விஜய் பேசினார்.

# சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கை சி.பி.ஐ. விசாரிக்கும்: ராஜ்நாத் சிங் உறுதி

**எர்ணாகுளம், ஏப்.3:**

கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி கொடூர ஆட்சியை நடத்தி வருகிறது. அதற்கு உதாரணம், தற்போது ராஜ்யசபா எம்.பி.யாக உள்ள சதானந்தன் மாஸ்டரின் 2 கால்களை அவர்கள் ஏற்கனவே வெட்டி உள்ளனர். அவர்கள் மனிதர்களை மட்டுமல்ல, விலங்குகளையும் வேட்டையாடி வருகின்றனர். ஆட்சி, பதவி, அதிகாரம் ஆகியவற்றிற்காக கொடூர செயல்களில் ஈடுபடும் கட்சியாக கம்யூனிஸ்டு கட்சி விளங்குகிறது.

மேலும் எஸ்.டி.பி.ஐ., ஜமாத் இ இஸ்லாமி ஆகிய அமைப்புகளின் பிடியில் இருந்து கேரளத்தை காப்பாற்ற தேசிய ஜனநாயக கூட்டணியால் மட்டுமே முடியும். இடது முன்னணி ஆட்சியில் சுவாமி, மனிதர்கள் என யாருக்குமே பாதுகாப்பில்லை. கேரளம் அனைத்து துறைகளிலும் வளர வேண்டும். விவசா யம், கல்வி, வேலைவாய்ப்பு. சுகாதாரம், சிறு, குறு தொழில் கள் வளர்ச்சி அடைய வேண்டும். அவ்வாறு நடைபெற வேண்டுமென்றால், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் அமர வேண்டும்.

திருச்சூரில் அதற்கான வழி திறக்கப்பட்டது. அதுபோல சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற் றால் மட்டுமே, கேரளம் வளர்ச்சிக்கு வழிவகுக்க முடியும். சபரிமலை தங்கம் கொள்ளை வழக்கு குறித்து நிச்சயமாக சி.பி.ஐ. மூலம் விசாரிக்கப்படும். தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், இதுகுறித்து உரிய நடவடிக்கைஎடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

# புதிய பான் கார்டு விண்ணப்பங்களுக்கு பிறப்பு சான்றிதழ் கட்டாயம்: அமலுக்கு வந்தது புதிய விதி

**புதுடெல்லி, ஏப்.3:**

புதிய பான் கார்டு விண்ணப்பங்களுக்கு ஓட்டுநர் உரிமம். பிறப்புச் சான்றிதழ் போன்ற அரசாங்கத்தால் வழங்கப்பட்ட எந்தவொரு அடையாள அட்டையும் செல்லுபடியாகி வந்தது. இனிமேல் மத்திய அரசின் சட்டத்திருத்தத்தின் படி பிறந்தநாள் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஆதார் வழங்கத் தொடங்கிய காலத்திலிருந்து, அது ஒரு அடையாள சான்று மற்றும் முகவரி சான்று மட்டுமே தவிர பிறந்த தேதிக்கான சான்று அல்ல என்று இந்திய தனித்துவ அடையாள ஆணையம் கூறி வருகிறது. இந்நிலையில் சமீபத்தில் வருமான வரித்துறை மற்றும் UIDAI ஆகியவை இணைந்து இந்த விதியை இன்னும் கடுமையாக்கியுள்ளன.

ஆதாரில் உள்ள பிறந்த தேதி பல நேரங்களில் தோராயமாக பதிவு செய்யப்படுவதால், நிதி சார்ந்த ஆவணமான பான் கார்டுக்கு அது செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஆதார் கார்டை நீங்கள் பான் கார்டுக்கு பயன்படுத்தவே முடியாது என்று அர்த்தமல்ல.

உங்களுடைய பெயரை உறுதிப்படுத்தவும், முகவரியை உறுதிப்படுத்தவும் உதவும். ஆனால் பிறந்த தேதி என்று வரும்போது மட்டும் ஆதார் அல்லாத வேறு ஒரு ஆவணத்தை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

பான் கார்டு விண்ணப்பிக்கும் போது பிறந்த தேதிக்காக, பிறப்புச் சான்றிதழ் அல்லது 10-ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, அரசு ஊழியராக இருந்தால் பணி அடையாள அட்டை உள்ளிட்டவற்றை காண்பித்து கொள்ளலாம்.

ஒரே நபர் பல்வேறு பெயர்களில் அல்லது தவறான பிறந்த தேதிகளைக் கொடுத்து பான் கார்டு பெறுவதை தடுக்கவே புதிய நடைமுறை ஏப்ரல் 1, 2026 முதல் நடைமுறைக்கு வந்தது.

மாற்றத்தின்படி பான் கார்டில் உள்ள விவரங்களும் ஆதாரில் உள்ள விவரங்களும் சரியாக பொருந்த வேண்டும். ஆனால் பிறந்த தேதியை உறுதிப்படுத்த மட்டும் மேலே சொன்ன மாற்று ஆவணங்கள் கட்டாயம் தேவைப்படும். பான் கார்டு புதிதாக விண்ணப்பிக்கவோ அல்லது திருத்தம் செய்யவோ பிறந்தநாள் சான்றிதழ் சமர்பிக்க வேண்டும்.






## திருக்குறள் குறள்-578

கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு



தம் தம் கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையவராக இருக்க வல்லவர்க்கு இவ்வுலகம் உரிமை உடையது.

## சிந்திக்க ஒரு நொடி



சுவாசத்தை கவனி
ஆயுள் கூடும்
வார்த்தையை
கவனி மதிப்பு
கூடும்

ராஜகோபாலன்.J
பெங்களூரு

## பங்குனி மாத பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீஅம்புஜவல்லி தாயார் சமேத ஸ்ரீ ஆதிவராக ஸ்வாமி



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம் பெரமண்டூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஅம்புஜவல்லி தாயார் சமேத ஸ்ரீ ஆதிவராக ஸ்வாமி பங்குனி மாத பௌர்ணமியை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலிக்கும் காட்சி. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காட்பாடி சட்டமன்றத் தொகுதி, த.மா.மு.தி.க சார்பில் இளம்பெண் வழக்கறிஞர் இந்து வில்லியம்ஸ் வேட்புமனுத் தாக்கல்!




**வேலூர், ஏப். 03:** வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் தமிழ் மாநில முற்போக்கு திராவிட கழகத்தின் (த.மா.மு.தி.க) சார்பில் அந்த கட்சியின் நிறுவனத் தலைவர் வில்லியம் சத்தியராஜ் மகள் இந்து வில்லியம்ஸ், 2ம் தேதி தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

## வேட்பாளர் J.J.எபினேசர் அவர்களின் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம்




சட்டமன்ற தேர்தலையொட்டி ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வெற்றி வேட்பாளர் J.J.எபினேசர் அவர்களின் அறிமுகம் மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் நேற்று முன்தினம் 01/04/2026 டோல்கேட் தங்கம் மாளிகையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

# பங்குனி உத்திர திருவிழா



**தஞ்சாவூர், ஏப்.03:** மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் நேற்று (01.04.2026) புதன்கிழமை பங்குனி உத்திரத்தை முன்னிட்டு காலை அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு திருமஞ்சனம், மதியம் 12 மணியளவில் தீப ஆராதனை, அதனைத் தொடர்ந்து ததி ஆராதனம் மற்றும் மாலை 7 மணியளவில் அலமேலு மங்கை தாயாருக்கு சிறப்பு சந்தனக்காப்பு அலங்காரம், தாயார் உள்புறப்பாடு, இரவு 8 மணியளவில் தீப ஆராதனை ஆகிய நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், தர்ம பரிபாலன கமிட்டி, அலமேலு மங்கை தாயார் மாதர் சங்கம் மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## பங்குனி உத்திரம் திருக்கல்யாண உற்சவம் சிறப்பு வழிபாடு



**திருவண்ணாமலை, ஏப்03:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் அமைந்திருக்கும் முருகப்பெருமானுக்கு, வள்ளி தெய்வானைக்கும் பங்குனி உத்திரம் திருக்கல்யாணம் உற்சவம் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க , முருகப்பெருமானுக்கும், வள்ளி தெய்வானைக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது. பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பங்குனி உத்திரம் திருக்கல்யாண உற்சவத்தில் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் பங்குனி உத்திரம்



**மதுரை, ஏப்.03:** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் 01.04.2026- பங்குனி உத்திரம் நேற்று மாலை அன்னை மீனாட்சி, அருள்மிகு சொக்கநாதப் பெருமான் திருவாப்புடையார் திருக்கோயிலில் இருந்து ரிஷபவாகனத்தில் கோயிலுக்கு எழுந்தருளல்

தேவே மதுரை நகர்ச் சிற்பரனே
எவ்வுயிர்க்கும் கோவே
எனையாளுங்கோவே என்-
நாவே உனைத்துதிக்கச் சிந்தை
உனை நினைக்கச் சென்னி
கனத்தில் உனைவணங்கக்
காண்- சொக்கநாத வெண்பா
சொக்கே நின் தாளே துணை

பங்குனி உத்திரத் திருவிழா. பொன்னனையாள் என்ற பக்தைக்கு தரிசனக்காட்சி தரும் சொக்கநாதர் மீனாட்சி.

அழகிய பொன்மயமான ஆலவாய் என்னும் மதுரையம்பதி திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மன்னன் மீனாட்சி சுந்தரேசுவரர் அவரை தரிசிக்க வருபவர்களின் துன்பம் நீங்கும் அத்தகைய கருணையாளன் திருஆலவாய் சொக்கநாதர் வர பங்குனி உத்திரம் புதன்கிழமை அன்று தென்கரையில் இருந்து வடகரையில் உள்ள ஆப்பனூர் என்னும் திருத்தலத்தில் பொன்னனையாள் என்ற பக்தைக்கு தரிசனக்காட்சி தரும் வகையில் எழுந்தருள்கிறார் நம்ம கிட்ட எந்த எதிர்பார்ப்பும் பார்க்கமா நமக்கு வேண்டியாத சிரிச்சுகிட்டே தர சாமியை பார்க்க வந்தாலே போதும் அவர் நம்மள பார்த்துக்குவாரு!

**வரலாறு :** மதுரை அருகில் திருப்பூவனம் என்ற ஊர் இருந்தது. (இப்போதைய பெயர் திருப்புவனம்) இங்குள்ள பூவனநாதர் கோயிலில் கணிகையர் எனப்படும் ஆடல்குலப் பெண்கள் சிவபெருமானை மகிழ்விக்கும் வகையில் நாட்டியாஞ்சலி நடத்தி வந்தனர். இவர்களில் ஒருத்தி பொன்னனையாள். கற்புக்கரசியான இந்தப் பெண்மணி தினமும் காலையில் தன் தோழிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களை எழுப்பிக்கொண்டு, வைகையில் சென்று நீராடுவாள். பூவனநாதரை வணங்கி, நாட்டியமாடுவாள். பின்னர், தன் இல்லத்திற்குச் சென்று, அங்குள்ள சிவனடியார்களுக்கு உணவு பரிமாறுவாள். அதன் பிறகே சாப்பிடுவாள். இப்படி தினமும் விரதம் அனுஷ்டித்த பெண் அவள். இந்தப் பெண்ணின் புகழை பாரோர் அறிய திருவுளம் கொண்டார் பரம்பொருளான பூவனநாதர். அவள் நடராஜர் சன்னதி முன்பே நாட்டியமாடுவாள். அப்போது அந்தச் சிலையை உற்றுப்பார்ப்பாள். என் இறைவா! பக்தர்கள் உன்னைப் பொன்னே, பொருளே என போற்றி மகிழ்கிறார்கள். அந்தப் பொன்னாலேயே உனக்கு சிலை செய்தால் என்ன? என்று வேண்டினாள். தங்கத்தில் சிலை செய்ய வேண்டுமானால், பெரும் பொருள் வேண்டுமே! இதைத் திரட்டும் சக்தியைத் தனக்கு தர வேண்டுமென அவள் பிரார்த்தித்தாள். பலநாளாக உருகி உருகி வைத்த இந்தக் கோரிக்கையை ஏற்க இறைவனும் முடிவு செய்துவிட்டார். ஜடாமுடி தரித்து, கமண்டலம், ஜபமாலையுடன் பொன்னனையாளின் வீட்டுக்கு ஒரு துறவி போல் எழுந்தருளினார். அங்கே சில அடியவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இவர் அவளது வீட்டுத்திண்ணையில் அமர்ந்திருந்தார். பொன்னனையாள் இல்ல சேவகியர், துறவியை இல்லத்துக்குள் வந்து உணவருந்துமாறு வேண்டினர். அவரோ, உங்கள் எஜமானியை வரச்சொல்லுங்கள், என்றார். ஆகட்டும், என்ற அவர்கள் பொன்னனையாளை அழைக்க உள்ளே சென்றனர். தோழிகள் உள்ளே சென்று பொன்னனையாளை அழைத்து வந்தனர். துறவியை வணங்கி எழுந்த அவளிடம், பெண்ணே! உன் மனதில் ஏதோ குறை ஒன்றுள்ளதை இங்கு நுழைந்தவுடனேயே தெரிந்து கொண்டேன். உன் குறையை தீர்த்தபின் நீ சிவனடியார்களுக்கு வழங்கும் அன்னத்தை ஏற்பதே முறையானது. குறையைச் சொல், என்றார். சுவாமி! நடராஜப்பெருமானுக்கு தங்கத்தில் சிலை வடிக்க வேண்டும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் இருக்கிறது. ஆனால், அதற்கு எவ்வளவோ செல்வம் வேண்டுமே! அதனால் அந்த ஆசை நிறைவேறாமல் போய்விடுமோ என அஞ்சுகிறேன். இதைத்தவிர வேறு எந்த குறையுமில்லை, என்றாள் பொன்னனையாள். மகளே! இதற்கா கவலைப்படுகிறாய். உன் வீட்டிலுள்ள செம்பு, வெள்ளி, பித்தளை, இரும்பு, ஈயப் பாத்திரங்களையெல்லாம் எடுத்து வா. அவற்றை பொன்னாக மாற்றித்தருகிறேன். அவற்றை உருக்கி நீ சிலை செய்யலாம், என்றார். பொன்னனையாள் இதை நம்புவதா, இல்லையா என்ற குழப்பத்திற்கு ஆளானாள். இருப்பினும் அவர் சொன்னதைச் செய்தாள். அவர் அவற்றில் திருநீறு பூசி, இவற்றை இன்று இரவு முழுவதும் நெருப்பில் வைத்துவிடு, என்றார். உடனடியாக அங்கிருந்து கிளம்பிவிட்டார். சுவாமி! தங்கத்தில் சிலை வடித்ததும் தாங்களும் அதனைக் காண வேண்டாமா? இங்கே சில நாட்கள் தங்குங்களேன், என்றாள். பெண்ணே! நான் மதுரையில் தான் வசிக்கிறேன். என்னை சித்தன் என்பார்கள். நீ பணிகளை முடி. பிறகு, எப்போது நினைக்கிறாயோ அப்போது வருவேன்,என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். பொன்னனையாள் அவர் சொன்னது போலவே பாத்திரங்களை தீயில் இட்டாள். மறுநாள் அவை பொன்னாக மாறியிருந்தது கண்டு அதிசயப்பட்டாள். வந்தது சாதாரண துறவியல்ல, அந்த ஈசனால் தான் இது முடியும் என பரவசப்பட்டாள். பூவனநாதர் கோயிலில் இருந்த நடராஜரைப் போலவே பொன்னில் சிலை வடித்தாள். துறவியை மனதால் நினைத்தாள். அவரும் அங்கு வந்து சேர்ந்தார். பொற்சிலையை தேரில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்து பூவனநாதர் கோயிலில் பிரதிஷ்டை செய்தாள். துறவியை சிவனாகவே போற்றி வணங்கினாள். பலகாலம் பொற்சிலையை வணங்கி இறைவனின் திருவடியை அடைந்தாள்.

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் துளசி மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர், ஏப். 03:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார். இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது. இதனை ஸ்ரீ க. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புதன்கிழமை பங்குனி உத்திரத்தை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. பின்னர் துளசி மலர்களால் அலங்காரம் செய்து வழிபாடு நடந்தது. இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. பக்தர்கள் தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.



இந்தியா கூட்டணியின் வேட்பாளர் திரு ஜே ஜே எபிநேசர் அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்ய போது உடன் வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் திருமதி மதுரமா கனி பாரூக் உடன் கூட்டணிக் கட்சி மாவட்ட தலைவர்கள்

## வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணியருக்கு பங்குனி உத்திர சிறப்பு பூஜை!



**வேலூர், ஏப்.03:** வேலூர் மாவட்டம், காட்பாடி தாராபடவேட்டில் கிராம தேவதை ஸ்ரீ சுந்தரி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயில் வளாகத்தில் விநாயகர், சுப்பிரமணியர் மற்றும் அனைத்து தெய்வங்களும் பரிவார மூர்த்திகளும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். இதில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு வள்ளி -தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியருக்கு காலை 7 மணி அளவில் சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் மற்றும் தீப, தூப ஆராதனைகள் நடந்தது. பங்குனி உத்திரத்தை முன்னிட்டு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசுப்பிரமணியர் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்தார். காலை 10 மணிக்கு சிறப்பு பூஜை நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீசுப்பிரமணியரை வழிபட்டனர். இந்த ஸ்ரீ சுப்பிரமணியருக்கு பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு சிறப்பு பூஜையில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான ஏற்பாடுகளை ஸ்ரீ சுந்தரி அம்மன் கோயில் நிர்வாகிகள் செய்திருந்தனர். இதையடுத்து இரவு 7.30 மணிக்கு மேல் ஸ்ரீ சுப்பிரமணியரை வழிபடச் சென்ற பக்தர்களுக்கு ஸ்ரீ சுந்தரி அம்மன் கோயில் பூசாரி பாஸ்கர் என்பவர் சாமி சன்னதியை பூட்டிய பூட்டை நான் திறந்து ஸ்ரீசுப்பிரமணியருக்கு தீபாராதனை காண்பிக்க மாட்டேன் என்று மறுப்பு தெரிவித்ததோடு சுந்தரி அம்மனை விட்டு அகல மாட்டேன் என்று திட்டவட்டமாக தெரிவித்தார். அவர் சொல்லி ஒரு ஐந்து நிமிடங்களுக்குள் யாரோ ஒருவர் அந்த கோயிலில் தரிசனத்திற்கு வருகை தந்தார். அவருக்கு வெள்ளி கவசம் பூட்டப்பட்ட விநாயகரை பூட்டை திறந்து காண்பித்து தரிசனம் செய்ய வைத்து, அடுத்து ஸ்ரீசுப்பிரமணியரிடம் அழைத்து வந்து அந்த ஸ்ரீசுப்பிரமணியருக்கு பூட்டு போடப்பட்டிருந்த பூட்டையும் திறந்து அதன் கதவுகளைத் திறந்து தீபாராதனை காண்பித்தார்.

இப்படி பாஸ்கருக்கு யார் இப்படி தான் தோன்றித்தனமாக செயல்படுவதற்கு வழிகாட்டினர் என்பது தெரியவில்லை. பணம் இருப்பவர்களுக்கு ஒரு தரிசனம், பக்தர்களுக்கு ஒரு தரிசனம் என பிரிவினை செய்கிறார். அதாவது ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு வைத்து பார்ப்பதற்கு இவருக்கு அதிகாரம் கொடுத்தது யார்? என்பது தெரியவில்லை.

இதை கோயில் நிர்வாகம் உரிய முறையில் விசாரித்து அவர் செய்தது முறையா? தவறா? இறைவன் முன் அனைவரும் சமம் என்பதை அவர் உணர்ந்து கொள்ளும்படி யார் கேட்டாலும் அவர்களுக்கு தரிசனம் செய்வதற்கு அனுமதி கொடுக்க மறுப்பதற்கு இவர் யார்? என்பதை அவர் புரிந்து கொள்ளும் அளவில் விளக்கம் தர வேண்டும். குறிப்பாக பாஸ்கர் இனிவரும் காலங்களில் ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும் என்பது பக்தர்களின் ஒட்டுமொத்த விருப்பமாக உள்ளது. பல பக்தர்களை ஏமாற்றத்துடன் திருப்பி அனுப்பிய பூசாரி பாஸ்கர் மீது அறங்காவலர் குழுவோ அல்லது கோயில் நிர்வாகமோ உரிய முறையில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்கள் மற்றும் பக்தர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக மாறியுள்ளது. சில பக்தர்கள் திடீர் போர்க்கொடியும்தூக்கியுள்ளனர். பூசாரி பாஸ்கர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாம் பொறுத்திருதான் பார்க்க வேண்டும்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## தேர்தல் களப்பணியில்...

### பா.ஜ.க. வேட்பாளர் பட்டியல் இன்று வெளியாகும்



தமிழ்நாட்டில் வரும் ஏப்ரல் 23-ந்தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4-ந்தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க., இந்த தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளது.

பா.ஜ.க.வுக்கு அ.தி.மு.க. ஒதுக்கிய 27 தொகுதிகளில் 5 தொகுதிகளை மாற்றித்தருமாறு பா.ஜ.க. மேலிட தலைவர்கள் வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது. தற்போதுவரை பா.ஜ.க. வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படாமல் இருந்து வரும் நிலையில், சென்னையில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம், பா.ஜ.க. வேட்பாளர் பட்டியல் வெளியீட்டில் தாமதம் ஏன்? என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "வேட்பாளர் பட்டியல் தாமதமில்லை. இந்த தாமதத்தால் பாதிப்பும் ஈல்லை. இன்று மத்திய மந்திரி பியூஷ் கோயல் சென்னை வருகிறார். அவர் வந்த பிறகு பட்டியல் வெளியாகும்.

தமிழ்நாட்டில் எந்த தனி மனிதருக்கும் பாதுகாப்பில்லை. பெண்களுக்கும் பாதுகாப்பில்லை, பத்திரிகையாளர்களுக்கும் பாதுகாப்பில்லை. தமிழ்நாட்டில் பள்ளிக்கூட வாசல்களிலேயே கஞ்சா விற்பனை செய்யப்படுகிறது. பிரசார பாடல் வெளியிட்டால் மட்டும் தி.மு.க. வெற்றி பெற்றுவிட முடியுமா? தி.மு.க. தேர்தல் அறிக்கை ஹீரோ அல்ல.. ஜீரோ. ஹீரோயின் அல்ல.. ஹெராயின்" என்று தெரிவித்தார்.

### புதுச்சேரி: அனுமதிக்கப்பட்ட 4 இடங்களில் 4-ம் தேதி பிரசாரம் செய்கிறார் விஜய்

புதுச்சேரி மாநிலத்தில் மொத்தம் உள்ள 30 சட்டசபை தொகு திகளுக்கு வாக்குப்பதிவு வருகிற 9-ந் தேதி நடைபெற உள் ளது. மே 4-ந்தேதி ஓட்டு எண்ணிக்கை நடக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 7 நாட்களே உள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. களத்தில் 294 வேட்பாளர்கள் உள்ளனர். அவர்கள் தொகுதிவாரியாக சூறாவளியாக சென்று ஓட்டு வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள். தேர்தல் நாள் நெருங்கி விட்டதால் முக்கிய தலைவர்கள் புதுவையை நோக்கி வந்து பிரசாரம் மேற்கொள்கிறார்கள்.

இந்த நிலையில், புதுச்சேரியில் தவெக மற்றும் கூட்டணி கட்சியான நேயம் மக்கள் கழகம் வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சி தலைவர் விஜய் வருகிற 5-ந் தேதி பிரசாரம் செய்வதாக இருந்தது. ஆனால், போலீசார் பாதுகாப்பு காரணங்களுக்காக ஒரு நாள் முன்னதாக, அதாவது 4-ந்தேதி (சனிக்கிழமை) பிரசாரம் செய்ய அனுமதித்துள்ளனர். கொக்குபார்க் சிக்னல், வெங்கடசுப்பா ரெட்டியார் சிலை சதுக்கம், சோனாம்பாளையம் சந்திப்பு, கூடப்பாக்கம் ஆகிய 4 இடங்களில் மட்டும் விஜய் பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. காலை 9 மணிக்கு தொடங்கி 4 மணி நேரத்திற்குள் பிரசாரத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் பேசும் இடங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகளை அனுமதிக்க கூடாது. தமிழ்நாட்டைச் சேர்ந்த ரசிகர்கள் தொண்டர்கள் வரக்கூடாது. அனுமதி கொடுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே வேன் மேல் நின்று பேச வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

### தன்னையும், மக்களையும் நம்பாதவர்தான் 2 தொகுதியில் போட்டியிடுவார்: விஜய் மீது சீமான் கடும் விமர்சனம்

கோவையில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போது தவெக தலைவர் விஜய்யை கடுமயாக விமர்சித்தார். சீமான் கூறியதாவது:

5 ஆண்டுகள் ஆட்சி செய்த தி.மு.க. ஆட்சி முடியும் நேரத்தில் உங்கள் கனவை சொல்லுங்கள் என்று கேட்கிறது. அப்படி என்றால் 5 ஆண்டில் மக்களுக்கு என்ன தேவை என்பது அவர்களுக்கு தெரியவில்லையா? ஸ்டாலின் நல்லாட்சி தந்திருந்தால் மக்களே உங்கள் ஆட்சி தொடரட்டும் என்பார்கள். அதனை நீங்கள் சொல்ல வேண்டியதில்லை.தி.மு.க, அ.தி.மு.க ஆகிய 2 கட்சிகள் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டு தேர்தல் அறிக்கை தயாரிக்கிறோம் என்கிறார்கள். மக்களின் குறைகள் என்னவென்றே தெரியாமல் தான் இதுநாள் வரை ஆட்சி நடத்தியுள்ளனர். நாங்கள் எப்போதும் தனித்தே பயணிக்கிறோம். எங்களது இலக்கை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். 4 முறை பொதுத்தேர்தலில் நின்று தோற்றிருக்கிறோம். ஆனாலும் மீண்டும், மீண்டும் உற்சாகத்தோடு பணியாற்றி வருகிறோம். நாங்கள் 100 சதவீதம் மக்களை நேசிக்கிறோம்.மக்களையும், தன்னையும் நம்பாதவர் தான் 2 தொகுதிகளில் போட்டியிடுவார். 2 முறை தேர்தலில் தோற்ற நான் தொடர்ந்து ஒரு தொகுதியில் மட்டுமே மீண்டும் களம் காண்கிறேன். காரணம் மக்கள் மீதுள்ள நம்பிக்கை. நான் வெற்றி பெறுவேன் என்று என்மீதுள்ள நம்பிக்கை என்றார்.

## திருச்சி தேர்தல் பிரசாரத்தில் தவெக தலைவர் ஜனநாயகன் குறித்து விஜய் பாடல் பாடி பிரசாரம்!

*ஜனநாயகன் படத்தை வெளியிடாமல் தடுத்தது குறித்து திருச்சி பிரசாரத்தில் தவெக தலைவர் விஜய் குறிப்பிட்டுப் பேசியுள்ளார்.*

*2026 சட்டப் பேரவைத் தேர்தலில் தவெக தலைவா விஜய் இரு தொகுதிகளில் போட்டியிடுகிறார். சென்னை பெரம்பூர் தொகுதியில் கடந்த திங்கள்கிழமை வேட்பு மனுதாக்கல் செய்த விஜய், திருச்சி கிழக்குத் தொகுதியில் அவா இன்று வேட்பு மனு தாக்கல் செய்தார்.*

*சென்னையில் இருந்து வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தனி விமானம் மூலம் திருச்சி வந்த விஜய், பாலக்கரை பகுதியிலுள்ள மாநகராட்சி 2-ஆவது மண்டல அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார்.*

*வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு மரக்கடை எம்ஜிஆர் சிலை அருகே வந்த விஜய், எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பிறகு அங்கு பிரசாரத்தில் ஈடுபட்டார்.*




*அப்போது பேசிய விஜய், கரூர் நிகழ்ச்சி, சூழ்ச்சின்னு பல பேர் சொல்றது மாதிரி, நமது கடைசிப் படமான ஜனநாயகன் அதான் நமது மனசுக்கு நெருக்கமான உங்களுடன் இருக்கும் பூர்வஜென்ம பந்தத்தை, அந்தப் படம், எங்கே இன்னமும் நெருக்கமாக மாற்றிவிடுமோ என்ற பயத்தில் எங்க, அது இந்த தேர்தலில் அவர்களுக்கு எதிரான ஆயுதமா மாறிடுமோன்னு ஒரு கூட்டு சூழ்ச்சி, அதனுடன் இன்னமும் பல பல சூழ்ச்சிகள் நடக்கின்றன. எனவே, உங்களுக்காக நீதி கேட்க வந்த எனக்கும் சேர்த்துத்தான் நீதி வேண்டும் என்று கூறினார்.*

*அத்தனை வலிகளையும் தாங்கிக்கொண்டு, உங்களுக்காக மட்டுமே வந்திருக்கிறேன், நான்கு முனைப்போட்டியோ எத்தனை முனைப்போட்டியோ, இங்கு இருமுனைப்போட்டிதான், ஒன்று தவெக, இன்னொன்று திமுக. எனவே எனக்கு ஒரே ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று விஜய் கூறினார்.*

*நான் தன்னந்தனி ஆளு, நீ ஏளனமா பாரு*

*கொஞ்சம் நவுந்தேனா.. இங்க எட்டு கோடிப்பேரு,*

*மிரளப்போது ஸ்டேட்டு, இங்கு விசில் சப்தம் கேட்டு*

*நல்லவங்க வாழ, நீ விசிலுக்கு அடி ஓட்டு,*

*கடைசி நம்பிக்கை மக்களைத் தேடி வருது*

*அதை இறுக்கிப்பிடிச்சி ஒரு வரலாறு எழுது*

*உங்க விஜய் நான் வரேன் என்று கூறி பிரசாரத்தை நிறைவு செய்தார்.*

*கடுமையான வெய்யில் வெளுத்து வாங்கியதால், குறைந்த நேரத்தில் தன்னுடைய பேச்சை நிறைவு செய்துகொள்வதாகக் கூறியே உரையைத் தொடங்கினார் விஜய்.*

## ராயபுரத்தில் ஜெயக்குமார் வேட்புமனு தாக்கல்



*தமிழக சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற ஏப்ரல் 23-ந்தேதி நடக்கிறது. தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 30-ந்தேதி தொடங்கியது. வருகிற 6-ந்தேதி வேட்பு மனு தாக்கலுக்கு கடைசி நாளாகும். அன்று மதியம் 3 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படுகிறது.*

*இதற்காக மாநிலம் முழுவதும் ஒவ்வொரு தொகுதியிலும் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகம் உருவாக்கப்பட்டு உள்ளது. அந்த அலுவலகங்களில் இன்று காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படுகிறது.*

*இந்நிலையில், சென்னை ராயபுரம் தொகுதியில் போட்டியிட 8-வது முறையாக இன்று வேட்புமனுவை அதிமுக வேட்பாளர் டி.ஜெயக்குமார் தாக்கல் செய்தார்.*

*ராயபுரதில் உள்ள மண்டல அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அதிகாரி பன்னீர்செல்வத்திடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார். 1991-ல் இருந்து தொடர்ந்து இத்தொகுதியில் ஜெயக்குமார் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## சேப்பாக்கம் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார் உதயநிதி

*தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23-ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, தவெக, நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது. திமுக கூட்டணியில் 70 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 164 தொகுதிகளில் திமுக நேரடியாக போட்டியிடுகிறது. மொத்தம் 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட உள்ளது.*

*இந்த சூழலில் திமுக சார்பில் போட்டியிடும் 164 வேட்பாளர்களின் பட்டியலை திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டிருந்தார். இதன்படி துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் 2-வது முறையாக போட்டியிட உள்ளார்.*

*இந்நிலையில் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேப்பாக்கத்தில் உள்ள அலுவலகத்தில் இன்று தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார். தமிழக சட்டசபை தொகுதிகளின் வரிசையின் பட்டியலில் சேப்பாக்கம் தொகுதி 19வது இடத்தில் உள்ளது.*



*இதுசென்னையின் முக்கியமான பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது.*

*கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தொகுதி மறுசீரமைப்பின் போது சேப்பாக்கம் மற்றும் திருவல்லிக்கேணி ஆகிய இரண்டு தனி தனி தொகுதிகள் இணைக்கப்பட்டு புதிய தொகுதியாக உருவாக்கப்பட்டது. இந்த தொகுதியில் எம்.ஏ .சிதம்பரம் கிரிக்கெட் மைதானம், சென்னை பல்கலைக்கழகம், எழிலகம் , பார்த்தசாரதி பெருமாள் கோவில், பெரிய மசூதி, பாரம்பரியமான மேன்ஷன்கள், சிந்தாதிரிப்பேட்டை மீன் சந்தை, புதுப்பேட்டை வாகன உதிரிபாகன கடைகள் போன்றவை சென்னையில் முக்கிய இடங்கள் பல இங்கு உள்ளன.*

*இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 23ஆம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி சேப்பாக்கம் சட்டசபை தொகுதியை பொருத்தவரை 79 ஆயிரத்து 412 ஆண்களும், 84 ஆயிரத்து 396 பெண்களும் மற்றும் 583 மூன்றாம் பாலினத்தவர்கள் என மொத்தம் ஒரு லட்சத்து 63 ஆயிரத்து 86 வாக்காளர்கள் உள்ளனர்.*

## திருச்சி கிழக்கில் விஜய் வேட்புமனு தாக்கல்!



*திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார்.*

*தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தலைவா விஜய் இரு தொகுதிகளில் போட்டியிடும் நிலையில், சென்னை பெரம்பூர் தொகுதியில் கடந்த திங்கள்கிழமை வேட்பு மனு தாக்கல் செய்தாா.*

*இந்த நிலையில், திருச்சி பாலக்கரை பகுதியிலுள்ள மாநகராட்சி 2-ஆவது மண்டல அலுவலகத்தில் திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விஜய் இன்று வழங்கினார்.*

*முன்னதாக, திருச்சி விமான நிலையத்தில் இருந்து பிரசார வாகனத்தில் நின்றபடி, சாலைவலமாக விஜய் வருகைதந்தார்.*

*வேட்பு மனு தாக்கல் செய்ததை தொடர்ந்து, பாலக்கரையில் இருந்து மரக்கடை எம்ஜிஆா் சிலை பகுதிக்குச் செல்லும் விஜய், வாகனத்தில் நின்றபடி பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.*

*மக்கள் சந்திப்பை தொடங்கிய போது, முதன்முதலில் திருச்சி மரக்கடை எம்ஜிஆர் சிலை அருகேதான் விஜய் பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## முதல்வர் ஸ்டாலினை விட பல மடங்கு சொத்து! வில்லிவாக்கம் வேட்பாளர் ஆதவ் அர்ஜுனா!

*தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், தனக்கு ரூ.6.25 கோடி மதிப்புள்ள சொத்துகள் இருப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தவெக தேர்தல் பிரசார -மேலாண்மை பொதுச் செயலரும் வில்லிவாக்கம் வேட்பாளருமான ஆதவ் அர்ஜுனாவுக்கு ரூ.197 கோடி மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.*

*நடிகராக இருந்து அரசியல்வாதியாக மாறியிருக்கும் தவெக தலைவர் விஜய், ஏற்கனவே பெரம்பூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்திருக்கும் நிலையில் தற்போது திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.*

*தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.*

*இந்த தேர்தலில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் உள்ளிட்டவை களம்கண்டுள்ளன.*

*தவெக சார்பில் சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிடும் தவெகவின் தேர்தல் பிரசார மேலாண்மைப் பொதுசெயலாளராக நியமிக்கப்பட்டுள்ள ஆதவ் அர்ஜுனா திங்கள்கிழமை வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.*



*அவர் தாக்கல் செய்த வேட்புமனுவுடன் இணைக்கப்பட்டிருந்த பிரமாணப் பத்திரத்தில், தனக்கு ரூ.197.52 கோடி மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அதில், அசையும் சொத்துகள் ரூ.180.03 கோடி என்றும் ரூ.162.14 கோடி மதிப்பிலான சொத்துகள் தன்னுடைய மனைவி டெய்ஸி அர்ஜுனா பெயரில் இருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த 2024 - 25ஆம் ஆண்டில் இவர் ரூ.11.10 கோடி வருவாய் ஈட்டியதாகவும் மனைவி ரூ.6.85 கோடி வருவாய் ஈட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும், தான் தொழிலதிபர் என்றும், அவருக்கு சொந்த மாக ரூ.2.29 கோடி மதிப்புள்ள 1,691 கிராம் தங்க நகைகள் இருப்பதாகவும், மனைவிக்கு ரூ.3.01 கோடி மதிப்புள்ள 2,225.62 கிராம் தங்க நகைகள், ரூ.6.16 கோடி மதிப்பிலான வைர நகைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பல்வேறு நிறுவனங்களிலும் ஆதவ் அர்ஜுனா ரூ.2.23 கோடி ரூபாயை முதலீடு செய்திருப்பதாகவும், இவருக்கு சொந்தமாக நான்கு வாகனங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## திருச்செந்தூரில் குவிந்த பக்தர்கள்



**திருச்செந்தூர், ஏப்.3:**

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பங்குனி உத்திர திருவிழா நடைபெற்று வருகிறது. இதையொட்டி அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், 5 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது. தொடந்து 6.30 மணிக்கு கோவிலில் இருந்து வள்ளி அம்பாள் தபசுக்காக, ஆனந்தவல்லி சமேத சிவகொழுந்தீஸ்வரர் கோவிலுக்கு எழுந்தருளினார்.

இரவு 108 மகாதேவர் சன்னதி முன்பு சுவாமி குமரவிடங்க பெருமானுக்கும், வள்ளியம்பாளுக்கும் வைதீக முறைப்படி திருக்கல்யாணம் நடக்கிறது.

பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் கடலில் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர். மேலும், ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரையாக வந்து காவடி எடுத்தும் வேல் குத்தியும் வேண்டுதல்களை நிறைவேற்றினர்.

## வடபழனி முருகன் கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா கோலாகலம்

**சென்னை, ஏப்.3:**

சென்னையின் புகழ்பெற்ற ஆன்மிகத் தலமான வடபழனி முருகன் கோயிலில், பங்குனி உத்திரத் திருவிழாவை முன்னிட்டு, கடந்த 31-ம் தேதி வரை லட் சார்ச்சனை பூஜைகள் நடைபெற்றன. ஹோமங்களும், ஆறு கால சிறப்புப் பூஜைகளும் ஆகம விதிப்படி நடத்தப்பட்டன.

முக்கிய நிகழ்வான பங்குனி உத்திரத் தினமான நேற்று அதிகாலையிலேயே நடை திறக்கப்பட்டு, முருகப்பெருமானுக்குப் பால், பன்னீர், இளநீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்களும், மகா தீபாராதனையும் நடைபெற்றன.

நேற்று அதிகாலை முதலே ஏராளமான பக்தர்கள் தங்களின் நேர்த்திக் கடனைச் செலுத்த பால்குடம் ஏந்தியும், அலகு குத்தியும் ஊர்வலமாக வந்து சுவாமி தரிசனம் செய்தனர். குறிப்பாக, சாலிகிராமம், தசரதபுரத்தில் இருந்து திரளான பெண்கள் பால்குடம் எடுத்து வந்து முருகனைத் தரிசித்தனர்.

பன்னீர் காவடி, புஷ்பக் காவடி ஏந்தி வந்த பக்தர்கள், "முருகனுக்கு அரோகரா, கந்தனுக்கு அரோகரா" என எழுப்பிய பக்தி முழக்கம், அப்பகுதி முழுவதும் எதிரொலித்தது.

விழாவின் சிறப்பம்சமாக, நேற்று இரவு 7 மணியளவில் முருகப்பெருமான் விசேஷ அலங்காரத்தில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வசந்த உற்சவம் நிறைவு



**திருப்பதி, ஏப்.3:**

திருப்பதி ஏழுமலையான் கோவில் பின்பக்கம் அமைக்கப்பட்ட வசந்த மண்டபத்தில் வருடாந்திர வசந்த உற்சவம் மூன்று நாட்கள் விமரிசையக நடந்தது.

முதல் மற்றும் 2-வது நாளில் மலையப்ப சுவாமி தனது உபய நாச்சியார்களுடன் பங்கேற்ற நிலையில், இறுதி நாளான நேற்று உற்சவர்களான ஸ்ரீதேவி, பூதேவி சமேத மலையப்ப சுவாமி மற்றும் சீதா, ராமர், லட்சுமணர், ஆஞ்சநேயர் மற்றும் ருக்மனி சமேத ஸ்ரீகிருஷ்ணர் ஏழுமலையான் கோவிலில் இருந்து தனித்தனி தங்கத்திருச்சி வாகனங்களில் எழுந்தருளி நான்கு மாடவீதிகளில் ஊர்வலமாக சென்று வசந்த மண்டபத்தை அடைந்தனர்.

வசந்த மண்டபத்தில் ஒரே இடத்தில் தனித்தனி மேடைகளில் உற்சவர்கள் எழுந்தருளினர். மதியம் 2 மணியில் இருந்து மாலை 4 மணி வரை உற்சவர்களுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம், பால், தயிர், தேன், இளநீர், பஞ்சாமிர்தம் போன்ற சுகந்த திரவியங்களால் ஸ்நாபன திருமஞ்சனம் எனப்படும் அபிஷேகம் செய்யப்பட்டது.

அதன்பிறகு மாலை வசந்த மண்டபத்தில் இருந்து புறப்பட்டு கோவிலை அடைந்தனர். இதோடு வருடாந்திர வசந்தோற்சவம் நிறைவடைந்தது.

வசந்த உற்சவத்தை முன்னிட்டு கோவிலில் கல்யாணோற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை ஆகியவை ரத்து செய்யப்பட்டன.

மேலும் கோவிலில் ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி அன்று இரவில் நடக்கும் கருட சேவை (கருடவாகன வீதிஉலா) ரத்து செய்யப்பட்டது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் திருமலை பெரிய ஜீயர் சுவாமி, சின்ன ஜீயர் சுவாமி, பேஷ்கார் ராமகிருஷ்ணா மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள், பக்தர்கள் கலந்து கொண்டனர்.




# பங்குனி உத்திர திருவிழா: பம்பை ஆற்றில் அய்யப்ப சுவாமிக்கு ஆராட்டு



**சபரிமலை, ஏப்.3:**

சபரிமலை அய்யப்பன் கோவிலில் பங்குனி உத்திர ஆராட்டு திருவிழா கடந்த 23-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் வழக்கமான பூஜையுடன் உத்சவ பலி சிறப்பு வழிபாடு நடந்தது.

9-ம் திருவிழாவான நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு சரம் குத்தியில் பள்ளிவேட்டை சடங்கு நடைபெற்றது. விழாவின் நிறைவாக நேற்று பகல் 11.45 மணிக்கு பம்பை ஆற்றில் அய்யப்பனுக்கு ஆராட்டு நடைபெற்றது.

முன்னதாக காலை 9 மணிக்கு நடைபெற்ற ஆராட்டு பலிக்கு பின், சன்னிதானத்தில் இருந்து ஆராட்டு ஊர்வலம் புறப்பட்டு பம்பை ஆற்றுக்கு வந்தது.

அங்கு திரளான பக்தர்கள் முன்னிலையில் அய்யப்பனுக்கு ஆராட்டு நடத்தப்பட்டது.

மதியம் 3 மணிக்கு சுவாமி ஊர்வலம் பம்பை கணபதி கோவிலில் இருந்து புறப்பட்டது.

இந்த ஊர்வலம் சன்னிதானம் சென்றடைந்ததும் மாலை 6 மணிக்கு திருவிழா கொடி இறக்கப்பட்டு, 10 நாள் திருவிழா நிறைவு பெற்றது. மேலும் இரவு 10 மணிக்கு கோவில் நடை அடைக்கப்பட்டது.

# பழனியில் கோலாகலமாக நடைபெற்ற தேரோட்டம்

**பழனி, ஏப்.3:**

முருகப்பெருமானின் 3-ம் படைவீடான பழனி முருகன் கோவிலில் தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழாக்கள் வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகின்றன.

அவ்வகையில் இந்த ஆண்டின் பங்குனி உத்திரத் திருவிழா கடந்த மாதம் 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாட்கள் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை திருக்கல்யாணம் நேற்று நடைபெற்றது.

இந்நிலையில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு இன்று அதிகாலை 4 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது. பின்பு 4.30 மணிக்கு முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை சண்முகநதியில் தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து மதியம் 11.30 மணிக்கு முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானை திருத்தேருக்கு எழுந்தருளினர்.

மாலை 4.30 மணிக்கு விநாயகர், அஸ்திரதேவர் எழுந்தருளிய சிறிய தேர்களுக்கு தீபாராதனை காட்டப்பட்டு தேர் இழுக்கப்பட்டது. பின்னர் பெரிய தேரில் எழுந்தருளிய முத்துக்குமாரசுவாமி, வள்ளி-தெய்வானைக்கு சிறப்பு அலங்காரம், தீபாராதனை செய்து தேர் வடம் பிடிக்கப்பட்டது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு, ''வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா, வீரவேல் முருகனுக்கு அரோகரா'' என்று சரண கோஷம் எழுப்பியபடி தேர் இழுத்தனர்.

கிரி வீதியில் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், திருத்தேரில் வலம் வந்த சுவாமியை தரிசனம் செய்தனர். ஏராளமானோர் பால் குடம், காவடி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தேரோட்டத்தை முன்னிட்டு பழனியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 4ம் தேதியன்று கொடியிறக்கத்துடன் பங்குனி உத்திரத் திருவிழா நிறைவடைகிறது.

தொடர்ந்து வள்ளி-தெய்வானையுடன் சக்திவேல் முருகன் மணக்கோலத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் பாணவரம் மற்றும் சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம், அன்னதானம் வழங்கப்பட்டது.



## நலம் தரும் மருத்துவம்

# இரத்த சோகையை விரட்ட...

நெல்லிக்காய் சாறு மற்றும் பீட்ரூட் சாறு குடிப்பதன் மூலம் இரத்த சிவப்பணுக்களை அதிகரிக்க முடியும். இதனால் இரத்த சோகையைத் தடுக்க முடியும். மேலும், இதன் மூலம் உடலுக்கு அதிக ஆக்ஸிஜன் கிடைக்கும்.

இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆப்பிள் சாப்பிடுவதன் மூலம் இதனைத் தடுக்க முடியும்.

2 அல்லது 3 தேக்கரண்டி வெந்தயத்தை ஊறவைத்துக் கொள்ளுங்கள். ஊறவைத்த வெந்தயத்தை அரிசியுடன் சேர்த்து சமைத்து சாப்பிடுங்கள். இதன் மூலம் இரும்புச் சத்து குறைபாடு நீங்கும்.

அரை கப் பீட்ரூட் சாறுடன், அரை கப் ஆப்பிள் சாறு மற்றும் அதனுடன் சிறிது தேன் சேர்த்து அந்த ஜூஸை அருந்திப் பாருங்கள். உங்களுக்கே வித்தியாசம் தெரியும்.

கருப்பு எள்ளை வெந்நீரில் 2 மணி நேரம் ஊற வைத்து பேஸ்ட் போல் செய்து அதனுடன் தேன் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளுங்கள். அதனை பாலில் கலந்து தினமும் அருந்தவும்.

இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தினமும் ஒரு மாதுளம்பழத்தை சாப்பிடுங்கள்.

அதேபோல் வாழைப்பழமும் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்யும்.

உடலை ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் வைத்து இருக்க தினமும் உடற்பயிற்சி அல்லது யோகா செய்யுங்கள்.

தினமும் உணவில் கீரை, பட்டாணி, பீன்ஸ், திராட்சை, ஆப்ரிகாட், பருப்பு வகைகள், பூசணி விதைகள், குயினோவா, ப்ரோக்கோலி, டோபு, முழு தானியங்கள் மற்றும் பச்சை காய்கறிகளை சாப்பிடுங்கள்.

தினமும் 10 அல்லது 15 கருப்பு உலர் திராட்சையை ஊறவைத்து மறுநாள் காலையில் உட்கொள்வது ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கவும், மலச்சிக்கலையும் போக்க உதவும்.

இரும்புச்சத்து நிறைந்த உணவுடன் எலுமிச்சம்பழம், ஆரஞ்சு, தக்காளி போன்றவற்றில் இருக்கும் வைட்டமின் சி இரும்புச் சத்தை உறிஞ்ச உதவுகிறது.

# வந்துவிட்டது அதிநவீன ஸ்மார்ட்கிளாஸ்: கையில் போன் இல்லாமலேயே கால் பேசலாம் மெசேஜ் அனுப்பலாம்...

இன்றைய டெக்னாலஜி உலகத்தில் எல்லாமே ரொம்ப வேகமாக ஸ்மார்ட்டாக மாறிக்கொண்டு வருகிறது. அந்த வகையில், எப்போதுமே பவர் கிளாஸ் அணிந்து கஷ்டப்படும் மக்களுக்காகவே ஒரு சூப்பரான மாஸ்டர் பிளானை கையில் எடுத்துள்ளது பிரபல META நிறுவனம். இதுவரை ஸ்மார்ட் கண்ணாடிகளில் லென்ஸ்களை மட்டும் மாற்றிக்கொள்ளும் வசதி தான் இருந்தது.

ஆனால் முதல் முறையாக, பார்வை குறைபாடு உள்ளவர்களுக்காகவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட புதிய AI SMART GLASSES மாடல்களை மெட்டா களம் இறக்கப் போகிறது.




இது சாதாரண மக்களிடம் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதை பார்க்கலாம் வாங்க.

### புதிய மாடல்களின் ரகசியங்கள்!

எஸ்சிலர் லக்ஸோடிகா (ESSILOR LUXOTTICA) என்ற முன்னணி நிறுவனத்துடன் கைகோர்த்து இந்த அட்டகாசமான கண்ணாடிகளை மெட்டா உருவாக்கியுள்ளது. அடுத்த வாரம் மார்க்கெட்டிற்கு வரவுள்ள இந்த கிளாஸ்களுக்கு ஸ்க்ரைபர் (SCRIBER) மற்றும் பிளேசர் (BLAZER) என செல்லப் பெயர்கள் வைத்துள்ளனர். வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சதுரம் மற்றும் உருண்டை என இரண்டு விதமான பிரேம் டிசைன்களில் இது கிடைக்கப் போகிறது. இதில் லேட்டஸ்ட் தொழில்நுட்பமான WI-FI 6 பயன்படுத்தப்பட்டுள்ளதால், ஏஐ செயல்பாடுகள் மற்றும் டேட்டா ட்ரான்ஸ்பர் வேகம் சும்மா ஜெட் வேகத்தில் இருக்கும்.

### வாய்ஸ் கமாண்ட் மற்றும் ஸ்மார்ட் அம்சங்கள்!

இந்த கண்ணாடியில் உள்ளே ஒளிந்திருக்கும் அதிநவீன கேமரா மற்றும் மைக்ரோஃபோன்கள் தான் இதன் மிகப்பெரிய பலம். கையில் மொபைல் போன் இல்லாமலேயே, "HEY META" எனச் சொல்லி வாய்ஸ் கமாண்ட் மூலமாக யாருக்கு வேண்டுமானாலும் போன் பேசலாம், மெசேஜ் அனுப்பலாம்.

அதுமட்டுமில்லாமல், வெளிநாட்டவர்களிடம் பேசும்போது நமக்குத் தேவையான மொழியில் உடனுக்குடன் மொழிபெயர்த்துத் தரும் REAL-TIME TRANSLATION வசதியும் இதில் இருக்கிறது. முந்தைய மாடல்களை விட இதன் பிரேம் எடை மற்றும் லென்ஸ் தடிமன் குறைவு என்பதால், நாள் முழுவதும் அணிந்திருந்தாலும் முகத்தில் எந்த ஒரு வலியும் இருக்காது. பேட்டரியின் ஆயுள் விஷயத்திலும் இது பக்காவாக அப்டேட் செய்யப்பட்டுள்ளது.

### மெட்டாவின் வியூகம்!

உலகம் முழுவதும் பல கோடி மக்கள் சாதாரண கண்ணாடிகள் மற்றும் காண்டாக்ட் லென்ஸ்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்களைக் குறிவைத்து தான் மெட்டாவின் சிஇஓ மார்க் ஜுக்கர்பெர்க் இந்த பெரிய வலையை வீசியுள்ளார். இனி வரும் காலங்களில் மக்கள் அணியும் அனைத்து கண்ணாடிகளுமே ஏஐ தொழில்நுட்பம் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்பதுதான் அவரது மிகப்பெரிய ஆசை. இதற்காக, பெரிய மால்களில் மட்டும் இல்லாமல், சாதாரண ஆப்டிகல் கடைகளிலேயே இந்த ஸ்மார்ட் கிளாஸ்கள் விற்பனைக்கு வரவுள்ளன.

ஒரு காலத்தில் ஏஐ தொழில்நுட்பம் என்பது பெரிய பணக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தும் ஒரு ஆடம்பர பொருளாக பார்க்கப்பட்டது. ஆனால் மெட்டாவின் இந்த அதிரடி நடவடிக்கையால், அது பார்வை குறைபாடு உள்ள சாமானிய மக்களின் அத்தியாவசியத் தேவையாக மாறப் போகிறது. ஸ்மார்ட் கிளாஸ் சந்தையில் ஆப்பிள் நிறுவனம் அடுத்த ஆண்டு என்ட்ரி கொடுக்க நினைத்தாலும், மெட்டா இப்போதே பல படிகள் முன்னேறி ஒட்டுமொத்த மார்க்கெட்டையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட்டது. இந்த ஏஐ கண்ணாடிகள் நிச்சயம் தொழில்நுட்ப உலகில் ஒரு மிகப்பெரிய மைல்கல்லாக அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# ஒருநாள் கூத்து !



கட்டிலில் சுவர்ப் பக்கம் ஒருக்களித்தபடி படுத்திருந்தார் சரோஜா. 80 வயதாகிறது. அன்று காலை சீக்கிரமே எழுந்து பல் விளக்கி குளித்துமாகிவிட்டது . கண்களை இடுக்கிக் கொண்டு பக்கத்து மேஜையில் இருந்த சின்ன டைம்பீஸை கையில் எடுத்துப் பார்த்தபோதுதான் மணி இன்னும் ஐந்துகூட ஆகவில்லை என்பது தெரிந்தது.

கணவர் உயிரோடு இருந்தவரை சமையலறை சரோஜாவின் ஆதிக்கத்தில் இருந்தது. மருமகளைகூடமாட ஒத்தாசைக்கு மட்டும் வைத்துக் கொள்வார். காஃபி போட்டு, சாதம் வடிப்பது முதல் பொரியல், சாம்பார், கூட்டு, ரசம் செய்வது அனைத்தும் சரோஜாவின் கைவண்ணத்தில் இருக்கும். உப்பு, காரம் அளவோடு இருக்கும்.கூடவோ அல்லது குறைவோ இல்லாமல் கன கச்சிதமான சுவையோடு இருக்கும். சில சமயம் மருமளின் சமையலும் இருக்கும். ஆனால் காரம் கொஞ்சம் தூக்கலாக இருக்கும் . சுவை குறையாது. கணவர் தவறிப்போனதும் மனசு குன்றிப்போய் உடல் தளர்ந்து ஒடுங்கிப்போனார் சரோஜா. நாளடைவில் மூப்பின் காரணமாகவும் கொஞ்சம் கொஞ்சமாக தன் நடவடிக்கைகளைக் குறைத்துக் கொண்டார். ஹாலுக்கும் தன் அறைக்கும் மட்டும் அவரின் நடமாட்டம் சுருங்கிப்போனது. சில சமயம் மன அழுத்தத்தால் கண்களில் நீர் சுரக்கும். புடவைத் தலைப்பால் துடைத்துக் கொள்வார்.

" அம்மா..." மகன் ரகுவின் குரல்கேட்டு மெதுவாக எழுந்து உட்கார்ந்த சரோஜா அப்படியே சுவற்றில் சாய்ந்துகொண்டார்.

" இந்தாம்மா..காஃபி..சூடா இருக்கு சாப்பிடு." கையில் வைத்திரு ந்த காஃபி டம்ளருடன் டபராவையும் சேர்த்து நீட்டினான். முகத்தில் அசட் டுச் சிரிப்பு வழிந்தோடியது ! டம்ளரையும் டபராவையும் வாங்கி க்கொண்டவர் நாசியில் காஃபியின் வாசம் மோதியது. முதன் முறையாக இறங்கிய டிகாக்ஷனில் திக்கான பால் மற்றும் அளவோடு சர்க்கரையும் சேர்த்து கலக்கப்பட்ட காஃபி என் பது புரிந்துபோனது. ஒரே மடக்கில் காஃபியை விழுங்கிவிட்டுடமளரையும் டபராவையும் திருப்பிமகனிடம் தந்தார் சரோஜா.

அவற்றை வாங்கிக்கொண்ட ரகு, " இன்னிக்கு என்ன டிஃபன் தெரி யுமா?" என கேட்டான். " ஓ...தெரியுமே !" என்ற சரோஜா " காஞ்சிபுரம் இட்லி கொத்தமல்லி சட்னி!" என்றார்.

" பரவாயில்லையே ! நல்ல நியாபக சக்திம்மா உனக்கு !" என்றான் ரகு. " டேய்...அதோட லஞ்ச் , டின்னர் என்னன்னு சொல்லட்டுமா?"

மெல்லச் சிரித்தபடி, " சொல்லும்மா !" என்றான் ரகு.

" மத்தியானம் சாப்பாட்டுக்கு எனக்குப் பிடிச்ச வெண்டைக்காய் மோர்க்குழம்பு, பீன்ஸ் பருப்புசிலி, எலுமிச்சை ரஸம்....ராத்திரிக்கு சப்பாத்தி, டால் ! சரியா ?"

" ரொம்ப சரிம்மா ! நீ படுத்துக்கோ" எனக் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான் ரகு.

அவன் போவதை பார்த்து பெருமூச்சு விட்டபடி மீண்டும் படுத்துக் கொண்டார் சரோஜா. ' ஹூம் ! இன்று நேற்றா நடக்கிறது? பல நாட்களாக நடக்கும் கூத்தல்லவா? அன்று ஒரு நாள் மட்டும் விழுந்து விழுந்து நடக்கும் உபசரிப்பு ! காரணம்....

அன்று முதல்தேதி. போஸ்ட் ஆஃபிஸ் சென்று பென்ஷன் பணம் ரூபா 30000/- வாங்க வேண்டும்.வாங்கிய ரூபாய் நோட்டுகளை ஆசை யுடன் தடவிப் பார்த்துக் கொள்வார் . பிறகு, ரகுவின் கையில் அப்படியே நோட்டுகளைக் கொடுத்து விடுவார். அவனும் இளிப்புடன் அவற்றை வாங்கிக் கொள்வான்.அதற்கு தான் இத்தனை தடபுடல்கள்! ரகு , தன் வயிற்றில் பிறக்காவிட்டாலும் இந்த அளவுக்காவது கொஞ்சம் அன்புடன் நடந்து கொள்கிறானே என்று தன்னைத் தானே தேற்றிக்கொள்ளவும் செய்வார் சரோஜா.



- **வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# சுயம்வரம் 2036



*" சமபோஜன பந்தியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பிரமிளா.. ஏதேட்சையாக நிமிர்ந்து எதிர்பந்தியை பார்த்தாள். அகல மைதானத்தைச் சுற்றி அகழி வெட்டி அதில் தாழம்புதர்கள் வளர்த்த கணக்கான மண்டையோடு ஒருவன் தன்னை குறுகுறுப்பாக ரசித்து அசடுவழிவதைப் பார்த்து முகம் சுருங்கி தலை கவிழ்ந்து கொண்டாள்.

"சீ.. டொக்கு விழுந்த ஆமை மண்டைய வச்சுகிட்டு ஜொள் விடுறதைப்பாரு.."என்று தனக்குள் பேசிக்கொண்டவள்.. நாம் எங்கு எதற்கு வந்திருக்கிறோம்.. இந்த சமபந்தியின் நோக்கமும் இதுதானே.. என்று சுதாகரித்து நாக்கைக்கடித்தபடியே தன்னிலைக்கு வந்தாள் பிரமிளா.அவளது நினைவுகள் இரண்டு மணி நேரத்துமுன் பயணித்து காட்சிகளாக்கியது.

****

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அதிகாலை முதலே விழாக்கோலம் கொண்டு பரபரப்பாய் இயங்கிக்கொண்டிருந்தது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பிரதி திங்கள் கிழமைகள் ஆட்சியர் மக்களிடம் நேரடியாக குறைகளைக்கேட்டு மனுக்களை பெற்றுக்கொள்வதும்.. அதை உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு குறைகளை நிவர்த்தி செய்வதும் நடைமுறை வழக்கம். மாதத்தில் ஒரு திங்கள் நலத்திட்ட உதவிகள் வழங்குவார்கள். ஆனால் சமீப காலமாக வேலையில்லா திண்டாட்டத்தை விட வெகுண்டெழுந்து நாட்டின் வளர்ச்சியை குலைக்க மார்தட்டி நிற்கிறது 'வரன் இல்லா திண்டாட்டம்'எனும் பூதம்.

இது சமூகத்தில் விரக்தி மனநிலையை வளர்த்து வேலைக்கு செல்லாத மனநிலை.. சமூகத்து எதிரான குற்றங்கள்.. போதைப்பழக்க சீரழிவு.. பொருளாதார மற்றும் உற்பத்தி மந்தம் என சிக்கல்களை ஏற்படுத்த.. அவைகளை களைந்து சீர்படுத்த அரசு முன்னெடுப்பு திட்டத்தை செயல்படுத்தத்தான் இந்த பரபரப்பு.

மீடியாக்களின் வெளிச்ச சிதறல்களுக்கு இடையே கூட்டம் கூட்டமாய் முது இளைஞர்களும்.. பெண்களும் நாற்காலிகளை நிறைத்தனர்.

சரியான நேரத்துக்கு வந்த மாவட்ட ஆட்சியர்.சமூக நலத்துறை அலுவலர்கள்.. வருவாய்த்துறை அலுவலகர்கள்.. ஆகியோர் மேடையில் அமர்ந்தனர். விழா தமிழ்த்தாய் வாழ்ந்தோடு தொடங்க.. ஒலிவாக்கியை பிடித்த ஆட்சியர்.. "முதலில் நீக்கமற நிறைந்திருக்கும் நல் நோக்கத்திற்காக குழுமிருக்கும் அனைவரையும் வரவேற்கிறேன்.. நான் பேசிகிட்டே இருக்கலாம்.. அரசோட நல் முன்னேடுப்பை பற்றி.. சமூக ஆர்வலர்களின் ஒருங்கிணைப்பு.. அயராத அறிவுறுத்தல்.. இப்படி.. அதுக்கான மேடை இதுவல்ல... இங்கே சுயம்வரம் நாடி வந்திருக்கும் நீங்கள்.. மனதின் சுமையை இறக்கி வைத்துவிட்டு.. வெற்று வெளிச்ச மனதோடு உங்கள் வாழ்க்கையை சிறகாக சுமந்து மிதந்து செல்ல வேண்டும் என்றே நாங்கள் நினைக்கிறோம்.. தயவு செய்து தயக்கம் களைந்து தங்கள் கருத்துகளை சொல்லுங்கள்..!"ஆட்சியர் முடிக்க... சமூக நல அலுவலர்கள் ஒலிவாங்கிகளை விநியோகித்தனர்.

கையில் மைக்கை பற்றிய பிரமிளா.."எல்லோருக்கும் வணக்கம்.. நான் பிரமிளா.. ஒரு நடுத்தர கிராமத்துப் பெண். படிப்பு எம். காம். இன்னிக்கு சூழல்ல இதொன்னும் பெரிய படிப்பெல்லாம் இல்ல.. அது இப்ப உணர்கிறேன்.. ஆனா இருபது வருசத்துக்கு முன்ன ரொம்ப அகங்காரமா உணர்ந்தேன்"

இடமறிந்த ஆட்சியர்.. "அம்மா.. உங்க கல்விக்காலங்களில் ஆசிரியர்கள் பிரம்பை தொடாம பாடம் நடத்தின காலம். அதனால எல்லாரும் டிகிரி வாங்க முடிஞ்சுது. அரசும் கல்விக்காக ஏராளமான உதவிகளை வழங்கியது. ஆனா அதனால கல்வியின் தரத்துல உள்ளார்ந்த போதாமை இருந்துச்சு.. அதையும் நாம பார்க்கனும்.. அதாவது 'முறுக்கி வளர்க்காத மீசையும்.. அடிச்சு வளர்க்காத பிள்ளையும் அழகாக வளராது' என்பது கிராமத்து சொலவடை. மேல சொல்லுங்கம்மா.."

"ஐயா.. எனக்கு இப்ப நாற்பத்தி ரெண்டு வயசு ஆகுதுங்க. எஞ்சோட்டுக்காரிக எல்லாம் கல்யாணம் முடிஞ்சு.. புள்ளக்குட்டி.. பெத்து.. அதுகளுக்கு சடங்கு நடத்தி சம்பந்தம் பேச காத்திருக்காளுங்க.. "கண்ணீரை துடைத்துக்கொண்டு தொடர்ந்தாள் பிரமிளா.

"ஐயா.. நான் சுயம்வரத்துக்கு வந்ததின் நோக்கமே எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாம.. துவண்டா சாஞ்சுக்க ஒரு தோள்.. அரவணைக்க ஒரு கை.. மனசுக்கு ஒத்தடம் கொடுக்க ஒரு இணக்கமான வார்த்தை.. அது போதும்.. குறைகளை எல்லாம் நிறைகளாக மாத்தி மிச்ச வாழ்க்கையை சமுதாயத்துக்கு ஏதாவது ஒத்தாசையா வாழ்ந்து கழிக்கும் வலிமையை இவ்வளவு நாள் பட்ட வலி தந்திருக்கு.."

கூட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக விம்மல்கள் வெடித்து கிளம்ப தொடர்ந்தாள் பிரமிளா.."இந்த தலை நரைச்ச பொம்பள ஆம்பள கிறுக்கு புடுச்சி இங்க வரல.. இது என் தனிப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினையா.. சமூகப்பிரச்சினையா மாத்துன என்னைப் பெத்தவங்களோட ஈகோ.. அதை ஊதிப் பெரிதாக்கி குளிர்காய்ந்த உறவுகள்.. கண்டும் காணாமல் கடந்து போன சுற்றம்.. எல்லாத்தும் பதிலடி கொடுக்குற வாய்ப்புக்காக தான் நான் வந்திருக்கேன்"

"இருபது வயசுல என் ஜாதகத்தை கையில் எடுத்த என் குடும்பம்.. எத்தனை எத்தனை நிராகரிப்புகளுக்கு பிறகு என்னை நிராதரவானவளாக நிறுத்தியிருக்கு தெரியுமா... வீடு மாடி வீடாக இல்ல.. இருந்தால் நவீன புழங்கு வசதிகள் இல்ல.. அரசாங்க உத்தியோகம் இல்ல.. இருந்தாலும் சம்பளக்கவர் கனமாக இல்ல.. ஆள் கலரா இல்ல.. இருந்தாலும் களையாக இல்ல.. மாமியார் இருக்காங்க... ரெண்டொரு வருசத்துல வடக்கே போறமாதிரி இல்ல.. நாத்தனார் இல்ல நல்ல இடந்தான்... மாமனார் கேரக்டர் சரியா தெரியல.. இப்படியே தட்டிக்கழிச்சி.. தட்டிக்கழிச்சி.. இப்ப ரெண்டு பேரும் மூலையில முடங்கியாச்சு.. அவங்களுக்கு சேவை செஞ்சு என் காலமும் போச்சு.. திடீருன்னு அவங்களுக்கு பிறகு என்நிலமை என்னன்னு திகைச்சப்போ தான்.. சரி இங்க வரனும்னு தோணுச்சு... ஏன் சார் தன் வாழ்க்கைய தானே தேடிக்காம.. நம்ம பெத்தவங்க நமக்கான வாழ்க்கையை அமைச்சு தருவாங்கன்னு நம்புன எங்களை அவங்களோட ஈகோவுக்கு இரையாக்கிட்டாங்களே.. நாங்க பெத்தவங்களை நிராகரிக்கவும் முடியாம.. சமுகத்துல தலைநீட்டி வாழவும் முடியாம பெரிய கொடுமை சார்..."கூட்டத்தில் ஓவென அழுகை ஓலங்கள் எழ.. பதறி... பற்றினார் ஒலிவாங்கியை ஆட்சியர்..

"வேணாம்... கண்ணை தொடச்சுக்குங்க.. உங்க வாழ்க்கையில இதுதான் விரக்தியில விட்ட கடைசி கண்ணீராக இருக்கப்போகுது... இங்க முதல்ல அனைவருக்கும் சமபோஜன பந்தி நடைபெறும்.. வயிறார சாப்பிடுங்க.. நட்போட மனம்விட்டு பேசுங்க.. அவர்களுக்கான தோழமையை தேர்ந்து இங்கே சமூகநல அலுவலகங்களிடம் தெரிவியுங்கள்.. பதிவு செய்து தங்களுக்கு திருமணத்திற்கான அரசின் சீர்வரிசை பொருட்கள்.. தங்களுக்கான எதிர்கால வழிகாட்டல்.. தொழில் வாய்ப்பு முதலியவற்றிக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.. அனைவருக்கும் வாழ்த்துக்கள்"என்றார் ஆட்சியர்.

***

இதோ சமபோஜன அரங்கில் தான் எதிர்வரிசை முது இளைஞரின் பார்வையால் நினைவுச்சுழற்சிக்குள் சிக்கி மீண்டு வந்த பிரமிளா.."பரவாயில்ல.. இந்த வெளுத்த மடத்தாழை மண்டைக்காரியையும் பார்த்து இளிக்க ஒரு இளிச்சவாயன் கிடைச்சானே... ஒரு 'விக்' வாங்கி மாட்டிவிட்டா நம்மாளு சும்மா விக்ரம் மாதிரி இருப்பாரு.. போதும் போ..."தனக்குள் புலம்பியபடி ஆயாசம் துறந்து பாயாச குவளையை கையில் எடுத்தாள் பிரமிளா.!*

**அரும்பூர். க. குமாரகுரு,**
மயிலாடுதுறை

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -5)





- **எம்.எல்.பிரபா**
ஆதம்பாக்கம்,
சென்னை 88

## கொடிய அரக்கி பூதனா!!

கோகுலத்தில் ஓர் நாள் (பழம் விற்பவள்) பழக்காரி கூடை நிறைய பழங்களோடு 'பழம் வாங்கலையோ பழம்' என்று கூவிக்கொண்டே பழங்களை தெருத்தெருவாக விற்று கொண்டு வந்தாள். அதனைக் கேட்டேன் கிருஷ்ணன் தனக்கும் பழம் சாப்பிடும் எண்ணம் தோன்றவே வாசலில் ஓடி வந்து பழம் வாங்குவதற்காக எட்டிப் பார்த்தார். பழம் சும்மா தர மாட்டார்கள். ஆனால், பழம் சாப்பிடுவதற்கு ஆசையாக இருக்கிறது. என்ன செய்வது? என்று யோசித்தான். உலகத்தில் இருக்கும் சர்வ ஜீவராசிகளுக்கும் பசியை போக்கும் கிருஷ்ணனுக்கு தன் பசிக்காக பழத்தை வாங்க வீட்டின் மூலையில் உள்ள பானையில் நிரப்பி வைத்திருந்த தானியத்தை பார்த்தான். உடனே கை நிறைய தானியங்களை அள்ளிக்கொண்டு பழக்காரியிடம் சென்று, இந்த தானியத்தை பெற்றுக்கொண்டு பழத்தை எனக்கு தா என்று கேட்டான். கிருஷ்ணன் வேகமாக ஓடி வரவே கையில் உள்ள தானியங்கள் கீழே சிந்தியது. பழக்காரியிடம் கையை நீட்டும் போது சிறிதளவு தனியங்களே கையில் இருந்தது. பழக்காரி அந்த தானியங்களை வாங்கிக் கொண்டு தன்னுடைய கூடையில் போட்டுவிட்டு தலையில் இருந்த கூடையை கீழே இறக்கி வைத்துவிட்டு, கூடையில் இருந்த பழங்களை கண்ணன் கைகளில் எடுத்துக் கொடுத்தாள். அந்த பழங்களை வாங்கிய கிருஷ்ணன் அப்படியே சாப்பிட்டான். அந்த அழகை ரசித்துக்கொண்டே பழக்காரி நின்று விட்டாள். பிறகு தன் கூடையை மீண்டும் தலையில் வைப்பதற்காக குனிந்து எடுக்கும் போது அவள் அதிர்ச்சி. அடைந்தாள் .கூடை நிறைய ரத்தினங்கள் நிரம்பி வழிந்தது. என்ன அதிசயம்? கண்ணனின் லீலைகளில் இதுவும் ஒன்று. பகவானிடம் அன்பு செலுத்தி பக்தியுடன் அவள் தந்த பழத்தின் பலன் அவளுக்கு சகல ஐஸ்வர்யங்களும் கிடைத்தது. கிருஷ்ணன் பழத்தை சாப்பிட்டுக் கொண்டே மற்ற குழந்தைகளுடன் விளையாட சென்று விட்டான் .நம் குழந்தைகள் விளையாடும் போதும் கண்ணனுடைய லீலைகளை நினைத்தால் கண்ணனிடம் பக்தி வளரும் .அந்த பக்தியில் குழந்தைகளிடம் அதிக அன்பு வளரும். இப்படி அன்புடன், நட்பை வளர்க்கும் நம் குழந்தைகள் 'எதிர்காலத்தில் நல்ல குணமான்களாகவும், அறநெறி தவறாதவர்களாகவும் இருப்பார்கள்' என அங்கிருந்த இடைச்சியர் கண்ணனை பார்த்து அகமகிழ்ந்து போனார்கள். இதற்குள் யசோதை வெகுநேரமாக விளையாடிக் கொண்டிருந்த கிருஷ்ணனையும், பலராமனையும் கூப்பிடுகிறாள். குழந்தைகளே... வாருங்கள் தந்தையார் சாப்பிட போகிறார் நீங்களும் வாருங்கள்.. உங்களுக்கும் பசிக்கும் அல்லவா? என்றாள். மற்ற குழந்தைகளை பார்த்து நீங்கள் உங்கள் வீட்டிற்கு செல்லுங்கள் என்று கூறிவிட்டு, கிருஷ்ணனையும், பலராமனையும், கையைப் பிடித்துக் கொண்டு வீட்டின் உள்ளே செல்வதற்காக யசோதை திரும்பினாள். அப்பொழுது அந்த பழக்காரி, "தான் கிருஷ்ணன் கையில் இருந்த கொஞ்சம் தானியத்தை வாங்கியதையும், பதிலுக்கு கை நிறைய பழத்தை தந்ததையும் கூறிவிட்டார்". கூடையில் இருந்த தானியங்கள் நவரத்தினங்கலாய் மாறியதையும் வியந்து போய் கூறினார். கண்ணனின் லீலைகளை கண்டு யசோதை அளவற்ற ஆனந்தம் அடைந்தாள். பகவானுக்கு நாம் பூஜை, புனஸ்காரம், மற்றும் நைவேத்யம் ஆகியவை அதிகமாக செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். ஆனால், பகவான் ஒரு சிறு பழமாய் இருந்தாலும், க்தியுடனும், ஆத்மசுத்தியுட னும் ,மற்றும் அன்புடனும் கொடுத்தால் அதனை ஏற்றுக் கொள்வான் என்பதற்கு இதுவே ஒரு உதாரணமாகும்.



தொடரும்..

# போகர் பிரதிஷ்டை செய்த சிவபோக சக்கரம்



திருக்காமேஸ்வரர், சந்நிதியில் சிவபோக சக்கரம் உள்ளது. இதை போகர் சித்தர் பிரதிஷ்டை செய்து அதில் அமர்ந்து தவம் செய்தார். இதன்பிறகே பழநியில் நவபாஷாண ஞான தண்டாயுதபாணி விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்ததாக "போகர் ஏழாயிரம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளது. திருக்காமேஸ்வரர் சந்நிதியில் அமர்ந்து தவம் செய்தால் எத்தகைய கடினமான சித்திகளும் கைகூடும் என்பதால், பாம்பாட்டி சித்தர், புலிப்பாணி தலைமையில் கோயிலைச் சூழ்ந்து சித்தர்கள் குழுமமே தவம் செய்துள்ளனர். கோயிலில் தெற்கு வாசல், கிழக்கு வாசல் என்று இரு நுழைவாயில்கள் உள்ளன.

ஐஸ்வர்யலட்சுமி சிறப்பு: சிவபெருமானின் தரிசனம் வேண்டி, மகாலட்சுமி, இத்தலத்துக்கு வந்து ஈசனைக் குறித்து தவம் செய்தாள். இறைவன் அவளுக்குக் காட்சி தரவில்லை. எனவே, தன்னை ஒரு வில்வ மரமாக மாற்றிக் கொண்டு வில்வ இலை மழை பொழிந்து பூஜை செய்தாள். அதன் பின் ஈசன் அவளுக்கு காட்சி தந்தார். வில்வ மரமாகத் தோன்றி, தன்னை அர்ச்சித்த காரணத்தால், ஸ்ரீவத்ஸ முத்திரை பதித்த சிவலிங்கத்துடன் கூடிய ஐஸ்வர்ய மகுடத்தை லட்சுமிதேவிக்கு அளித்து, சகல செல்வத்துக்கும் அதிபதி ஆக்கினார். இத்தலத்திலேயே தங்கி இங்கு வரும் பக்தர்களுக்கு அவரவர் பாவ புண்ணியத்திற்கேற்ப செல்வத்தை அருளும்படி கூறினார். இவள் அபய, வரத திருக்கரங்களோடு, மேலிரு கரங்களில் தாமரை மலருடன் காட்சி தருகிறாள். இங்குள்ள தீர்த்தம் ஐஸ்வர்ய தீர்த்தம் எனப்படுகிறது. இதனால் இவளுக்கு "ஐஸ்வர்யா' என்ற திருநாமமும் இருக்கிறது. ஐஸ்வர்ய மகாலட்சுமிக்கு அபிஷேகம் செய்யும் முன் வில்வமரத்துக்கே முதலில் பூஜை செய்கிறார்கள். வில்வாரண்யேஸ்வரர், ஐஸ்வர்யேஸ்வரர், லட்சுமிபுரீஸ்வரர், ஸ்ரீவத்ஸ அனுக்ரஹர் என்றும் இத்தலத்து ஈசனுக்கு திருநாமங்கள் உண்டு. சுக்ரன் இத்தலத்தில் ஈசனை வழிபட்டு போகத்திற்கு அதிபதியான தலம்.

அமைவிடம் : வெள்ளூர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,முசிறி வட்டம், திருச்சியில் இருந்து குணசீலம் செல்லும் சாலையில் மேற்கே 32 கி.மீ. தொலைவிலும், முசிறியிலிருந்து கிழக்கே 6 கி.மீ. தொலைவிலும் அமைந்திருக்கும் கிராமம் வெள்ளூர் ஆகும்.இந்த ஆலயத்தில் ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பிகா உடனுறை திருக்காமேஸ்வரர், ஸ்ரீஜஸ்வர்ய மஹாலக்ஷ்மி திருக்கோவில் அமைந்திருக்கிறது



வீ. விஸ்வநாதன்
டெபுடி ஜெயிலர் ( ஓய்வு)
மண்ணச்சநல்லூர்.



# தினம் ஒரு தலைவர்கள் சுசேதா கிருபளானி வரலாறு

சுசேதா கிருபளானி 25 ஜூன் 1908 1 டிசம்பர் 1974 ஒரு இந்திய அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார் . அவர் இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராகவும் , 1963 முதல் 1967 வரை உத்தரபிரதேச அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார் .

ஆரம்ப கால வாழ்க்கை

அவர் பஞ்சாபின் இப்போது ஹரியானாவில் உள்ளது) அம்பாலாவில் ஒரு பெங்காலி பிராஹ்ம குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை சுரேந்திரநாத் மஜூம்தார், ஒரு மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார் , அந்த வேலைக்கு பல இடமாற்றங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, அவர் பல பள்ளிகளில் பயின்றார் , அவரது இறுதிப் பட்டம் டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் ஆகும் .

நாட்டின் சூழல் தேசியவாத உணர்வுகளால் சூழப்பட்டு , சுதந்திரப் போராட்டம் உத்வேகம் பெற்று வந்த காலம் அது.

அவள் ஒரு கூச்ச சுபாவமுள்ள குழந்தை, தன் தோற்றம் மற்றும் அறிவுத்திறன் குறித்து சுயநினைவு கொண்டவள் என்று அவள் தனது "முடிக்கப்படாத சுயசரிதை" புத்தகத்தில் சுட்டிக்காட்டுகிறாள் . அவள் வளர்ந்த வயதும் அவள் எதிர்கொண்ட சூழ்நிலைகளும் தான் அவளுடைய ஆளுமையை வடிவமைத்தன. 10 வயதில், தானும் தன் உடன்பிறந்தவர்களும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி தங்கள் தந்தையும் அவரது நண்பர்களும் பேசுவதைக் கேட்டதாக சுசேதா விவரிக்கிறார். இது அவர்களை மிகவும் கோபப்படுத்தியது, அவர்கள் விளையாடிய சில ஆங்கிலோ-இந்திய குழந்தைகள் மீது , அவர்களைப் பெயர் சொல்லி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிவதற்கு முன்பு, இந்திரபிரஸ்தா கல்லூரி மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்தார் . 1936 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய நபரான ஜே.பி. கிருபளானியை மணந்தார் , அவர் தன்னை விட இருபது வயது மூத்தவர். இந்த திருமணத்தை இரு குடும்பத்தினரும், காந்தியும் எதிர்த்தனர் , இருப்பினும் அவர் இறுதியில் விட்டுக்கொடுத்தார்.

சுதந்திர இயக்கம் மற்றும் சுதந்திரம்

அவரது சமகாலத்தவர்களான அருணா ஆசஃப் அலி மற்றும் உஷா மேத்தாவைப் போலவே, அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முன்னணியில் வந்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிவினை கலவரங்களின் போது மகாத்மா காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றினார். 1946 இல் அவர் அவருடன் நோகாலிக்குச் சென்றார். இந்திய அரசியலமைப்பு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பெண்களில் இவரும் ஒருவர். கான்பூர் தொகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய துணைக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருந்தார் . இந்திய அரசியலமைப்புக்கான சாசனத்தை வகுத்த துணைக்குழுவின் ஒரு பகுதியாக அவர் ஆனார். ஆகஸ்ட் 14, 1947 அன்று, நேரு தனது புகழ்பெற்ற " டெஸ்டினியுடன் ட்ரைஸ்ட் " உரையை நிகழ்த்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, இவர் அரசியலமைப்பு சபையின் சுதந்திர அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார் . 1940 இல் நிறுவப்பட்ட அகில இந்திய மகிளா காங்கிரஸின் நிறுவனர் ஆவார்.






சுதந்திரத்திற்குப் பிறகு

1949 ஆம் ஆண்டில் (இடமிருந்து வலமாக) உல்லா லிண்ட்ஸ்ட்ரோம் , பார்பரா கோட்டை , கெய்ரின் வில்சன் மற்றும் எலினோர் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் கிருபளானி .

சுதந்திரத்திற்குப் பிறகும், அவர் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டார். 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் மக்களவைத் தேர்தலில், அவர் புது தில்லியில் இருந்து KMPP டிக்கெட்டில் போட்டியிட்டார் : ஒரு வருடம் முன்பு தனது கணவர் நிறுவிய குறுகிய காலக் கட்சியில் சேர்ந்தார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் மன்மோகினி சாகலைத் தோற்கடித்தார் . ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அதே தொகுதியிலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் இந்த முறை காங்கிரஸ் வேட்பாளராக. அவர் கடைசியாக 1967 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் உள்ள கோண்டா தொகுதியிலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் . இதற்கிடையில், அவர் உத்தரபிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார் . 1960 முதல் 1963 வரை, அவர் உ.பி. அரசாங்கத்தில் தொழிலாளர், சமூக மேம்பாடு மற்றும் தொழில்துறை அமைச்சராக பணியாற்றினார். அக்டோபர் 1963 இல், அவர் உத்தரபிரதேசத்தின் முதலமைச்சரானார் , எந்தவொரு இந்திய மாநிலத்திலும் அந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணி. அவரது பதவிக் காலத்தின் சிறப்பம்சம் மாநில ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை உறுதியாகக் கையாண்டது. மாநில ஊழியர்களின் இந்த முதல் வேலைநிறுத்தம் 62 நாட்கள் தொடர்ந்தது. ஊழியர்களின் தலைவர்கள் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டபோதுதான் அவர் விலகினார். ஊதிய உயர்வுக்கான அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம் கிருபளானி ஒரு உறுதியான நிர்வாகியாக தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொண்டார். நிர்வாக முடிவுகள் மற்றும் கட்சி அமைப்பில் மூத்த தலைவர் நிர்மல் சந்திர சதுர்வேதி, எம்.எல்.சி., அவருக்கு ஆதரவளித்தார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, மொரார்ஜி தேசாய் பிரிவுடன் சேர்ந்து கட்சியை விட்டு வெளியேறி NCO ஐ உருவாக்கினார். 1971 தேர்தலில் பைசாபாத் (லோக்சபா தொகுதி) தொகுதியில் NCO வேட்பாளராக அவர் தோல்வியடைந்தார் . 1971 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவர் 1974 இல் இறக்கும் வரை தனிமையில் இருந்தார்.

# மருத்துவமனையில் இருக்கும் பாரதிராஜாவின் தற்போதைய நிலை



தமிழ் சினிமாவில் அந்த காலத்தில் கொண்டாடப்பட்ட பிரபல இயக்குனர்களில் ஒருவர் தான் பாரதிராஜா.

இயக்குவதை தாண்டி கடந்த சில வருடங்களாக படங்கள் நடித்து வந்தவருக்கு வாழ்க்கையில் பெரிய இழப்பு நேர்ந்தது. அதாவது அவரது மகன் மனோஜ் உயிரிழப்பிற்கு பிறகு முற்றிலும் உடைந்துவிட்டார் பாரதிராஜா.

மகன் பிரிவிற்கு பிறகு மலேசியாவில் உள்ள தனது மகள் வீட்டில் வசித்துவந்த பாரதிராஜா மீண்டும் சென்னைக்கு வந்தார். இங்கு வந்தவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட கடந்த வருடம் டிசம்பர் மாதம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நுரையீரல் தொற்றுக் காரணமாக அனுமதிக்கப்பட்டவர் தற்போதும் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பாரதிராஜாவை சீமான், லிங்குசாமி, ஏ.ஆர். முருகதாஸ், அமீர், ஃபெப்சி தலைவர் ஆர். கே.மணி, தயாரிப்பாளர் தாணு என பலர் நேரில் சந்தித்து நலம் விசாரித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவமனையில் இருக்கும் பாரதிராஜாவின் சமீபத்திய புகைப்படம் வெளியாகியுள்ளது. அதில் இவரா பாரதிராஜா என கேட்கும் அளவிற்கு உடல் மெலிந்து ஆளே மாறியிருக்கிறார்.

நடிகை நிதி அகர்வால் தெலுங்கில் தற்போது முன்னணி ஹீரோயினாக இருக்கிறார். தமிழிலும் சில படங்கள் நடித்து இருந்தாலும் அடுத்தடுத்து அவருக்கு வாய்ப்புகள் அதிகம் தமிழில் வரவில்லை. நிதி அகர்வால் எந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டாலும் அவர் தாராள கிளாமர் ஆன உடையில் வந்து எல்லோரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார். தற்போது பேஷன் ஷோவில் கலந்துகொள்ள அவர் உச்சக்கட்ட கவர்ச்சி உடையில் வந்திருக்கும் புகைபடங்களை பாருங்க.



# தாய் கிழவி படம் எவ்வளவு வசூல் செய்துள்ளது தெரியுமா?



2026ஆம் ஆண்டு மூன்று மாதங்களை கடந்துள்ள நிலையில், இதுவரை சில சூப்பர்ஹிட் திரைப்படங்கள் மட்டுமே தமிழில் இருந்து வெளியாகியுள்ளது. அதில் ஒன்றுதான் தாய் கிழவி. இப்படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்க, நடிகை ராதிகா சரத்குமார் கதையின் நாயகியாக நடித்திருந்தார்.

மேலும், இப்படத்தை சிவகார்த்திகேயன் தயாரிக்க, நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்திருந்தார். வித்தியாசமான கதைக்களத்தில் உருவாகி வெளிவந்த இப்படத்திற்கு ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனால், முதல் நாளில் இருந்தே வசூலில் தாய் கிழவி திரைப்படம் பட்டையை கிளப்பி வருகிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் தாய் கிழவி இதுவரை எவ்வளவு வசூல் செய்துள்ளது என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் இதுவரை தமிழ்நாட்டில் ரூ. 61.8 கோடி வசூல் செய்துள்ளது.

இதன்மூலம் இதுவரை வெளிவந்த திரைப்படங்களில், 2026ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அதிக வசூல் செய்த படம் என்கிற சாதனையை படைத்துள்ளது. மேலும், தமிழகத்தில் இதுவே இப்படத்தின் இறுதி வசூலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனுஷ்கா நடிப்பில் உருவாகியுள்ள பிரம்மாண்டமான 'கத்தனார்' திரைப்படத்தின் டிரைலர்



ரோஜின் தாமஸ் இயக்கத்தில் ஜெயசூர்யா, அனுஷ்கா ஷெட்டி இணைந்து நடித்துள்ள திரைப்படம் கத்தனார் - தி வைல்ட் சோர்சரர். அனுஷ்கா நடிப்பில் கடந்த ஆண்டு வெளிவந்த 'காட்டி' (Ghaati) திரைப்படத்தில் ஆக்ஷன் நாயகியாக அசத்தியிருந்தார்.

இதை தொடர்ந்து இவர் நடிப்பில் இப்படம் வெளிவரவுள்ளது. மலையாளத்தில் எடுக்கப்பட்டுள்ள இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் டப் செய்யப்பட்டு ரிலீஸ் ஆகிறது.

இப்படத்தில் பிரபு தேவா, சாண்டி, சனூப் சந்தோஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பிரம்மாண்ட பட்ஜெட்டில் உருவாகியுள்ள இப்படத்தின் மீது மாபெரும் எதிர்பார்ப்பு உள்ளது.

இந்த நிலையில், கத்தனார் - தி வைல்ட் சோர்சரர் திரைப்படத்தின் மிரட்டலான டிரைலரை படக்குழு அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளனர்.

# 2026 தேர்தலை முன்னிட்டு விஜய் நடித்த அரசியல் படம் ரீ-ரிலீஸ்.. எந்த படம் தெரியுமா?





திவ்ய பாரதி தற்போது தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர். ஜீ.வி. பிரகாஷ் உடன் பேச்சிலர், கிங்ஸ்டன் போன்ற படங்களில் நடித்திருந்தார் அவர்.

மேலும் கவர்ச்சியாக புகைப்படங்களை வெளியிட்டு தொடர்ந்து ரசிகர்களை கவர்ந்து வருகிறார் திவ்ய பாரதி. தற்போது அவர் ஹாட் உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை பாருங்க.

# குக் வித் கோமாளி 7 நிகழ்ச்சியின் புதிய நடுவர் ரோஜா

சின்னத்திரையில் மாபெரும் உச்சத்தை தொட்ட நிகழ்ச்சிகளில் ஒன்று குக் வித் கோமாளி. ஆனால், கடந்த இரண்டு சீசன்களாக சுமாரான வரவேற்பை பெற்று வருகிறது. ஆனாலும், குக் வித் கோமாளி சீசன் 7 எப்போது ஆரம்பம் ஆகும் என்கிற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் இருந்த நிலையில், கடந்த சில வாரங்களுக்கு முன் அதிகாரப்பூர்வ அறிவிப்பை விஜய் டிவி வெளியிட்டது.

குக் வித் கோமாளி சீசன் 7ல் வழக்கமாக தனியாக போட்டியாளர்கள் களமிறங்கவில்லை. அதற்கு பதிலாக, நட்சத்திர ஜோடிகள் போட்டியாளர்களாக களமிறங்குகிறார்கள். அனிருதா ஸ்ரீகாந்த் - சம்யுக்தா, கானா - வினோத் பாக்கியா, அரவிந்த் - சங்கீதா என ஜோடி ஜோடியாக போட்டியாளர்களை விஜய் டிவி குக் வித் கோமாளி நிகழ்ச்சியில் களமிறக்கியுள்ளது.

ரோஜாவின் பிரம்மாண்ட வீடு

நட்சத்திர ஜோடிகள் போட்டியாளர்களாக களமிறங்குவது புதிய விஷயம் என்றால், அடுத்ததாக இந்த சீசனில் மொத்தம் நான்கு நடுவர்கள் என புதிதாக அறிவித்தனர். அந்த நான்காவது நடுவர் வேறு யாருமில்லை, நடிகை ரோஜா என அதன்பின் அறிவித்தனர்.



இந்த நிலையில், குக் வித் கோமாளி சீசன் 7ல் நடுவராக களமிறங்கியுள்ள நடிகை ரோஜாவுக்காக ஸ்பெஷல் வீடியோ ஒன்றை விஜய் டிவி வெளியிட்டுள்ளது. இதில், ரோஜாவின் வீட்டிற்கு சென்று பேட்டி எடுத்துள்ளனர். தனது வீட்டை அவர் சுற்றி காட்டி சாப்பாடு, சமையல் குறித்த அனுபவங்களை பகிர்ந்துள்ளார். மேலும், வருகிற ஏப்ரல் 4ஆம் தேதி முதல் குக் வித் கோமாளி சீசன் 7 தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய் முருகதாஸ் கூட்டணியில் வெளியான துப்பாக்கி மற்றும் கத்தி திரைப்படங்களைத் தொடர்ந்து வெளியான சர்க்கார் படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. இந்த படம் 2018 ஆம் ஆண்டு வெளியாகி 7 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்தது.

விஜய் நடித்த படங்களிலேயே சர்க்கார் திரைப்படம் அவருடைய கரியரில் முக்கியமானதாக காணப்பட்டது. வசூல் ரீதியாகவும் அந்த படம் நல்ல வரவேற்பைப் பெற்றது. அதில் ரசிகர்கள் எதிர்பார்த்தபடியே அரசியல் வசனங்கள் நிறைந்து காணப்பட்டது.

மேலும் சர்க்கார் படத்தில் பொதுமக்களின் பிரச்சினைகள், அரசியல் கட்சி மாநாடு, தேர்தல் நேரத்தில் நடந்த எதிர்பாராத திருப்பங்கள், கள்ள ஓட்டு பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஓட்டு உரிமை போன்றவை அந்த படத்தை பரபரப்பாக எடுத்துக்காட்டியது.

மேலும் அந்த படத்தில் ஏ.ஆர். ரஹ்மானின் பாடல்களும் பின்னணி இசையும் படத்திற்கு பலம் சேர்த்தது. விஜய் அரசியலுக்குள் நுழைந்துள்ள நிலையில் இந்த படம் ரசிகர்களால் தேடிப் பார்க்கப்பட்டது. அதனை ஓடிடி தளங்களிலும் அதிகளவானோர் பார்த்துள்ளனர்.

இந்த நிலையில், 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, அரசியல் கதைக்களம் கொண்ட சர்க்கார் படத்தை ரீ-ரிலீஸ் செய்ய ரசிகர்கள் எதிர்பார்த்து வருகின்றனர்.

இதனால் நடிகர் விஜய் தனது தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் மூலம் இந்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் முதன்முறையாக களமிறங்குவதால், ஓட்டு உரிமை மற்றும் அரசியல் மாற்றத்தை பேசும் சர்க்கார் படம் மீண்டும் திரையிடப்படுவது அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

# மாபெரும் ஹிட் அடித்த 'யூத்'




தமிழ் சினிமாவில் விடுதலை 2, அசுரன், வாத்தி உள்ளிட்ட பல படங்களில் நடித்துத் தனது திறமையை வெளிப்படுத்தியவர் கென் கருணாஸ். அவர் இயக்கி நடித்துள்ள திரைப்படம் "யூத்", தற்போது திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி வருகிறது.

பார்வதா என்டர்டெயின்மென்ட் மற்றும் ஸ்ட்ரீட் பாய்ஸ் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். இதில் அனிஷ்மா, மீனாட்சி தினேஷ், பிரியன்ஷி யாதவ் ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர்.

பள்ளி வாழ்க்கையை மையமாகக் கொண்டு, மாணவர்கள் இடையே உருவாகும் மோதல்கள், காதல், நகைச்சுவை மற்றும் உணர்ச்சி சம்பவங்களை இப்படம் வெளிப்படுத்துகிறது. அதே நேரத்தில், பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் எதார்த்தமாக சித்தரித்துள்ளது.

படம் வெளியான முதல் நாளிலிருந்தே ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று, இதுவரை 60 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனைத் தொடர்ந்து, படத்தின் வெற்றி விழா (Success Meet) சமீபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பேசிய தயாரிப்பாளர் கருப்பையா, "இந்த படத்தின் வெற்றிக்குப் பிறகு கென்னுக்கு என்ன பரிசு வழங்கப் போகிறேன் என்று பலரும் கேட்டனர். ஆனால், நான் ஆரம்பத்திலேயே ஒரு முக்கிய முடிவு எடுத்திருந்தேன். அதாவது, இந்தப் படத்தின் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை இயக்குநருக்கு வழங்கியுள்ளேன். இனி வரும் எனது அனைத்து படங்களிலும் இதே முறையை பின்பற்றுவேன்" என தெரிவித்தார்.

மேலும், "நானும் இயக்குனராக வரவேண்டும் என்ற ஆசையில் தான் இந்த துறையில் நுழைந்தேன். இதனால் பல சிரமங்களை நன்றாகவே புரிந்து வைத்துள்ளேன. இயக்குநர்கள் தான் ஒரு படத்தின் முதுகெலும்பு. அவர்கள் வெற்றி பெற பணம் மட்டுமின்றி, அனைத்து தரப்பிலும் ஆதரவு வழங்கப்பட வேண்டும். அதற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளேன்" என்றும் அவர் கூறினார்.

நடிகை நந்திதாவை தெரியத்தவர்கள் இருக்க முடியாது. தமிழில் அட்டகத்தி, எதிர்நீச்சல் தொடங்கி ஏராளமான படங்களில் நடித்துள்ளார்.
தற்போது நந்திதா படங்கள், வெப் சீரிஸ் என நடித்து வருகிறார். நந்திதா சமீப காலமாக தாராள கவர்ச்சி காட்டவும் தொடங்கி இருக்கிறார்.
அவர் சேலையில் செம ஹாட் போஸ் கொடுத்த ஸ்டில்களை பாருங்க.



# "லீடர்" ஹிட் ஆகணும்.! தரையில் உருண்ட கூல் சுரேஷ்



தமிழ் சினிமாவில் கருடன் படத்தின் மூலம் வெற்றி பெற்ற இயக்குநர் துரை செந்தில்குமார் இயக்கத்தில், லெஜெண்ட் சரவணன் நடித்துள்ள "லீடர்" திரைப்படம் ஏப்ரல் 3ஆம் தேதி வெளியாகத் தயாராகியுள்ளது.

பொதுவாக லெஜெண்ட் சரவணன் நடிக்கும் படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகமாக ட்ரோல் செய்யப்படும் நிலையில், இந்தப் படத்திற்கும் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. லீடர் படத்தின் டீசர் மற்றும் ட்ரெய்லர்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற ஆடியோ வெளியீட்டு விழாவில், லெஜெண்ட் சரவணன், "இந்த படம் முழுக்க முழுக்க ஆக்ஷன் திரைப்படமாக இருக்கும். ஜெய்லர், லியோ போன்ற படங்களைப் போல வெற்றி பெறும்" என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 'லீடர்' படம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நடிகர் கூல் சுரேஷ், முருகன் கோவிலில் அங்கப் பிரவேசம் செய்துள்ளார். தற்போது அவர் கோவிலில் செய்த அந்த நிகழ்வின் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

காமெடி நடிகரான கூல் சுரேஷ், தனது தனித்துவமான பேச்சுத் திறனால் எப்போதும் சமூக வலைத்தளங்களில் கவனம் ஈர்த்து வருபவர். குறிப்பாக, திரைப்படங்கள் வெளியாகும் போது அந்த படங்களுக்கு ஆதரவாக தனித்துவமான முறையில் பிரச்சாரம் செய்வது அவரது வழக்கமாகும். அதேபோல், லெஜெண்ட் சரவணனின் ரசிகரான அவர், லீடர் படம் வெற்றி பெற வேண்டும் என வேண்டி இந்த அங்கப் பிரவேசத்தை மேற்கொண்டுள்ளார்.

# நயன்தாரா மாதிரி என் லைஃப் படம் எடுக்கணும்; இதுதான் டைட்டில்..? அரோரா ஓபன் டாக்

விஜய் டிவியில் நடைபெற்ற பிக் பாஸ் நிகழ்ச்சியின் 9வது சீசனில் கலந்துகொண்ட 20 போட்டியாளர்களில் இறுதி வரை முன்னேறியவர்களில் ஒருவராக அரோரா இருந்தார். ஆரம்பத்தில் இவரைப் பற்றிய எதிர்மறை கருத்துக்கள் அதிகமாக இருந்தாலும், நிகழ்ச்சி முடிவில் பலரின் நம்பிக்கையைப் பெற்று முன்மாதிரியாக மாறினார்.

ஆரம்பத்தில், இன்ஸ்டாகிராமில் இவருக்கு 7.75 லட்சம் பின்தொடர்பவர்கள் (followers) இருப்பதாக, பிக் பாஸ் போட்டியாளராக அறிவிக்கப்பட்ட போது பலரும் "யார் இந்த அரோரா?" என்று அறிந்து கொள்ளத் தொடங்கினர்.

புதுச்சேரியை பூர்வீகமாகக் கொண்ட இவர், சென்னையில் மாடலாக செயல்பட்டு வந்ததுடன், சில குறும்படங்களிலும் நடித்துள்ளார். ஆனால், அங்கீகரிக்கப்படாத டேட்டிங் ஆப்களை விளம்பரப்படுத்தியதன் மூலம் சில சர்ச்சைகளிலும் சிக்கியுள்ளார்.

மேலும் இன்ஸ்டாகிராமில் கவர்ச்சி மாடலாக அறியப்பட்ட இவர், பலரால் "பலூன் அக்கா" என அழைக்கப்பட்டார். பிக் பாஸ் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலும் இதனை அடிப்படையாகக் கொண்டு கேலி, கிண்டல்கள் செய்யப்பட்டன. பின்னர், அவரது உண்மையான தன்மை வெளிப்பட, இவர் மீதான ரசிகர்களின் பார்வை மாறியது.

பிக் பாஸில் இருந்து வெளியேறிய பிறகும், அவர் மாடலிங் மற்றும் குறும்படங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், ஒரு தனியார் ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், "நயன்தாரா போல என் வாழ்க்கையையும் படமாக எடுத்தால் எப்படி இருக்கும்? அதற்கு என்ன பெயர் வைக்கலாம்?" என தனது சப்ஸ்கிரைபர்ஸ்களிடம் கேட்டதாக தெரிவித்தார்.

அதற்கு ரசிகர்கள் "Un-told Story of Air" என்ற டைட்டிலை சொன்னதாகவும், அதற்கு காத்து, பலூன் என அர்த்தம் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தற்போது, இந்த பேட்டி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.



சன் தொலைக்காட்சியில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகி வரும் எதிர்நீச்சல் சீரியலில், நந்தினி என்கிற கதாபாத்திரத்தில் நடித்து வருபவர் நடிகை ஹரிப்ரியா. இவர் நடிகை மட்டுமின்றி மிகவும் பிரபலமான தொகுப்பாளினியும் ஆவார். நந்தினி கதாபாத்திரம் மூலம் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துள்ள நடிகை ஹரிப்ரியா, அவ்வப்போது வெளிநாட்டிற்கு ட்ரிப் செல்வார். அப்போது அங்கு எடுத்துக்கொள்ளும் புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு ரசிகர்களிடையே லைக்ஸ்களை பெறுவார். அந்த வகையில், தற்போது தாய்லாந்து சென்றுள்ள ஹரிப்ரியா, அங்கிருந்து எடுத்துக்கொண்ட அழகிய புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.

# ஊதா சேலையில் மின்னும் ஸ்ருதிஹாசன் ரசிகர்கள் கவர்ந்த புகைப்படங்கள் இதோ



தென்னிந்திய சினிமாவில் தனது தனித்துவமான குரல், நடிப்பு மற்றும் ஸ்டைலால் ரசிகர்களை கவர்ந்து வரும் நடிகைகளில் ஒருவர் ஸ்ருதிஹாசன். பல்வேறு முகங்களில் திகழும் இவர், சமூக வலைத்தளங்களிலும் மிகவும் ஆக்டிவாக உள்ளார். உலகநாயகன் கமல்ஹாசனின் மூத்த மகளான ஸ்ருதிஹாசன், தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் முன்னணி நடிகையாக கலக்கி வருகிறார். சமீபத்தில் இவர் நடித்த கூலி திரைப்படம் நல்ல வரவேற்பைப் பெற்று வசூலிலும் வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து, துல்கர் சல்மானுடன் இணைந்து 'ஆகாசம் லோ ஒக்கா தாரா' என்ற படத்திலும் நடித்து வருகிறார். இந்த படம் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி மொழிகளில் வெளியாகத் தயாராகி வருகிறது.

இணையத்தில் எப்போதும் ஆக்டிவாக இருக்கும் ஸ்ருதி, தனது வாழ்க்கைச் சம்பவங்கள், படப்பிடிப்பு தருணங்கள் மற்றும் மாடலிங் புகைப்படங்களை ரசிகர்களுடன் பகிர்ந்து வருகிறார்.

இந்நிலையில், ஸ்ருதிஹாசன் ஊதா நிற சேலையில் எடுத்துக்கொண்ட அழகிய புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்தப் புகைப்படங்களில் அவர் எளிமையாகவும் அழகாகவும் காட்சியளிக்கிறார்.

இந்தப் புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள், ஸ்ருதியின் அழகை பாராட்டி கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.






## அழகோவியம்

எனக்கு இலக்கியமும்
தெரியாது இலக்கணமும்
தெரியாது! அவ்வளவு ஏன்?
தமிழ் மொழியும் கூட
முழுமையாகத் தெரியாது!
என்னைப்படிக்க வைப்பதும்
நினைக்க வைப்பதும்
எழுத வைப்பதும்
காதலிக்க வைப்பதும்
என் இலக்கியச் சோலையான
நீதான்! யாரும் வரைய
முடியாத அழகோவியம் நீ!
உயிருடன் எழுந்து வந்து
நடமாடும் சிலை நீ!
அழகைத் தன்னுள்ளே(யே)
வைத்திருக்கும் எழுதாத
பாடல் நீ! எனக்கெனவே
பூமியில் தோன்றிய வானத்து
தேவதை நீ!
நீ கிடைப்பதற்கு முன்பு
உன்னையே கேட்டுத்
தவமிருக்க நினைத்தேன்!
நீயே வரமாகக் கிடைத்து
விட்ட பிறகு இனி
வாழ்வில் வேறென்ன
வேண்டும் எனக்கு?!
இனி உன் ஒவ்வொரு
புன்னகையும்
என்
வாழ்வில்
வசந்தமே!



**முத்து ஆனந்த்**
வேலூர்

## ஹைக்கூ !

தவறு செய்து விட்டு
பெயர் சூட்டுகின்றனர்
தலைவிதி ! கேட்டு
வாங்குவது இழுக்கு
தானாக வருவது பெருமை
மரியாதை ! முன்னேற்றத்தின்
தடைக்கல் பொறாமை !
அன்பின் பகைவன்
அறிவைச் சிதைப்பவன்
வெறுப்புணர்ச்சி !
அடையாளம் பெரிய
மனிதர்களுக்கு அடக்கம் !
கற்றலின் கேட்டல் நன்று
அறிஞர்கள் உரை !
சினம் வரும் நேரம்
வேண்டும் கவனம்
சிறந்தது மவுனம் !
அச்சம் அகற்றி துணிவு
தரும் மனத்தூய்மை !
நிரந்தரமன்று வஞ்சகரின்
வெற்றி ! இலக்கணம்
மனிதனுக்கு உழைப்பு !
வேலை இல்லை
வீண் சண்டைக்கு
நா காக்க ! நேசிப்பு
இருந்தால் சலிப்பு வராது
பணியில் ! பாதியாக்கும்
கவலையை ஆறுதல் !

**கவிஞர் இரா .இரவி!**

மூடியிருந்த கண்
விழித்தபோது மின்சாரமாய்
பாய்ந்த உன் பார்வை...

அதை பார்த்ததும்
அருவியாய் கொட்டியது
வேர்வை..

மேகம் பிறவிச்சது மழை..
உன் மேனி பிறவிச்சது
அறுபத்தி நான்கு கலை..

உள்ளமும் உள்ளமும் ஒன்று
சேர வீசப்பட்டது
காதல் வலை....

இந்த உறவுக்கு உறவாய்
வந்தது ஒரு சிலை...
இது மதிப்பற்ற பெரும்
விலை.....!!

**பொன்.கருணா** நவி
மும்பை



## புதிய உலகம் நீ

" உன் கமல முகம் காண
கதிரவனும் முந்தி எழு
துடிக்கின்றான் ..."

அந்தி சாயும் வேளையில்
உன் ஒளியில் முழு மதியும்
விரைகின்றாள்..."

மா ஞாலம் பெரு ஒளியில்
பொங்கி மின்ன உன் அழகை
எப்படி சொல்வேன் ..."

பச்சைக் கொடியும்
வேர்வை துளி பனி பட்டு வர
உன் கூந்தல் வளைவில்
மயங்குவதேன் ...."

ஆண் மான்
கூட வெட்கத்தில்
தலை சாய்த்து திணறியது
உன் நாணத்தில்
எழுந்த வீரத்தால் ....."

தேவலோக நாட்டிய
நங்கைகள் கூட
உன் நடையில் வைத்த
கண்ணை மாற்ற
வில்லையே..."

உன் இதழ் கனி ரசம்
சிந்த சுவைகள் யாசகம்
உன்னிடம் கேட்க வரிசைக்
கட்டி நின்றதோ ..."

சிலை கூட கண் சிமிட்டி கரம்
நீட்டி ஜாலம் காட்டி ஜாடை
காட்டியது உன் கலைநயம்
கண்ட பின்பு ..."



கவிதை கூட உன்
மௌனம்
கண்டு இலக்கணம்
அமைக்க தடம்
தேடியது .... "

**ஆர். சீதாராமன்**
சீர்காழி

## மௌனமெனும் மருந்து

வார்த்தைகளின் வெடிப்பில்
வளர்ந்த போர்களுக்கு
சமரசத் தீர்வு

வலியின் வதத்திற்கு
மருந்தாகும்

நாவு உதிர்க்கும்
சொற்களுக்கு
இதழ் தரும் வைத்தியம்

இடைவெளி தந்து
இறுக்கத்தைக் குறைத்து
உறவின் பாலமாய் உதவும்

ஆயிரம் சொற்களின்
அகராதிப்பொருளுக்கு
அர்த்தம் சொல்லும்

குத்திக் கிழித்து
ரணமாக்கும்
கொடூர அரக்கனுக்கு
நித்தம் தரும் நிவாரணி
இதழில் மட்டுமல்ல
இதயத்திலும் மௌனம்
அன்பானால் அகிலத்தில்
ஆயுதம் தேவையில்லை

மௌனமெனும் மருந்து
குடும்பத்தில் பிரிவினை
தீர்க்கும்

மௌனமெனும் மருந்து
பணியில் ஒற்றுமை சேர்க்கும்



மௌனமெனும் மருந்து
நாட்டில் நட்பை வளர்க்கும்

மௌனமெனும் மருந்து
ஆயுள் நீட்டிக்கும்
அமிர்தம்.

**தமிழ் நிலா**

## ஒருங்குடன் வாழ்ந்திட ஓர்!

நேரிசை வெண்பா!

ஒன்றாக வாழ்வமே
ஒற்றுமை காப்பமே!
நன்றாக சூழ்வமே
நல்லபடி.. பொன்றாத்
திருவுடன் சேர்த்திடத்
தேர்ந்தேதான் வாழ்வில்
ஒருங்குடன் வாழ்ந்திட ஓர்!

வேற்றுமையில் ஒற்றுமை
வீறுடன் கண்டேதான்
சாற்றிடு நன்மையை
சாந்தாக போற்றி



அருமையான
வாழ்வே
ஒருமுறையே
எண்ணி
ஒருங்குடன்
வாழ்ந்திட ஓர்!

**முனைவர்
இராம.வேதநாயகம்!**
திருவண்ணாமலை.

## வட்டி

நீ ரசித்துச் சிலாகித்துப்
படிக்கிறாய் என்பதற்காகவே
சினிமா இதழ்களிலும் கூடக்
காதல் கவிதைகளை
எழுதுகிறேன்!
நீயும் கவிதைகளைப் படித்து
அதனுடன் சேர்ந்து
என்னையும் உன்னுள்(உள்)
வாங்கினாய்! நவீன
கதாநாயகிகளின்
விதவிதமான
அழகுப் படங்கள்
அச்சிடப்பட்டிருந்தாலும்
என் கவிதைக்கான
படங்களில் மிளிர்ந்த
அழகுப் பெண்கள்
ஒவ்வொருத்தியும் எனக்கு
நீயாகவே தெரிந்தாய்!
இதை விட அழகாகக்
கா த ல் இருந்து விட
முடியுமா என்ன?!
என்னுடன் பின்னிப்
பிணைந்திருப்பது
உன்னுடைய அழகு மட்டும்
என்று நினைத்தாயா?
அன்பும்(கூடத்)தான்!
முதல் தான் வட்டியைக்
கொடுக்குமாமே!உன்னுடைய
முதலான கா த ல் எனக்கு
வாழ்க்கையையே கொடுத்து
விட்டது!

**முத்து ஆனந்த்** வேலூர்

## பாத்திரம் தேய்க்கும் பேதை

பத்துவயதாகப்பெண் நானோ பிய்ந்த
பழம்பாயில் சுருண்டிருந்தேன் விடியற்காலை
மொத்தமுமாய் இருள்பிரியா அந்த நேரம்
மூதேவி இன்னுமென்ன உறக்க மென்றே
பெத்தவளோ எழுப்புகின்றாள் ! சோர்ந்தமேனி
புரண்டெழுந்தே குடிசைவிட்டு வெளியே வந்தேன்
பெத்தவனோ குடிமயக்கம் தெளியா தின்னும்
பொறுப்பின்றி மூலையிலே விழுந்தி ருந்தான் !

ஊர்க்கிணற்றில் நீரிரைத்தே காய்த்த கையில்
உள்வேலை தாய்க்குற்றத் துணையாய் செய்தே
ஊர்விழிக்கு முன்வீட்டு வேலை செய்ய
ஊருக்குள் பாத்திரங்கள் தேய்க்கச் சென்றேன் !
நார்தோன்றி ஊசிப்போய் நைந்தபண்டம்
நாசியினைத் துளைத்தெடுக்கக் காய்ந்த சோறு
நீர்காண தட்டுக்கள் எடுத்துப்போட்டே
நித்திரைதான் களையுமுன்னே கழுவிப்போட்டேன் !

மூலையிலே களைந்தெறிந்த துணிகளோடு
மூன்றுமாதக் குழந்தையின்பீத் துணியும் சேர்த்து
சேலையோடு கிணற்றடியில் துவைக்கும்போது
செழித்தவுடல் தினவினிலே வீட்டுப் பையன்
வேலையெதோ இருப்பதுபோல் பக்கம் வந்தே
வேண்டுமென்றே என்முதுகை வருடிச் சென்றான்
வேலையெங்கே போயிடுமோ என்ற அச்ச
வேதனையில் மௌனமாகப் பிழிந்து போட்டேன் !

உச்சிவெயில் வரும்பொழுது மூன்று வீட்டில்
உடல்நோவ வேலையினை முடித்தேன் ; நேற்று
மிச்சத்தைக் கருணைவந்து கொடுக்க ; தம்பி
முகம்வந்து கண்முன்னே நிற்க; வீதி
எச்சலிலே புரளுகின்ற அவனைத் தேடி
இழுத்துவந்தே இருவருமாய் பசிநெருப்பில்
எஞ்சியுள்ள வயறுதன்னை ஆற்றுவித்தே
என்றும்போல் சாணத்தைப் பொறுக்கச் சென்றேன் !

கிழிந்திருக்கும் சாக்கெட்டைத் தைத்துத் தைத்துக்
கிழிசலினை மூடுதற்கும் இயன்றிடாமல்
வழியெல்லாம் பார்ப்போரின் காட்சியாகி
வறண்டிருக்கம் தலைமீது கூடை தாங்கி
விழிகளிலே சாலையெல்லாம் தேடித்தேடி
விழுந்திருக்கும் சாணத்தைப் பொறுக்கிப்போட்டே
வழிகின்ற நிலையினிலே குடிசை நோக்கி
வருவதற்குள் சூரியனும் மேற்கில் சாய்ந்தான் !

எடுத்துவந்த சாணத்தை உருட்டிருட்டி
எதிர்சுவற்றில் வட்டமாகத் தட்டி ; நேற்று
அடுக்கிவைத்த வரட்டிதனைக் கேட்டு வந்தோர்
அளவுக்கு விற்றந்த காசு தன்னை
அடுக்களையின் சொப்புக்குள் மறைத்து வைத்தேன்
அந்நேரம் ஊர்சுற்றி வந்த அப்பன்
குடுகுடென்றே குடிசைக்குள் நுழைந்து சொப்புக்
குள்ளிருக்கும் காசுதனை எடுத்துப்போனான் !

கண்களிலே நீர்தளும்பிக் கன்னம் மீதில்
கறையாக வாசலிலே குந்திருந்தேன்
வெண்ணிலவோ என்துயரைப் பார்த்துப்பார்த்து
ஒளிமங்கி மேகத்தில் கண்துடைத்தாள்
மண்சுமந்து கல்சுமந்து சித்தாளாக
மனதுசுடும் சொல்சுமந்து வேலை செய்தே
கண்சுமந்த துயரோடு தாயும் கூலிக்
களவாகச் செலவுதனை வாங்கி வந்தாள் !



கரிப்புகையில் மீண்டும்நான் கரைந்து போனேன்
கஞ்சிக்கே இப்பாடு ; குடித்தே அப்பன்
எரிக்கின்றான் எம்வாழ்வை; தாய்கோ நாளும்
எலும்புடையும் அடிஉதைகள்; வாழ்வில் நானோ
அறுசுவையை நினைக்கவில்லை அழகாய் ஆடை
அணிகலன்கள் கேட்கவில்லை ; உழைப்பதாலே
சிறுமையாக நினைக்கின்ற சமுதாயத்தின்
சிந்தனைகள் மாறியெம்மை மதித்தால் போதும் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## என் காதல் மொழி நீ

வார்த்தைகளால் பேசிப் பேசியும் – என்
நேசம் உனக்குப் புரியவில்லையோ என்றுதான்
இப்போதெல்லாம் மௌனத்தைச் சரணடைந்திருக்கிறேன்!
என் வார்த்தைகளுக்கே நீ மௌனம் தான் பதில் தந்தாய்;
இப்போது என் மௌனத்திற்கு மட்டும்
என்ன புதிய பதிலைத் தந்துவிடப் போகிறாய்?
காதல் தான் ஒருநாள் மருந்தாகும் என்று
இன்னும் உனக்காகவே காத்திருக்கிறேன்!
நீ உதறிச் செல்லும் உன் ஆடையின் தூசிகளோ
ஆயிரம் நினைவுகளை என்னிடம் சொல்லிச் செல்கின்றன;
உன் நினைவுகளில் கரைந்து போகும் என் மேல் – அந்த
ஒரு துளி தூசி அளவு கூட இடமில்லையா உன் மனதில்?
உளமாற உன்னை நேசித்தேன்... உன் அன்பை மட்டும்தான்
யாசித்தேன்! உன் கடைக்கண் பார்வை கூட கிடைக்காத
நிலையில் இன்று தனிமையில் யோசிக்கிறேன்...
என் வார்த்தைகளும் வீண்தான்...
என் மௌனமும் வீண்தான் என்று!
ஆனாலும்... என் காதல் மட்டும் வீணாகாது என
இப்போதும் நம்பிக்கையோடு காத்திருக்கிறேன்;
நீ சில நொடிகள் நின்று சென்ற அந்த இடத்தில் – நீ
விட்டுச் சென்ற உன் வாசனையோடு!




என் காதல்மொழி உனக்கு என்றாவது புரியும்.
உலர்ந்து போன என் இதயம் நீ தரும் ஈரமான
வார்த்தைகளில் நனைந்து போக தான்
காத்திருக்கிறது.

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.

# நூல் விமர்சனம்

**தன்மானத் தமிழ் போற்றி!**
நூலாசிரியர் : கவிமாமணி முனைவர் இரா. வரதராசன்
நூல் மதிப்புரை : கவிஞர் இரா. இரவி
ஜோஷிகா பதிப்பகம், 2/677 ஏ, நல்லசிவன் குறுக்குச்சாலை, வைகை சதுக்கம், வி.பி. சிந்தன் நகர், வேடர் புளியங்குளம், மதுரை. பக்கங்கள் : 74, விலை : ரூ.100







கவிமாமணி முனைவர் இரா. வரதராசன் அவர்கள் மாமதுரைக் கவிஞர் பேரவையின் தலைவர் கவிமாமணி சி. வீரபாண்டியத்தென்னவன் தலைமையில் நடந்த கவியரங்குகளில் தவறாமல் கலந்துகொண்டு கவிதை வாசிப்பவர். அவ்வாறு வாசித்த கவிதைகளையும் பல்வேறு கவியரங்குகளில் கலந்து கொண்டு பாடிய கவிதைகளைத் தொகுத்து நூலாக்கி உள்ளார். 51 தலைப்புகளில் கவிதைகள் உள்ளன.

தலைப்புகளைப் படித்தால் தமிழ்ப்பற்று வரும் அளவிற்கு மிகச்சிறப்பான தலைப்புகள். உலகின் முதல் மொழியான தமிழ்மொழியை போற்றிப் பாராட்டி கவிதைகள் வடித்துள்ளார். தமிழ்மொழிக்கு வந்துள்ள தடைகளையும் எடுத்து இயம்பி உள்ளார். நூலாசிரியர் பல்வேறு பட்டங்கள் பெற்ற கல்விப்புலமை மிக்கவர். கவியாற்றல் மூலம் தமிழ் விருந்து, கவி விருந்து வைத்துள்ளார். நூலை வடிவமைத்த கவிமாமணி சாந்தி திருநாவுக்கரசு அகவுரை வழங்கி உள்ளார். சந்தக்கவிஞர் சக்கந்தி நா. வேலுச்சாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கி உள்ளார். கவிபாரதி கு.கி. கங்காதரன் நட்புரை வழங்கி உள்ளார்.

பதச்சோறாக நூலிலிருந்து சில வரிகள் உங்கள் பார்வைக்கு:

தமிழ்மொழியில் மாற்றுமொழி கலப்பதேன்? தனித்தமிழ் போற்றுகிற தருணமெலாம் இன்றிருக்க தயவின்றிப் பிறமொழிமேல் தாகமும் பிறப்பதேனோ? கனித்தமிழ், கன்னித்தமிழ், காலமதைக் கடந்ததென கருத்தோடு சொல்லிவிட்டு கைக்குள்ளே பிறமொழியா? முதல் கவிதையே முத்தாய்ப்பாக உள்ளது. தமிழா தமிழை தமிழாகப் பேசு, பிறமொழிச் சொற்களை கலக்காமல் பேசு என எழுதி அறிவுறுத்திய விதம் சிறப்பு. பாராட்டுகள்.

தமிழ் காக்கும் தகுந்த வழி!
தருக்கம் வேண்டாம் தமிழ்மணம் குறைக்கவும் வேண்டாம் நெருக்கம் கூட்டி நேர்மையுடன் தமிழ் காக்கச் சூளுரைப்பீர்!தமிழர்கள் யாவரும் தமிழைக் காத்திட வேண்டும், போற்றிட வேண்டும், பாராட்டிட வேண்டும் என தமிழுணர்வு கவிதைகள் மூலம் விதைத்து உள்ளார்.

செழுமைமிகு தமிழுக்கேன் சமஸ்கிருத எழுத்துக்கள்?

சங்கம் வளர்த்த தமிழ் அந்நாள்! சங்கமதில் வளர்த்த தமிழ் ஏற்றம்பல கண்ட தமிழ் அங்கம் எல்லாம் துடிக்குதய்யா தமிழின் இன்றைய நிலை எண்ணி! தமிழில் வடமொழி எழுத்துகளை, சொற்களை சிலர் வலிந்து எழுதி வருகின்றனர். தமிழ்க்கொலையை நாளும் செய்து வருகின்றனர். தமிழில் பிறமொழி எழுத்துக்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. தமிழிலேயே ஏராளமான எழுத்துக்கள் உள்ளன. எழுத்துக்கோ, சொற்களுக்கோ தமிழில் பஞ்சம் இல்லை. என்ன இல்லை நம் தமிழ்மொழியில், ஏன் கையை ஏந்த வேண்டும் பிறமொழியில் என உரக்கப் பாடி உள்ளார். பாராட்டுகள்.

எண்ணும் எழுத்தும் இணைந்ததே தமிழ்மொழி! கண்கள் இரண்டில் ஒன்றை இழந்தால் பார்வை சற்று மாறிடுமே எண்கள் படைக்கும் நூலான தமிழில் சோதிடக் கணிதம் ஒன்றாகும்.

தொல்காப்பியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழுக்கான இலக்கணத்தை எழுதி வைத்துள்ளார். இலக்கணமுள்ள உயர்ந்த மொழி நம் செம்மொழி, தமிழ்மொழி. வளமிக்க தமிழ்மொழியில் வறட்சி என்பது இல்லவே இல்லை. உணவில் கலப்படம் உடலுக்குக் கேடு, மொழியில் கலப்படம் மொழிக் கேடு என கவிதைகள் முழுவதும் தமிழ்மொழியில் கலப்பு வேண்டாம் என்ற கருத்தை வலியுறுத்தும் விதமாக கவிதைகள் வடித்துள்ளார், பாராட்டுகள்.

சொல் விளையாட்டுப் போல வளமான சொற்கள் கொண்டு சந்தக் கவியென ஓசை நயத்துடன் பல்வேறு கவிதைகள் வடித்துள்ளார். ஆழ்ந்து யோசித்து அற்புதக் கவிதைகள் பாடி உள்ளார்.தமிழராய்ப் பார்த்து திருந்தாவிட்டால்? தெருமுனை பேச்சில் நீ பிறமொழி பேசி உன் தமிழை நஞ்சாக்க ஏன் முனைந்தாய்? அருமைமிகு தமிழ்ச்சொல் ஆயிரம் இருக்க அயல்மொழி சொல்லேன் ஒப்பிடுவாய்?

தமிழன் வாயில் தமிழ் இல்லை குறிப்பாக தமிழ்நாட்டுத் தமிழன் வாயில் தமிழ் இல்லை. தமிங்கிலமே பேசி வருகிறான். ஆங்கிலச் சொற்களையும் வடமொழிகளையும் கலந்து பேசி மொழிக்கலப்பு செய்து செம்மொழி தமிழ்மொழியை சீரழித்து வருவதற்கு கண்டனத்தை நன்கு பதிவு செய்துள்ளார்.

தமிழ் சிதைந்தால் தமிழினமே சிதைந்து போகும் தமிழை வணங்கிட நாளும் உந்தன் தரமே உயர்ந்திடும் மேலும் இன்பத் தமிழொன்றைத் தனதாக்கி தடம்மாறி திரியும் நிலை தகுமா நலம் மிகுமா?

காவடிச் சிந்து பாவகையில் சிறந்த கவிதை எழுதி உள்ளார். பாராட்டுகள். நூல் முழுவதும் தமிழுக்கு வரும் கேடுகளைச் சாடி தமிழ் வளர்க்கும் வழிவகைகளைக் கூறி தமிழன்னைக்கு பாமாலை சூட்டி உள்ளார்.

எங்கள் தமிழ் எங்கும் தமிழ்!
மன்றத்தில் பிறமொழிச் சொல் தவிர்த்த தில்லை மதிகெட்ட மாந்தரிங்கு திருந்த வில்லை குன்றத்தில் ஏற்றிவைத்த விளக்காய் நின்று குணமாக நற்தமிழைக் காத்தல் நன்றே!

பல கவிதைகள் பாடியும் மேடைகளில் வலியுறுத்தியும் மக்கள் திருந்தியபாடில்லை. ஊடகங்களிலும் தமிழ்க்கொலை நாளும் நடந்து வருகிறது. மனம் கொதித்து பொறுத்தது போதும் பொங்கி எழு தமிழா என்பதாக கவிதைகள் முழுவதும் சிறப்புமிக்க செந்தமிழை சிதைக்கலாமா? தமிழை தமிழாகப் பேசு, தமிழாக எழுது என தமிழ்நாட்டுத் தமிழருக்கு அறிவுறுத்தும் வண்ணம் அற்புதமாக கவிதைகள் வடித்துள்ளார்.

நூலாசிரியர் கவிமாமணி முனைவர் இரா. வரதராசன் அவர்கள் தொடர்ந்து நூல்கள் எழுதிட வேண்டும். வெளியிட வேண்டும். தமிழ்மொழி அழிப்புக்கு மொழிக்கலப்பிற்கு முடிவு கட்ட வேண்டும், வாழ்த்துக்கள்.




## பரிசு.

பரிசு என்பது பொருள் மட்டும்
அல்ல. பாசம் நிறைந்த
மனத்தின் வெளிப்பாடு.
பெறப்படும் பொருள்
சிறியதாக இருந்தாலும்
அதில் இருக்கும் அன்பு
மிகப் பெரியது. பரிசு
கொடுப்பவருக்கும்
மகிழ்ச்சியைத் தரும்.
பரிசு பெறும் மனத்தில்
உற்சாகம் மலரும்.
நினைவுகளை நெஞ்சில்
நிறுத்தி நெகிழ்ச்சி தரும்
இனிய தருணம் அது.
அன்புடன் கொடுக்கப்படும்
பரிசு இதயங்களை
இணைக்கும் பாலம்.
பரிசு விலைமதிப்பற்றது.
விளையாட்டுப் போட்டியில்
வெற்றி பெறுபவருக்கு



வேலை
கிடைப்பதற்கான
வாய்ப்பையும்
உருவாக்கித்
தரும்.

உ.மு.ந.ராசன்
கலாமணி
கோயம்புத்தூர்.

---

ஒரு பிரதான வாயிலைக்
கடப்பது போல
வார்த்தைகள் மிக
எச்சரிக்கையாக
உன் உதடுகளைக்
கடக்கின்றன.. என்னை
நிராகரித்தபின் மீண்டும்
சந்திக்க நேரும்போதெல்லாம்.
அதெப்படி சாத்தியமாகிறது
ப்ரியம் சொட்டும் விழிகளில்
அன்னிய பாவனை
அப்பிக் கொள்கிறாய்



இயல்பாய்.
உறுத்தலற்ற
மனசு
அத்தனை
சுலபமாகவா
வாய்க்கிறது
.. கசிகிற
கண்களை நீ அறியாமல்
துடைக்கப் பழகிக்
கொள்கிறேன் இனி.

ரிஷபன்

---



மயிலிறகால்
கன்னம் வருடி
மயங்கிக் கிடக்கிறாய் நீ...
மயிலிறகோ
வருடும் சாக்கில்



கொஞ்சம்
கொஞ்சமாய்த்
திருடுகிறது
உன்
கன்னத்தை!

சு. அருண்
பிரகாஷ்

---

## குறள்வெண்செந்துறை

## சொத்து

கல்வி நம்மின் சொத்தாகும்
கல்வி வாழ்வின் வித்தாகும்!
நல்ல ஒழுக்கம் சொத்தாகும்
நல்ல குணமே பற்றாகும்!

பெற்றோர் நம்மின்
சொத்தாகும் பெருமை
வாய்ந்த முத்தாகும்!
சுற்றம் நட்பு சொத்தாகும்
சொல்லும் நலமே பற்றாகும்!

## முட்டாள்கள் நாள்!

தீங்கற்ற தந்திரங்கள்
தேர்ந்தேதான் செய்திடுவார்
பாங்குடன் ஏமாற்றிப்
பாடுவர்!--ஆங்கேதான்
கேலிசெய்து கூத்தாடிக்
கோமாளி யாகவே
கோலமுடன் ஆடுவர் கூறு!

குறும்புடன் கேளிக்கை
கூறியே ஆடிச்
சிறப்பாகக் காண்பர்!



செழிப்பாய்..
அறிந்தேதான்
முட்டாளாய்
ஆக்குவர்
மேன்மைத்
தனமாக
திட்டமிட்டே
ஆடுவர்தேர்ந்து!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

---

## காதல் !

நெடிலில் தொடங்கி
மெய்யில் முடியும்
சொல் மட்டுமல்ல !
நெடிய உறவாகத் தொடர்ந்து
மெய்யான அன்பை
பொழிவது! இன்பங்கள்
எத்தனையோ இவ்வுலகில்
இருந்தாலும் இனிமையான
காதல் இன்பத்திற்கு
இணை இவ்வுலகில் இல்லை!
கூடு விட்டு கூடு பாயும்
எண்ண அலை !
தனிமையில் பேச வைக்கும்
பாச வலை !
மகிழ்ச்சிப் போதையில்
மிதக்க வைக்கும் கலை !
கோடிப் பணம் தந்தாலும்
பிடிக்காத நிலை !
இறுதிவரை உறுதியாக
இருந்தால்
அசைக்க முடியாத மலை !

## அசை போடுகிறேன் !

நீயும் நானும் பேசிய
நிமிடங்களும் சந்தித்த
நாட்களும் மிகவும்
குறைவுதான் ! மூச்சு
இருக்கும் வரை நினைவு
இருக்கும் ! பசுமையான
நினைவுகள் அவை !
மாடு என நானும் அடிக்கடி
அசை போடுகிறேன்
நினைவுகளை!

## சொல்வதில்லை !

பிரிந்து வருடங்கள்
பல கடந்தும் மனதில் ,
நினைவில் வருடி விட்டு
செல்கிறாள் ! தனிமையான
நேரங்களில் நினைவில் வந்து
செல்கிறாள் !
மறக்க நினைத்தாலும்
மறக்க முடிவதில்லை !
மூளையின் மூலையில் இருந்து
மூழ்கடிக்கிறாள் !
மறந்து விட்டதாக
உதடுகள் சொன்னபோதும்
உள்ளம் ஒருபோதும்
சொல்வதில்லை !

## மன்னிக்கட்டும் கலாம் !

தூங்கும்போது காண்பதல்ல
கனவு ! தூங்கவிடாமல்
செய்வதே கனவு !
படித்தேன் கலாம் வாசகம் !
தூங்கும்போது காணும்
கனவில் அவள் !
தூங்கவிடாமல் செய்யும்
கனவிலும் அவள் !
கலாம் என்னை
மன்னிக்கட்டும் !

## இனிமை ! இளமை !

உனக்கும் எனக்குமான
நட்பு காதலாகி அடுத்தக்
கட்டம் அடைந்தபோது
சின்னச் சின்ன தீண்டல்
தொடங்கியது !
தீயாய் எரிந்தது !
எண்ணிக்கையில் குறைவு
என்றாலும் எண்ணங்களில்
மிக நிறைவு !

## உண்மை !

பார்த்தும் காதலா ?என்று
பார்த்தவர்களிடம் கேலி
பேசியவன் ! உன்னைப்
பார்த்ததும் காதல் வந்தது
உன்னிடம் தாமதமாகத்தான்
சொன்னேன் !
காதலை ஏற்றுக் கொண்ட
நீயும் சொன்னாய் !
பார்த்த அன்றே காதல்
மலர்ந்த உண்மையை !

## நம்பிக்கை !

தூக்குத் தண்டனை
கைதியிடம் நிறைவேறாத
ஆசை என்ன ? என்பார்கள் !
முடிந்தால் நிறைவேற்றுகள் !
நானும் தூக்குத் தண்டனை
கைதியாக விரும்புகின்றேன் !




உன்னை ஒரு முறை பார்க்க
ஆசை நிறைவேற்றுங்கள்
என்பேன் ! உன்னை
அழைத்து வந்து
என்னிடம் காடுவார்கள் !
இறக்கும் முன் ஒரு முறை
உன்னை பார்த்து விடலாம் !

## என்னவள் !

அங்கிருந்து என்னை
இங்கு இயக்குகின்றாள் !
எங்கிருந்தபோதும்
என்னுள் இருக்கின்றாள் !
எழுச்சி தருகின்றாள் !
மனக்கவலை வரும்போது
மனத்தெம்பு தருகின்றாள் !
சோர்வு வரும்போது
சுறுசுறுப்பு தருகின்றாள் !
துன்பம் வரும்போது
இன்பம் தருகின்றாள் !
தடுக்கி விழும்போது
திரும்ப எழ வைக்கிறாள் !
விரக்தி வரும்போது
சக்தி தருகின்றாள் !
என்னுள் என் நினைவுள்
கலந்த இனியவள் !
அவள் என்னவள் !

## பிடிக்காத புத்தர்

புத்தரை எல்லோருக்கும்
பிடிக்கும் ! ஆனால்
எனக்குப் புத்தரைப்
பிடிக்காது ! என்னவளே
உன் மீது அளவற்ற ஆசை
வைத்திருக்கும் எனக்கு
"ஆசையை அறவே அழி
" என்ற புத்தர் போதனை
பிடிக்கவில்லை .அதனால்
புத்தரையும் பிடிக்கவில்லை !

## இதமான மனசு !

பேசும் போது உன் விரல்
பட்டு என் கண்கள்
கலங்கியது !
உடன் நீ உன் கைக்குட்டை
எடுத்து உன் வாயில் வைத்து
ஊதி விட்டு என் கண்ணில்
ஒத்தினாய் ! இதமானது கண்
மட்டுமல்ல என் மனசும்தான் !
இப்படி ஒரு சுகத்திற்காக
எத்தனை முறையும்
விரல்கள் விழிகளில் படலாம் !
கல்வெட்டாகத் பதிந்தது
இந்த நிகழ்வும் நம் உறவும் !

## கண்டுபிடித்தாள் கள்ளி!

சேலை ஒன்று என்னவளுக்கு
வாங்கித் தந்தேன் !
எனக்காக வாங்கியதா?
என்றாள் ! உனக்காக
நெய்தது ! என்றேன் !
கைத்தறிச்சேலை என்பதை
உயர்வாகச் சொல்கிறாய்!
என்றாள் ! கைத்தறி
உயர்வானதுதான் ! என்றேன்!
பட்டுச்சேலை வாங்கப் பணம்
இல்லை என்பது தெரியும்!
என்றாள் ! மனதிற்குள் !
கண்டுபிடித்தாள் கள்ளி !
என்பதை நினைத்துக்
கொண்டு பட்டுச்சேலையை
விட கைத்தறிச்சேலைதான்
உனக்கு அழகு என்றேன் !
பட்டுக்கு எதற்கடி பட்டு
என்றேன் !
பட்டென சிவந்து நின்றாள் !

## தண்ணீர் குடிப்பாயாக !

நான் சாப்பிடும் போது
பொறை ஏறியது !
என் அம்மா உடன்
தலையில் தட்டி யாரோ
நினைக்கிறார்கள்
என்றார்கள் ! நினைப்பது நீ
என்பது எனக்குத் தெரியும் !
உடன் நான் உன்னை
நினைத்தேன் ! உனக்கும்
பொறை ஏறி இருக்கும் !
இங்கு நான் தண்ணீர் குடித்து
விட்டேன் அங்கு நீயும்
தண்ணீர் குடிப்பாயாக

## விழிப்படம் !


இருவரும் சேர்ந்து
ஒரே ஒரு திரைப்படம்தான்
பார்த்தோம் ! திரைப்படம்
பார்த்த நேரத்தை விட
அவளை நான் பார்த்த நேரமும்
என்னை அவள் பார்த்த
நேரமும்தான் அதிகம் !
இதழ்களை விட
விழிகள்தான் அடிக்கடி
பேசிக் கொண்டன !
காதலர்கள் ஏன்? திரைப்படம்
செல்கிறார்கள் என்பது
அன்றுதான் விளங்கியது
எனக்கு !

## விலைமதிப்பற்ற பரிசு !

அவளிடம் பல முறை
பரிசு வாங்கி இருக்கிறேன் !
நானும் அவளுக்கு பல முறை
பரிசு வழங்கி இருக்கிறேன் !
உருவம் இல்லாத பரிசு !
உணர்ச்சி மிகுந்த பரிசு !
நினைக்கும் போதெல்லாம்
இனிக்கும் பரிசு !
சகாராவில் பாய்ந்த
நயாகராவாக
அவள் முத்தம்தான்
விலைமதிப்பற்ற பரிசு !

## அறிவாளி அவள் !


என்னவள் அழகை விட
அறிவில் சிறந்தவள் !
என்றேன் . நண்பன்
இருக்காதே ! என்றான் .
அறிவில் சிறந்தவள்
எப்படியடா உன்னை
காதலிப்பாள் ! என்றான் .
பொறாமையில்
பேசும் நண்பனை
பொருட்படுத்தவில்லை நான் !
என்னவள் அழகி என்பதை



விட அறிவாளி
என்பதால்தான்
எனக்குப்
பிடித்தது
அவளை!

கவிஞர்
இரா .இரவி

---



1. எவ்வளவு சம்பாதித்தாய்
என்பதை விட எவ்வளவு
சந்தோஷமாக வாழ்கிறோம்
என்பதே முக்கியம்

2. ஒழுக்கத்தின் மீது
அக்கறை இல்லாதவன்
குற்றவாளி உடலின் மீது
அக்கறை இல்லாதவன்
நோயாளி தன்மீது அக்கறை
இல்லாதவன் ஏமாளி

3. தத்தளிக்கும் எறும்புக்கு
எங்கிருந்தோ இலையை
அனுப்புகிறது ஒரு மரம்

4.பரோல் இல்லாத ஒரு சிறை
திருமணம்

5. நம்ப கூடாதவனை
நம்பிக் கொள்வதும் தவறு
நம்பக்கூடியவனை நம்பாமல்
கெடுவதும் தவறு

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

---



## மதிப்பு புரிந்தது

மெல்லிய இசை மனதில் மலர
சந்தோசம் பூத்ததால் அதன்
மதிப்பு புரிந்து வாழ்க்கையில்
முன்னேறிய பாதையை
திரும்பிப் பார்க்க வளர்ந்த
வாழ்க்கை புரிந்தது
மனிதனுக்கு பண்பே
பெருமை என்றவுடன்
பண்பின் பெருமை புரிந்தது
எதுவுமே அத்த இடத்தில்
இருந்தால் அதன்
மதிப்பு உயரும் என்ற
உண்மை புரிந்ததும்
எல்லா மதிப்பும் புரிந்தது
பார்வையில்லாதவரை
பார்க்கும்போது நம்
பார்வையின் மதிப்பு புரிந்தது
எதுவும் அதன்இடத்திலிருந்து
அதன் மதிப்பு உயரும் என்ற
உண்மை புரிந்தது
மதிப்பு புரிந்ததால்
வாழ்க்கையின் தரம் புரிந்தது



எல்லாம்
புரிந்ததால்
வாழ்க்கையில்
நிம்மதி
கிடைத்தது

உஷா
முத்துராமன்

---

உலகம் முழுமைக்கும்
ஒரு புத்தாண்டு அது
ஆங்கில புத்தாண்டு
கொண்டாடுவோம்
உலகோடு மொழிக்கு ஒரு
புத்தாண்டு செம்மொழியாம்
தமிழுக்கு தமிழ் புத்தாண்டு
தமிழோடு நிதிக்கென்று ஒரு
ஆண்டு நிதி மேலாண்மை
செய்திடவே நிதியாண்டு
என்றிடுவர் முடிந்ததொரு
நிதியாண்டு குறையென்று
பெரிதுமில்லை நிறைவான
நிறைகளுமில்லை ஆயினும்
ஒன்று ஆசைகள் நூறும்
அடைந்திடல் வேண்டும்
நிதி வளம் பெருகி



நிதிச் சுமை
குறைந்து
நல்லன
ஆகட்டும்
புத்தாண்டில்

ஓம் குமார்
P N

---



1. நீ நல்லவனா
அல்லது கெட்டவனா
என்பது முக்கியம் அல்ல
உன்னை நம்புகிறவருக்கு
உண்மையாக இரு அதுதான்
முக்கியம்

2. நல்ல நண்பனை
தேடுவதை விட
நீ நல்ல நண்பனாக இரு
கட்டாயம் உன்னை தேடி
நல்ல நட்புகள் அமையும்

3. உன் தகுதியை
தீர்மானிப்பது
ஆண்டவனும் இல்லை
அடுத்தவனும் இல்லை
உன் உழைப்பு மட்டும்தான்

4. தண்ணீர் கீழ் நோக்கி
பாய்வதால் தாழ்ந்து
போவது இல்லை நெருப்பு
மேல்நோக்கி எரிவதால்
உயர்ந்ததும் இல்லை
இயல்புகள் வெவ்வேறு



5.என்னை
பார் யோகம்
வரும் என்று
என்னை
வளர்த்தவனுக்கு
வராத யோகம்
பார்ப்பவர்களுக்கு எப்படி
வரும் என்றது கழுதை

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி

---




## யாதும் ஊரு.!

நான் பார்த்த ஊரு எத்தனை
ஊரு.. திருமயம் தான் நான்
பிறந்த ஊரு.!

பக்கத்திலே பாரு புதுக்
கோட்டை.. மனுச உடம்பு
பாரு மணலூருப் பேட்டை!

காவேரி பாய்ந்து வரும்
திருச்சி.. என் கனவுப்
பறவை.. சிறகு விரிச்சி.!

சென்றதடா அந்த ஊரு
சேலம்.. தட்டுங்கடா
தஞ்சாவூரு மேளம்.!

கவிதையென்னும் பாதை
வந்த நாமக்கல்லு!
கலங்காம துணிவோடு
மலையேறி நில்லு!

பழனிமலை முருகன் பக்கம்
திண்டுக்கல்லு.. நான்
பாவலனாய் மாறிய ஊர்
ஆறாங்கல்லு.!

கருவூரு கண்டதெல்லாம்
கரூரு.. ஊர் ஊரா சுத்தி
வந்தேன் வேலூரு.!

வீழ்ந்தேனே ஆசையிலே
பள்ளத்தூரு.. விடாமலே
எழுந்த ஊரு மேலூரு.!

ஆத்தங்குடி..குன்னக்குடி..
காரைக்குடி...!கண்ணதாசன்
பாட்டுகளைக் கரைத்துக்குடி!

என்னைப் பெத்த
ஆத்தாவுக்கு
சென்னை.. அவள்தானே
வளர்த்தெடுத்தாள் என்னை.!



இந்த
நாளில் நான்
இருக்கேன்
பெங்களூரு!
என்னைப்
போல
கவிஞனுக்கு
யாதும் ஊரு..!

வே.கல்யாண்குமார்.

---

## உழைப்பே உயர்வு

நீ எவ்ளோ தான் வேலை
செய்தாலும் இந்த உலகம்
உன்னை குறை செல்லும்...
வேலை செய்யாமலே
அவர்களுக்கு தாளம் போட்டு
பார் உன்னை விட சிறந்தவர்



யாரும்
இல்லை என்று
புகழாரம்
பேசுவார்கள்....
மனிதன்
வாழ்வது சில
காலம் அதில்
பாவங்களை சேர்க்காமல்
வாழ்வும்

P.Meenakshi pandiyan

---

## ஊடலும் கூடலும்

பிரிஞ்சு கெடந்திருந்தாலும்
புருஷனின் ருசியறிவாள்
பிரிவெங்கனம் முடியும்
உறவெப்போது தழையும்
என்பதல்லவோ அவளின்
தவம் தன் அன்பை, காதலை
உண்ணும் உணவில்
சமைத்தளிப்பாள்;
உவகை மிகுதியால்
தன்னையும் சேர்த்தே
அளிப்பாள்!

KMD. முத்துக்குமார்,
மைசூர்.

---

## விதிக்கு விதி எழுது...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே! நீ
விதி என்னும் நாணயத்தின்
அறிவியல் பக்கமா ?
ஆன்மீகப் பக்கமா?
ஆகாயத்தின் கீழுள்ள
அனைத்துக்கும் வெட்டு
ஒன்று துண்டு இரண்டென்று
தெள்ளத் தெளிவாக
தேனமுதாய் சொல்லி
நல்வழி காட்டும் நம்பாட்டன்
அய்யன் திறன் மிகு
திருவள்ளுவன் கூட
விதி வாய்ப்பாட்டில் மட்டும்
இருவழிப் பாதை
இணக்கத்தில் சற்று
சமரசம் பேணி
தடுமாறித் தான்
தத்துவம் பகன்றான்...
ஒப்பிலா வலிமை மிக்க
ஊழையும் வெல்லும்
ஆற்றல் ஓய்வில்லா
உழைப்புக்கு உண்டென்று
உறுதியாய் சொல்லி
ஊக்கப் பண்புக்கு
உயர்வு ஊட்டினான்...
ஊழ் அதிகாரத்திலோ
உச்சரிப்பை மாற்றினான்...
ஆக்கமும் அழிவும்
விதியின் வழியே
அரங்கேறும் என்று
அடித்துச் சொல்லி
தோசையைத் திருப்பிப்
போட்டு திசை மாற்றினான்...
எந்தவொரு
விசைக்கும் இங்கே
சமசுத்த அளவில்
எதிர்த் தாக்கம்
உண்டென்று உரத்துச்
சொன்ன
உயிர் விஞ்ஞானத்தை
உதறி விடாமல் உள்ளடக்கிக்
கொண்டது தானே
வேத விருட்சங்களின்
வீரிய வெளிச்சத்தில்
வேர்ப் பிடித்து நிலைத்த
உயர் மெய்ஞ்ஞானம்...
ஆகவே இளைஞனே...
அறிவியலும் ஆன்மீகமும்
எதிரும் புதிரும் இல்லை...
கிழக்கும் மேற்கும் இல்லை...
கிழக்கின் கிழக்கு...
மேற்கின் மேற்கு என்று
ஆழ் சிந்தனையில்
அதிநுட்பமாய் உணர்...
தப்புத் தாளத்தில் தடம் மாறி
தலை ஆட்டாமல்,
தெளிந்த பரப்பில்
தடம் பதித்துத் துணி..
பிரபஞ்சம் முழுவதுமே
படைத்தவனின் பலே
ராஜ்ஜியம்...பரம்பொருள்
படைப்பில் பேதம் என்று
எதுவும் இல்லை...
விதியின் தளத்தில்
ஊடாடும் வெற்றியும்
தோல்வியும் அதில்
பொருட்டே இல்லை
என்பதைப் பூரணமாய்
புரிந்து கொள்...
முயற்சி ஒன்றை மட்டும்
மூச்சு உள்ளவரை
முடியும் என்ற திசைப் பற்றி
பயணித்துக் கொண்டே
இரு...பக்குவத்தோடு
பரவசமும் பண்பாட்டு
கவசங்களும் படைத்தவன்



அருளிய பாதுகாப்புப்
படை போல் உன்
ஆயுளுக்கும் நிச்சயம்
அணி வகுத்து வரும்.

நெல்லை குரலோன்
பொட்டல் புதூர்

---



ஓ... பெண்ணே..!
நீ என் தோழி உன்னிடம்
எல்லாம் சொல்வேன்

நீ என் தாய்
நீ எனக்கு எல்லாம்
தருவாய்

நீ என் மகள்
உன் விருப்பம்
நிறைவேற்றுவேன்

நீ என் மொழி
நான் உயிராவேன்

நீ என் விழி
நான் இமையாவேன்

நீ என் தோட்டம்
நான் வேலியாவேன்

நீ என் வானம்
நான் விண்மீனாவேன்

நீ என் கடல்
நான் அலையாவேன்

நீ என் தென்றல்
நான் பூந்தோட்டம் ஆவேன்

நீ என் உயிர்
நான் உடலாவேன்
நீ என் நெருப்பு
நான் அடுப்பாவேன்

நீ என் இரவு
நான் நிலவாவேன்

நீ என் மழை
நான் மரமாவேன்

நீ என் மலை
நான் முகிலாவேன்

நீ என் ஆழி
நான் அலையாவேன்



நீ என் புல்லாங்குழல்
நான் இசையாவேன்

புதுவைத்
தமிழ்நெஞ்சன்

தமிழ்நாடு இ பேப்பர்.காம்


Happy Birthday
K.VIGNESH KRISHNAN


ஆட்கள் தேவை
வார சம்பளத்திற்கு
லேபர் வேலைக்கு
ஆட்கள் தேவை
உணவு மற்றும் தங்கும்
இடம் இலவசம்
OMR பெருங்குடி
சென்னை
Contact
9790979539


PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருட்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009
WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF
SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK
GUARANTEE


just499
REAL ESTATE
SOFTWARE
We Provide Complete Real
Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
Minimum 5 years of experience in print media ad sales
Proven experience in space selling
Strong background in field sales and client acquisition
Excellent communication and negotiation skills
If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road, Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711


உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.



WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756



LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI


PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்




# தேர்வு எழுதப் போகும் மாணவர்களுக்காக



1 . சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் ஆகவே அமைதியான தெளிவான மனதுக்கு மாறவேண்டும் .

2. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்கிற தன்நம்பிக்கை வேண்டும் .

3. தெய்வத்தால் ஆகாது எனினும் மெய் வருத்த கூலி தரும் என்பார்கள் .

4. பாடங்களை படிக்க கடுமையாக உழைக்க வேண்டும் , எளிமையாக புரிந்து கொள்ள வேண்டும்.

5. நல்ல ஓய்வு உறக்கம் மாற்று சிந்தனையும் வேண்டும் .

6. தினமும் கொஞ்சம் கொஞ்சமாக படித்து பாரத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

7 . படித்ததை மீண்டும் ஒரு முறை ஓய்வு நேரத்தில் அசை போட்டு பார்க்க வேண்டும் .

8. விடிற் காலை படிப்பு உயர்வை தரும் , நல்லிரவு படிப்பு உடலில் சோர்வையே தரும்.

9. ஆலயம் சென்று வழிபாடு செய்து விட்டு வந்து படிக்க அமரலாம்.

10. தியானம் யோகா உடற்பயிற்சி செய்த பிறகு படிக்க அமரலாம்.

11. நண்பர்கள் அமர்ந்து குரூப் ஸ்டெடி செய்வது உயர்வு தரும்.

12. டீ.வி., செல்போன் பார்ப்பதை குறைத்துக் கொண்டால் எண்ணிய வெற்றி உறுதி மாணவ, மாணவியர் செல்வங்களே ....."

# மீம்ஸ்







-ரிஷிவந்தியா,தஞ்சாவூர்.



## விடுகதை

| | |
|---|---|
| அம்மா பின்னிய நூலை அவிழ்த்தால் போச்சு. அது என்ன? | இடியாப்பம் |
| தண்ணீரில் மிதக்குது கட்டழகிய வீடுகள் -அது என்ன? | கப்பல்கள் |
| தொட்டால் மணக்கும், சுவைத்தால் புளிக்கும். அது என்ன? | எழுமிச்சம்பழம் |
| இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன? | கடிகாரம் |
| உணவு கொடுத்தால் வளரும்; நீர் கொடுத்தால் அழியும். அது என்ன? | நெருப்பு |
| ஊசி போல் இருப்பான், ஊரையே எரிப்பான். அது என்ன? | தீக்குச்சி |

# பேருந்தில் துண்டு...



அண்மையில் ஒரு அரசு பேருந்தில் ஏறினேன். இருக்கைகள் காலியாக இருந்ததன. நான் உட்காரும் இருக்கைக்கு அருகில் ஒரு துண்டு கிடந்தது. அதை எடுத்து பத்திரப்படுத்தினேன். என்னுடன் வந்திருந்த என் தோழி...".... அந்த துண்டை கீழே போடுங்கள். முகம் தெரியாதவர்கள் துண்டை எல்லாம் எடுக்கக்கூடாது...!" என்று கூறினார்.".. நான் இந்த துண்டை எனக்காக எடுத்துக் கொள்ளவில்லை. பேருந்து நிலையத்தில் எத்தனையோ பல பெண்களும் ஆண்களும் உடுத்த துணி இல்லாமல் அரை நிர்வாணமாக இருக்கிறார்கள் அவர்களிடம் இந்த துண்டை கொடுக்கலாம்..!" என்று கூறினேன். என்னுடைய முயற்சியை தோழி பெரிதும் பாராட்டினார்கள்.





# ஜோக்ஸ்

சாப்பிடும் இடத்தில்..

தம்பி..நீங்க பெண்ணுக்கு சொந்தமா.. மாப்பிள்ளைக்கு சொந்தமா?

எனக்கு இன்னும் கல்யாணம் ஆகல. பொண்ணு..தாங்க. சொந்தம் ஆகலாம்.

==================
==================
========


அத்தை.. சினிமாவுக்கு போனீர்களே...படம் எப்படி?.

சிரிச்சு..சிரிச்சு ..பாதி உயிர் போய்விட்டது.

அப்ப..மறுபடியும் போங்க.

==================
==================
========

கூட்டணி..பற்றி பேச போன



தலைவர்கள் ..ஏன் கோபமாக..திரும்ப வந்துவிட்டார்கள்.

கட்சி கதவு மூடி இருந்ததாம்.

==================
==================
==========

யாரும்..கூட்டணிக்கு வரவில்லை.

பக்கத்து மாநில கட்சியுடன் கூட்டணி வைக்கலாம் தலைவரே..

==================

==================
==================
========

ஓடி போகலாமா...?. வரதட்சனை.. செய்து என்னை கட்டிக்கொடுக்க.. அப்பாவுக்கு வசதியில்லை. கொஞ்சம் காத்திருங்க.. சம்மதம் தந்துவிடுவார்.



திருச்சிற்றம்பலம்சுரேஷ்

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## நாகலீலா



நாகலீலா என்பது ஸ்ரீகிருஷ்ணரின் அபூர்வமான திவ்ய லீலைகளில் ஒன்று. யமுனை நதியில் விஷ மூட்டிய நாகராகனான காளியா வாழ்ந்து வந்தான். அந்த விஷத்தால் மனிதர்களும் மிருகங்களும் பெரிதும் துன்பப்பட்டனர். மக்கள் வேண்டிக்கேட்டு, அப்பாவியான பாலகக் கிருஷ்ணன் அந்த நதிக்குள் இறங்கி, காளியனை அடக்கி உலகை காத்தார்.

ஸ்ரீகிருஷ்ணரின் காளிய மர்த்தன லீலையை அழகாகச் சொல்வது.

கோபாலகிருஷ்ணர் அதிகாலை நேரத்தில் யமுனை நதிக்குச் செல்கிறார். அங்கு விஷ நாகராஜன் காளியன் தன் விஷ சக்தியால் நதியையே கொடியதாக மாற்றி வாழ்ந்து வருகிறான்.

கிருஷ்ணன் நாகராஜனின் வாசஸ்தலத்திற்கு செல்வதைக் கண்டு, நாகினி அவனை எச்சரிக்கிறாள்:

“இது ஆபத்தான இடம், என் கணவன் விழித்தால் உன்னை கொன்று விடுவான்.”

அவள் கிருஷ்ணனின் அழகைக் கண்டு கருணை கொண்டு, ஆபரணங்களையும் செல்வங்களையும் கொடுத்து

“இவற்றை எடுத்துக்கொண்டு போய் விடு”

என்று வேண்டுகிறாள்.

ஆனால் கிருஷ்ணன்:

“நான் நந்தகோபனின் மகன். பயப்பட நான் வந்ததில்லை,”

என்று பதில் அளிக்கிறார்.

நாகினி பூஜை செய்து காளியனை எழுப்புகிறாள்.

காளியன் கிருஷ்ணனைத் தாக்க முயன்றாலும், கிருஷ்ணன் அவன் பலம், விஷம், அகம்பாவத்தைக் களைந்து, அவன் பல உடல்களின்மேலும் தெய்வீக நடனம் ஆடி அவனை அடக்குகிறார்.

காளியன் தோற்றவுடன், அவனும் அவன் மனைவியும் கருணைக்காக கிருஷ்ணரிடம் சரணடைந்து விடுதலை பெறுகின்றனர்.

பாடலின் இறுதியில் பரமாத்மாவின் லீலைகளைப் புகழ்கிறது:

ராவணனை அழித்தவர்
காளியனை அடக்கியவர்
கம்சனை வீழ்த்தியவர்
உலகை காக்கப் பிறந்தவர்
முடிவில்:

“சூரதாஸ் உன் புகழைப் பாடுகிறார்;

நானும் உன் திருவடியில் சரணடைந்துள்ளேன்”

என்று பக்தி நிறைந்த முடிவை வழங்குகிறது.

## சுந்தர காண்டத்தின் மகிமை



வாழ்க்கையில் பிரச்சனைகள், மனச்சோர்வு, துக்கம் போன்றவை வந்தால், சுந்தர காண்ட பாராயணம் செய்வதால் அவை விலகும் என நம்பப்படுகிறது. இதனை மனம் ஒன்றியபடி படிப்பது பாராயணம் எனப்படுகிறது. சுந்தர காண்டம் முழுவதையும் படிப்பது ராமாயணத்தை முழுமையாக படிப்பதற்குச் சமம் என கூறப்படுகிறது.

வால்மீகி எழுதிய சுலோகங்களை சமஸ்கிருதத்தில் படிப்பதே வழக்கம். ஆனால் சமஸ்கிருதம் அறியாதோர் தமிழ் எழுத்தில் அவற்றை வாசித்தாலும் அதே பலன் கிடைக்கும் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

சுந்தர காண்டத்தில் அனுமனின் பயணம்

அனுமன் சீதையை தேடி இலங்கைக்கு செல்கிறார். பல தடைகள், சோதனைகள், சுரசை, சிம்ஹிகை போன்றவற்றை எதிர்கொண்டு, இறுதியில் சீதையைக் காண்கிறார். அவளிடம் ராமனின் செய்தியை தெரிவித்து, தைரியம் அளிக்கிறார். பின்னர் ராவணனிடம் ராமரின் தூதராக சென்று பேசுகிறார். அவரது வாலில் தீ வைத்தபின், இலங்கையை தீயால் சூழ்ந்துவிட்டு, திரும்பி ராமனிடம் சீதையைக் கண்டதாகச் சொல்லுகிறார். இதுவே சுந்தர காண்டத்தின் மையப் பகுதி.

ஏன் “சுந்தர காண்டம்” என்று பெயர்?

ராமாயணத்தில் எந்த காண்டத்திற்கும் கதாநாயகனின் பெயர் இல்லை. ஆனால் வால்மீகி அனுமனின் பெருமைமிகு செயல்களை நினைத்து, அவரின் பெயரில் ஒரு பகுதி இருக்கவேண்டும் என விரும்பினார். அதற்கு அனுமன் தாழ்மையுடன் மறுத்ததால், வால்மீகி அவரது அன்னை அஞ்சனை அழைத்த பெயரான “சுந்தரா” என்ற பெயரிலிருந்து “சுந்தர காண்டம்” என வைத்தார்.

“சுந்தரம்” என்றால் அழகு என்பதோடு, அது “அரசனின் தூது” என்பதையும் குறிக்கும். அனுமன் ராமனின் தூதராகச் செயல்பட்டதாலே அந்தப் பெயர் சிறந்தது.

வால்மீகி மற்றும் அனுமனின் நன்றிக்கடன்

வனவாசம் முடிந்த பிறகு, வால்மீகி இமயமலையில் நடந்தபோது பாறைகளில் அழகாக எழுதப்பட்ட ராமாயணத்தின் சில பகுதிகளை கண்டார். அவை தமது எழுத்துகளை விட நயமானதாக இருந்ததால் ஆச்சரியப்பட்டார். அதை எழுதியவர் அனுமன் என அறிந்தார்.

அனுமன், “இது எனது ராமாயணம். ராமரை சந்தித்தது முதல் பட்டாபிஷேகம் வரை நான் அனுபவித்த நிகழ்ச்சிகள் இதிலுள்ளது” என்றார்.

அதனை வாசித்த வால்மீகி, “உன் எழுத்து என் காவியத்தை மிஞ்சிவிடும்” எனக் கூறியபோது, அனுமன் உடனே தன் எழுதியதை வாலால் அழித்துவிட்டார். இதைக் கண்ட வால்மீகி மிகுந்த உணர்ச்சியடைந்தார்.

அனுமனின் அந்த தியாகத்திற்கும், தன்னுடைய நன்றிக்கடனுக்கும் நினைவாக வால்மீகி, அந்தப் பகுதியை சுந்தர காண்டம் எனப் பெயரிட்டார்.


சுந்தர காண்டம் பாராயணத்தின் பலன்கள்

சுந்தர காண்டம் பாராயணம் செய்யும் ஒருவர்:

துன்பங்களில் இருந்து விடுபடுவர்
மன உறுதி, நம்பிக்கை, அமைதி கிடைக்கும்
ஆரோக்கியம், துணிச்சல், வெற்றி, திருமண வாழ்வு ஆகியவை சிறக்கும்

ஸ்ரீ ராமர் கூறியபடி, “சுந்தர காண்டம் பாராயணம் செய்பவரை தீமை அண்டாது, நன்மை நிலைத்திருக்கும்” என அருளப்பெற்றது.

## பாகவத நாமம்



ஒரு புனித குரு மூலமாகத்தான் நாம் கடவுளை அணுக வேண்டும் என்று கடவுளே விரும்புகிறார். பகவான் கிருஷ்ணர் தனது பகவத் கீதையில் கூறியபடி, “அசுரர்களில் நான் வலிமையான பிரகலாதன். அவரை யார் வணங்குகிறார்களோ, அவர் எனது சிறந்த பக்தராக கருதப்படலாம்”. அதுபோலவே முனிவர்களின் உள்ளத்தில் இறைவன் வாசம் செய்கிறான். முனிவர்கள் பெரும் சக்திகளைக் கொண்டுள்ளனர், மேலும் மகா ஸ்ரீ விஸ்வாமித்திர முனிவர் தனது ஆன்மீக சக்திகளால் தனது பக்தனான திரிசங்குவுக்கு ஒரு தனி சொர்க்கத்தையே உருவாக்கினார்.

பாகவதர்கள், கடவுளின் உண்மையான பக்தர்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையை பக்தியுடனும் உன்னத முறையிலும் வாழ்ந்தனர். அவர்களின் நாவு எப்போதும் கடவுளின் மகிமைகளையே உச்சரிக்கும், அவர்கள் நல்லதும் கெட்டதும் சமமாகக் கருதினர், மேலும் தங்கள் வாழ்க்கையில் எந்த வகையான சவால்களையும் எதிர்கொள்ளும் மன உறுதியைக் கொண்டிருந்தார்கள்.

தெய்வ பக்தியால் மட்டுமே இதைப் பெற்ற அவர்கள், வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்கொண்டும் நிம்மதியாக வாழ முடிந்தது. ஆனால் தற்சமயம் சில நிமிடங்கள் மட்டுமே இறைவனை வழிபட்டால் நம் வேண்டுதல்கள் அனைத்தும் நிறைவேறும் என எதிர்பார்க்கிறோம். ஆனால் பாகவதர்கள் தங்களுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்வதில்லை, உலகிலுள்ள உயிர்களின் நலனுக்காக மட்டுமே இறைவனிடம் பிரார்த்தனை செய்து வந்தனர்.

“ஓம் ஸ்ரீ பக்த பிரகலாதாய நமஹ” என்ற மந்திரத்தை பல ஆண்டுகளாக உச்சரித்து வருகிறேன், அதன் காரணமாக, பிரகலாதனின் அவதாரமான குரு ராகவேந்திரரின் அருளால் எப்படியோ என் வாழ்க்கையை நகர்த்த முடிகிறது. எனவே பாகவதர்களிடம் பக்தியை அதிகப்படுத்தி, அவர்களின் நாமங்களை வாழ்நாள் முழுவதும் உச்சரித்துக் கொண்டே இருப்போம், இதனால் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கை நமக்கு கிடைக்கும்.


## மகான்களின் பொன்மொழிகள்

**ரமண மகரிஷி அவர்களின் போதனைகள்**

அருளின் உயர்ந்த வடிவம் மௌனம். வலிமையற்ற மனம் படைத்தவர்களால் மௌனமாக இருக்க முடியாது. “நான் யார்?” என்று உங்களையே கேளுங்கள். பதிலைத் உங்களுக்குள்ளேயே தேடுங்கள். இதுவே பிறவியைத் தவிர்க்கும் வழி. குப்பையை ஆராய்வதால் பயனில்லை. அதுபோல, பிரபஞ்சத்தை ஆராய்ந்தாலும் பயனில்லை. நமக்குள் இருந்து இயக்கும் ஆண்டவனைத் தேடுங்கள். இறைவன் நமக்குள் இருக்கிறான் என்று உணர்ந்தவர்கள் தவறு செய்வதில்லை. செய்தாலும் வருந்தி திருத்திக் கொள்வார்கள். அகந்தை இருக்கும் இடத்தில் ஆண்டவன் ஒரு நொடிகூட இருக்க மாட்டான். “நான்”, “எனது” என்று எண்ணுபவர்கள் இறைவனை அடையவே முடியாது. ரயில் ஓடும்போது சுமையை நாம் தூக்க வேண்டியதில்லை. அதுபோல, ஆண்டவனிடம் நம்மை ஒப்படைத்தபின் உலகியல் பிரச்சனைகள் நம்மைத் தீண்டாது. அரைகுறையாக ஆண்டவனை நம்புவதால் பயனில்லை. முழுமையான சரணாகதி அடைந்தால் மட்டுமே அவன் பார்வை நம்மீது விழும்.

**காஞ்சிப் பெரியவரின் அருள்மொழிகள்**

உபநிடதம் நம்மை குழந்தையாக இருக்கச் சொல்கிறது. குழந்தையின் மனதில் கள்ளம் கபடம் இல்லை. தேவைகளை அதிகரிப்பதால் திருப்தி பெற முடியாது. தேவையானதை மட்டும் வாங்குவது நல்லது. மனம் எதை தீவிரமாக நினைக்கிறதோ அதுவாகவே மாறும். அதனால் தூய்மையான, உயர்ந்த சிந்தனைகளை மட்டும் நினையுங்கள். எடுத்துச் சொல்வதை விட, எடுத்துக்காட்டாக வாழ்வதே அதிக சக்தி வாய்ந்தது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் கடவுளே இருக்கிறார். ஒருவரை வணங்கும்போது அவருக்குள் இருக்கும் கடவுளையே வழிபடுகிறோம். சுவரில் எறிந்த பந்து திரும்பி வருவது போல, நிறைவேறாத ஆசைகள் கோபமாகத் திரும்பி நம்மைத் தாக்கும். ஓடி ஓடி சம்பாதித்தாலும் மறுபிறவிக்கு அவை துணை வராது. நியாயமான வழியில் பொருள் தேடி தேவைகளை நிறைவேற்றி மகிழுங்கள். பொம்மலாட்டப் பொம்மை போல சகல உயிர்களுக்கும் உள்ளிருந்து கடவுளே அவற்றை ஆட்டி வைக்கிறார். வழியில் கிடக்கும் முள்ளையோ, கண்ணாடியையோ அகற்ற பணம் தேவையில்லை. சிறிய உதவிகளை யார் வேண்டுமானாலும் செய்யலாம்.



**வேதாத்திரி மகரிஷியின் வழிகாட்டுதல்**

எல்லோருக்கும் நன்மை உண்டாக வேண்டும் என்று எண்ணுவதே நல்லவர்களின் குணம். உள்ளதைச் சொல்லுங்கள், நல்லதை எண்ணுங்கள், நல்லதைச் செய்யுங்கள், நல்லவனாகவே வாழுங்கள். மனிதன் முழுமை பெற பரம்பொருளோடு ஒன்றுவதே வழி. நல்ல பண்புகளை படிப்படியாகத்தான் பழக முடியும். ஒரே நாளில் எதையும் கற்றுவிட முடியாது. மனத்தூய்மை, சத்துள்ள உணவு, அளவான உழைப்பு, முறையான ஓய்வு நல்வாழ்க்கைக்கு அடிப்படை. துன்பம் இல்லாத மகிழ்ச்சியை மட்டுமே பெற நினைக்கிறோம். ஆனால் அதற்கான வழிகளை அறிவதில்லை. கோபமின்றி வாழ்வதே உயர் வாழ்வின் அடிப்படை குணம். சினமில்லாதவன் ஞானப் பாதையில் பயணிக்கத் தொடங்குவான்.

**குரு மகராஜ் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்கள்**

இறைவனே உலகம் என்ற நம்பிக்கை உறுதியானால் எல்லா பிரச்சனைகளும் தீரும். எவன் இறைவனைக் காண ஏங்கி அழுகிறானோ அவன் மீது இறைவனின் கருணை விழும். உலக இன்பங்களில் மயங்குபவன் எந்தப் பிறவியிலும் இறைவனை அடைய முடியாது. பணத்தின் மீதான மோகம் பைத்தியமாக்கும். காமம் இறைவனிடமிருந்து பிரிக்கும். படிப்பதைக் காட்டிலும் கேள்வி ஞானம் உயர்ந்தது. கேட்பதை விட நேரில் காண்பது சிறந்தது. இறைக்காட்சி கிடைத்த பின்பே அறியாமை அகலும். மன வலிமை படைத்தவர்களால் மட்டுமே உலக ஆசைகளைத் துறக்க முடியும். கடவுள் நமக்கு முதலாளி, நாம் அவர் வேலைக்காரர்கள். அவருக்கு பணிவிடை செய்வதே பிறவிப்பயன். மனித வாழ்வின் சாரமே பக்தி. பக்தி இல்லாத வாழ்வு அர்த்தமற்றது. நீங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யுங்கள். அதே நேரத்தில் மனதை ஆண்டவனிடம் வையுங்கள்.

## பால் அபிஷேகம்: புனிதமான பாரம்பரியத்தின் அரிய அனுபவம்

இறைவனின் அருளால் நம் வாழ்வு அழகாக அமைய வேண்டுமானால், அவரது திருவடிகளைப் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், அவருக்கு அர்ப்பணிக்கப்படும் சிறு சிறு சடங்குகளிலும் மனதை ஈடுபடுத்த வேண்டும். அத்தகைய புனிதமான சடங்குகளில் ஒன்றே பால் அபிஷேகம். இது வெறும் வழிபாட்டின் ஒரு பகுதியல்ல; இறைவனின் குளிர்ச்சியான அருளை நம் மனதில் ஊற்றும் தெய்வீகமான அனுபவம். பசுவின் தூய பாலால் செய்யப்படும் இந்த அபிஷேகம், கோடி ஜென்மங்களின் பாவங்களையும் துடைத்தெறியும் சக்தி கொண்டது. ஆனால், இதைச் செய்வது அவ்வளவு எளிதானதா? சிந்தித்துப் பாருங்கள்!

பால் அபிஷேகத்தின் சரியான நடைமுறை: தூய்மையும் பக்தியும் முதன்மை

இன்றைய வேகமான வாழ்க்கையில், பலர் பால் அபிஷேகத்தை எளிய சடங்காகவே கருதுகின்றனர். ஆனால் இது குறிப்பிட்ட பாரம்பரியத்துடன் இணைந்து செய்யப்பட வேண்டிய புனித செயல். ஒரு கன்றுள்ள, நன்கு பராமரிக்கப்பட்ட பசுவைத் தேர்ந்தெடுத்து, வெள்ளிக்கிழமைகளில் கோபூஜை செய்வது அவசியம்.

அதிகாலையில் எழுந்து, காலைக்கடன்களை முடித்து, குளித்து, மதச் சின்னங்களை அணிந்து, தூய சிந்தனைகளுடன் பசுவுக்கு வாழைப்பழம் அல்லது புல், வைக்கோல் போன்றவற்றை அர்ப்பணிக்க வேண்டும்.

பின்னர், கன்றை முதலில் தாய்ப்பசுவின் பாலை குடிக்க அனுமதிக்க வேண்டும். பசு அதை நக்கத் தொடங்கும் போது, கன்றை முன்புறமாகக் கட்டி, தூய்மையான பாத்திரத்தில் மெதுவாக பாலை கறக்க வேண்டும் இயந்திரத்தில் கறப்பது போல அல்ல! கன்றுக்கு மீண்டும் சிறிது பால் குடிக்க வழிவகுத்து, அரைமணி நேரத்திற்குள் அந்தப் பாலால் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

இந்த சடங்கில் ஒரே ஒரு பசுவின் பாலே பயன்படுத்தப்படுகிறது. இவ்விதமாக செய்யப்படும் பால் அபிஷேகம்தான் உண்மையானதும் பலனும் மிகுந்ததும். இதைச் செய்ய முடியாதவர்களுக்கு கூட அதை காண்பதே புனிதமான பாக்கியம் அது இப்பிறவி பாவங்களையும் துடைக்கும் என்று நம்பப்படுகிறது.

பால்குடம் எடுத்தல்: மனதின் தூய்மையும் வெற்றியின் வழி

அம்மன் அல்லது முருகன் கோவில்களில் விசேஷ நாட்களில் பக்தர்கள் பால்குடம் எடுத்துச் செல்வது வழக்கம். இதன் சாரம் என்ன? மனதை ஒருநிலைப்படுத்தி, முழு பக்தியுடன் இறைவனைச் சிந்திப்பதே.

பால் வெள்ளை நிறமுடையது என்பதால், வெள்ளை மனம் தூய மனம் என்பதைக் குறிக்கிறது. இறைவனைப் பாலால் குளிர்வித்து அர்ச்சனை செய்தால், அவரது அருளும் நம் மனதை குளிர்த்தி, நினைத்த காரியங்கள் நிறைவேற உதவும். மனிதர்கள் எல்லாம் நம்பிக்கையாலேயே வாழ்கின்றோம். தன்னம்பிக்கையும் தெய்வநம்பிக்கையும் ஒன்றாக இணையும் இடமே பால்குடம் எடுத்தல் என்ற வழிபாடு. தம்மை மறந்து ஆலயத்தை நோக்கிச் செல்லும் அந்தப் பயணம் தான் உண்மையான ஆன்மிக அனுபவம்.



பால் அபிஷேகத்தின் பலன்கள்: ஏழு சமுத்திரங்களின் அருள்

இந்து சமயத்தில் ஒவ்வொரு அபிஷேகத்திற்கும் தனித்தனி பலன்கள் உள்ளன.

பால் அபிஷேகம் — நீண்டாயுள்
தயிர் அபிஷேகம் — புத்திரபாக்யம்
நெய் அபிஷேகம் — மோட்சம்
பஞ்சகவ்ய அபிஷேகம் — ஆன்மீக வளர்ச்சி

புராணங்களின்படி, பசுவின் முலைகளில் ஏழு சமுத்திரங்களின் தத்துவம் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே பசுப்பாலால் செய்யப்படும் அபிஷேகம், இறைவனை ஏழு சமுத்திரங்களால் அலங்கரிப்பதற்குச் சமமானது. இது உடல் வழிபாடு மட்டுமல்ல; ஆன்மாவின் உயர்வுக்கான பாதை.

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் கோவிலில் நடைபெறும் பால் அபிஷேகம் பற்றி பெரியவர்களிடமிருந்து பல அரிய அனுபவங்களை நான் கேட்டுள்ளேன். அப்போது கோவில் இன்றுள்ள அளவுக்கு கூட்டம் இல்லாமல், சோமவார அபிஷேகதினங்களில் 50-60 பக்தர்கள் மட்டுமே சாட்சியாய் இருந்ததாக அவர்கள் பகிர்ந்தனர். அந்த அமைதியான சூழலும், இரவு பாயச நிவேதனத்தின் பவித்திரமும், பக்தர்களின் மனதில் ஆழமான ஆன்மிக அனுபவத்தை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

இன்று, பெரிய கோவில்களில் மட்டுமே பால் அபிஷேகம் தினசரி நடைபெறுகிறது; மற்ற கோவில்களில் விசேஷ நாட்களில் மட்டும் அனுசரிக்கப்படுகிறது. உண்மையில், இந்தப் பாக்கியம் கிடைப்பது சிலருக்கே — அதைக் காண்பதே கூட ஒரு அரிய அருளாகவே கருதப்படுகிறது.

சிந்தனைக்கு ஒரு அழைப்பு

இந்தக் காலத்தில் பல புதிய கட்டுப்பாடுகள், பாதுகாப்பு விதிகள் இருந்தாலும், பால் அபிஷேகத்தின் புனிதத்தை நாம் இழக்கக் கூடாது. நீங்கள் செய்ய முடியாவிட்டால் கூட, அதை காண்பதற்கே முயற்சியுங்கள் அதிலும் இறைவனின் அருள் நிறைந்துள்ளது.

நம் வாழ்வில் இத்தகைய பாரம்பரியங்களைத் தொடர்ந்து, பக்தியுடன் வாழுங்கள். இறைவன் அருள் என்றென்றும் உங்களை வழிநடத்தும்!


இந்த பகுதியில் உங்கள் படைப்புகள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

### ஸ்வாமி மலையப்பன், ஸ்ரீ ராமர், ஸ்ரீ கண்ணன் திருமாடவீதி புறப்பாடு.



திருமலை ஸ்ரீவாரி சன்னதி வருடாந்திர வசந்தோத்சவம் மூன்றாம் திருநாள் நேற்று ஸ்வாமி மலையப்பன், ஸ்ரீ ராமர், ஸ்ரீ கண்ணன் திருமாடவீதி புறப்பாடு.

### ஸ்ரீமலையாள நாச்சியார் முன் பின் திவ்ய சேவை.



காஞ்சி ஸ்ரீ வரதன் சன்னதி ஸ்ரீமலையாள நாச்சியார் முன் பின் திவ்ய சேவை.

### தீர்த்தவாரி



திருப்புள்ளாணி தீர்த்தவாரி மற்றும் சேத்துக்கரை.

### திருக்கல்யாண மகோத்சவம் சேர்த்தி சேவை



பூவிருந்தவல்லி ஸ்ரீதிருக்கச்சி நம்பிகள் ஸ்ரீவரதராஜ பெருமாள் திருக்கோயில். பங்குனி உத்திரம் திருக்கல்யாண மகோத்சவம் சேர்த்தி சேவை

## ராசிபுரம் பிரச்சனைகளை தீர்க்கத் தவறிய முன்னாள் அதிமுக நிர்வாகிகள் அமைச்சர் மதிவேந்தன் குற்றச்சாட்டு



ராசிபுரம், ஏப்.03:

ராசிபுரம் தொகுதி மக்களின் நீண்டகால பிரச்சனைகளுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் சபாநாயகர் மற்றும் அமைச்சராக இருந்தவர்கள் தீர்வு காணத் தவறியதாக அமைச்சர் மதிவேந்தன் குற்றம்சாட்டினார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். ராஜேஷ்குமார் தலைமை தாங்கினார்.

இதில் நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன் (கொங்கு மக்கள் தேசிய கட்சி), காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், தேமுதிக, கம்யூனிஸ்ட் கட்சிகள், மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன், கடந்த 2011-ம் ஆண்டு அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட தனபால் சபாநாயகராகவும், 2016-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சரோஜா சமூக நலத்துறை அமைச்சராகவும் இருந்ததாக குறிப்பிட்டார்.

ஆனால் அவர்கள் தொகுதி மக்களின் நீண்டகால பிரச்சனைகளை தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும், மக்களுக்கு செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றத் தவறியதால் தான் 2021-ம் ஆண்டு தேர்தலில் தமக்கு மக்கள் வாய்ப்பு வழங்கியதாகவும் தெரிவித்தார். மேலும், 2021-ம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்த பிறகு ராசிபுரத்தில் அரசு தலைமை மருத்துவமனை, மினி டைடல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

அத்துடன் போத மலைக்கு சாலை வசதி ஏற்படுத்தப்பட்டதுடன், ராசிபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் நீண்டநாள் நிலுவையில் இருந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

## கொள்ளிடம் புலீஸ்வரி அம்மன் கோயில் பங்குனி உத்திர திருவிழா



சீர்காழி , ஏப் , 03:

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள கொள்ளிடத்தில் புலீஸ்வரி அம்மன் கோயில் உள்ளது. இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான இக்கோயில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் 108 அம்மன் கோயில்களில் பதினெட்டாவது சக்தி தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மிகவும் புகழ்பெற்ற கொள்ளிடம் புலீஸ்வரி அம்மன் ஆலயம் . இக்கோயிலின் தலவிருட்சம் குரா மரம் ஆகும்.

பங்குனி மாதத்தில் இந்த மரத்தில் பூ பூக்கும் காலத்தில் கொடியேற்றம் துவங்கி பத்தாம் நாள் உத்திர திருவிழா நடைபெற்று நிறைவு பெறும். மேலும் இக்கோயிலில் பங்குனி உத்திர கொடியேற்று விழா இரவு 10 மணி அளவில் நடைபெறுவது வழக்கம். இந்த வருடம் உத்தர திருவிழாவை முன்னிட்டு கடந்த 23 ஆம் தேதி இரவு 10 மணிக்கு கோயில் முன்பு உள்ள கொடிமரத்தில் அன்னப்பறவை உருவம் பொறித்த கொடி ஏற்றப்பட்டு விழா தொடங்கியது.

அதனை தொடர்ந்து தினந்தோறும் மண்டகப்படி உற்சவம் மிகவும் விமர்சையாக நடைபெற்று வந்தது. பத்தாம் நாள் விழாவை முன்னிட்டு காலை சிறப்பு அபிஷேகம் அலங்காரம் மற்றும் ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து மாலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் தீபாரதனை நடைபெற்றதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திலிருந்து அருகில் உள்ள கொள்ளிடம் ஆற்றுக்கு சென்று புனித நீராடி அங்கிருந்து கரகம், காவடி,பால்குடம் , பாடைக்காவடி உள்ளிட்டவை எடுத்து வந்து ஆலயத்தை அடைந்து நேர்த்திக்கடனை செலுத்தினர். விழாவிற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் பிரகாஷ்,செயல் அலுவலர் முருகன், கிராம மக்கள் செய்திருந்தனர். விழாவை முன்னிட்டு காளியாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

## ஸ்ரீ ராமநவமி 6 -ஆம் நாள் உற்சவம் யானை வாகனம் லக்ஷ்மி நாராயணன் அலங்காரத்தில்



கடலூர், ஏப்.03:

கடலூர் மாவட்டம் புவனகிரியின் கண் ஸ்ரீவைஷ்ணவ ஆர்ய வைஸ்ய பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கும்ஸ்ரீ பாண்டுரங்க சுவாமி சன்னதியில் விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13ஆம் தேதி 27.3.2026 முதல் பங்குனி மாதம் 22 ஆம் தேதி 5.4.2026 முடிய உற்சவம் நடைபெறும். தினமும் காலை 11 மணி அளவில் திருமஞ்சனம் மற்றும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களுடன், யானை வாகன சேவை( லக்ஷ்மி நாராயணன் ) அலங்காரத்துடன், உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் யானை வாகனம் உற்சவத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ பாண்டுரங்க சுவாமியை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உபயம். புவனகிரி ஆர்ய வைஸ்ய ஸ்ரீவைஷ்ணவர்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## அருள்மிகு அண்ணாமலையார், உண்ணாமலையம்மன் திருக்கல்யாண உற்சவம் சிறப்பு வழிபாடு







திருவண்ணாமலை, ஏப்.03:

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கல்யாண உற்சவம் வேத மந்திரங்கள் ஒலிக்க, ஹோமங்கள், வாழைமரம் தோரணங்களுடன், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் அண்ணாமலையார், உண்ணாமலையம்மன் திருக்கல்யாண உற்சவத்தில் கலந்துகொண்டு அண்ணாமலையாரை, உண்ணாமலையம்மனையும் வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலாஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் சிறப்பு அலங்காரம்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## பௌர்ணமி சிறப்பு பூஜை அன்னதானம்



வாடிப்பட்டி, ஏப்.03:

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ரயில் நிலையம் அருகில் சொக்கையா சாமி ஜீவசமாதியில் பங்குனி மாத பௌர்ணமி சிறப்பு பூஜை நடந்தது. இந்த பூஜையையொட்டி மதியம் 12 மணிக்கு விநாயகர், முருகன், சொக்கையா சுவாமி ஆகியோருக்கு அபிஷேக, ஆராதனை, அர்ச்சனைகளுடன் சிறப்பு அலங்காரமும் பூஜையும் செய்யப்பட்டது. இதில் பஜனை பாடல்கள் பாடி கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதான கூடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. இது ஏற்பாடுகளை சொக்கையா சுவாமி மடத்தின் நிர்வாக தலைவர் கே. மணிகண்டன் செய்திருந்தார்.

## தச்சூர் வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து ஆய்வு



திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி வட்டம் தச்சூர் அரசு பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்கு எண்ணும் மையத்தில் தமிழ்நாடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

a தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## ஸ்ரீ ராம நவமி ஆறாம் நாள், ஏழாம் நாள் உற்சவம் சிறப்பு வழிபாடு



சேலம் ஏப்03:

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஸ்ரீ ராம நவமி உற்சவம் 6-ஆம் நாள் ஸ்ரீ சத்தியநாராயணர் அலங்காரத்தில், 7-ஆம் நாள் காளிங்க நர்த்தனர் அலங்காரத்திலும் வண்ணமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, மயிலிறகு மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் ஸ்ரீ ராம நவமி பூஜையில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் தேர்தல் பொது பார்வையாளர் நேரில் ஆய்வு



வாடிப்பட்டி, ஏப்.03:

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் வேதபதி மிஸ்ரா தேர்தல் பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். அப்போது வழங்கப்பட்ட வேட்பு மனுக்கள், பெறப்பட்ட வேட்பு மனுக்களின் விபரங்கள், தேர்தல் பறக்கும் படை தேர்தல் நிலை கண்காணிப்பு குழு செயல்பாடுகள் மற்றும் பணிகள் விபரங்களைதேர்தல் நடத்தும் அதிகாரிகள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை அதிகாரி சண்முக வடிவேலிடம் கேட்டறிந்து ஆவணங்களை ஆய்வு செய்தார்.

### ரவுசு மணி

ஆயுதம் இல்லாமல் வெற்றி பெறலாம் ஆனால் ஆர்வம் இல்லாமல் எதிலும் வெற்றி பெற முடியாது



ராஜகோபாலன்.J பெங்களூரு

## பூ மார்க்கெட் அங்காடி மற்றும் காய் கறி சந்தை வளாகத்தில் தேர்தல் விழிப்புணர்வு



திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள புதிய பூ மார்க்கெட் மற்றும் காய் கறி சந்தை வளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு பொதுமக்களுக்கு தேர்தல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 100% திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் வாக்களிப்பதின் அவசியம் குறித்த வாசகங்களை அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## பசுமலை பௌர்ணமி கிரிவலம்



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் மேல் ஒலக்கூர் குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் மகிமை நிறைந்ததும் சித்தர்களும் ஞானிகளும் வணங்கும் புண்ணியதிருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோகிரி சுப்பிரமணிய சுவாமிகள் திருக்கோவில் பங்குனி மாதம் புதன்கிழமை பிரதி மாத பௌர்ணமி கிரிவலம் வரும் பக்தர்கள் ஏராளமானோர் நேர்த்திகடன் செலுத்தி முருகன் அருளை தரிசித்தனர்.

இரவு வாணவேடிக்கை சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இரவை பகல்போல் வண்ணமயமாக்கியதை ஆச்சரியத்துடன் பொதுமக்கள் பார்த்தனர் வருகை தந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது கோவில் நிர்வாகம் சார்பில் ஆதின பரம்பரை அறங்காவலர்கள் சுப்பரமணியசோமயா ஜுலு ராம் குமார் சோமயாஜுலு

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

## கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிகளின் மேற்பார்வையாளர் தேர்தல் வாக்குச்சாவடிகள் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு




திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் (தனி) மற்றும் 065 கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் மேற்பார்வையாளர் கலசபாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இறையூர் உள் வட்டத்தில் அமைந்துள்ள பாகம் எண் 239,240,241, 242,243,244,245,251,252 மற்றும் 253 ஆகிய பாகத்தில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் மேற்பார்வையாளர் திரு. அபிஷேக் கிருஷ்ணா இ.ஆ.ப. அவர்கள் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# சுற்றுலா: கோடை விடுமுறைக்கு ஏலகிரி மலை செல்கிறீர்களா?

ஏலகிரியில் நீங்கள் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்கள் இயற்கை பூங்கா, பெருமாள் ஆலயம் அட்டாறு அருவி, நிலாவூர் ஏரி மற்றும் பூங்கானூர் அருவி தாமரைக் குளம் படகு குழாம் போன்ற இடங்கள் ஏலகிரி மலையில் சுற்றுலா பயணிகளுக்கு சிறந்த இடம் ஆகும்.



### அட்டாரு நதி அருவி

ஏலகிரி சடையனூரில் 15 மீட்டர் உயரத்திலிருந்து அருவியாக கொட்டும் அட்டாரு நதி. இங்கு மூலிகை தாவரங்கள் இடையே பாய்ந்து வரும் தண்ணீர் விழுவதால் இங்கு நீராடுபவர்களுக்கு நோய்கள் நீங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

### இயற்கை பூங்கா

இந்த இயற்கை பூங்காவில் மீன் கண்காட்சி மலர் தோட்டங்கள் செயற்கை நீர்வீழ்ச்சி என குடும்பத்தினர் அனைவரும் கொண்டாடும் இடமாக உள்ளது.

### புங்கனூர் ஏரி

இந்த இடமும் சுற்றுலா பயணிகளின் ஹாட்ஸ்பாட் ஆக உள்ளது. இங்கு இயற்கை செயற்கையாக உருவாக்கப்பட்ட அழகிய புங்கனூர் ஏரியில் நீங்கள் படகு சவாரி செய்து மகிழலாம். இது மட்டும் இல்லாமல் ஏரிக்கு அருகில் குழந்தைகள் விளையாடப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது.

### மூலிகை பண்ணை

தமிழகஅரசுவனத்துறைசார்பில் பராமரிக்கப்படும் மூலிகைப் பண்ணை இது. புங்கனூர் ஏரி அருகே அமைக்கப்பட்டுள்ளது. இங்கு ஆயுர்வேதம் சித்த மருத்துவத்திற்கு தேவையான அனைத்து அரிய வகை மூலிகைகள் பயிரிடப்பட்டுள்ளது. அரசு சார்பில் பழப்பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### ஜலகம்பாறை அருவி

ஏலகிரி மிகப்பெரிய சுற்றுலா தலங்களில் ஒன்று. இந்த அழகான மற்றும் வசீகரிக்கும் நீர்வீழ்ச்சிகள் ஆகும். பசுமையான காடுகள் மற்றும் மலைகளின் அரவணைப்பு கரங்களால் தழுவப்படுகிறது.

### சுவாமிமலை மலை

ஏலகிரி மலைகளில் பார்க்க வேண்டியமிக அழகான தலங்களில் ஒன்று இங்கே உள்ளது. இதுவேமிக உயரமான இடமாகும். இங்கிருந்து மலைவாசஸ்தலத்தின் அழகிய காட்சியை ரசிக்கலாம். மழை காலம் தவிர இப்பகுதி எப்போதும் நிரம்பி வழியும்.

### ஜலகண்டீஸ்வரர் கோவில்

இந்தக் கோவிலின் புராண தோற்றம் மற்றும் வரலாறு மிகவும் கவர்ச்சிகரமானவை. திறந்த கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை உடன் கல்லால் ஆன கோவிலை பார்ப்பது ஆச்சரியமாக உள்ளது இக்கோவிலில் நீண்ட நாட்களுக்கு முன் சிவன் சிலை அமைக்கப்பட்டது. சில நபர்கள் தங்கள் கைகளை மண் விளக்கின் மீது வைக்கும்போது அது சுழல்வதாக தெரிவிக்கப்படுகிறது. சுழலும் அவர்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப் படுவதை குறிக்கும் என்று கருதப்படுகிறது.

### நிலாவூர் ஏரி

நிலாவூர் ஏரி ஏலகிரியின் மிகவும் அமைதியான மற்றும் அழகான சுற்றுலா தலங்களில் ஒன்றாகும். இங்கு படகு பயணத்தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. சுற்றி உள்ள செங்குத்தான நிலப்பரப்பு அமைதியான நீலக்கடல்கள் நல்ல வானிலை மற்றும் விடியல் மற்றும் சூரிய அஸ்தமனத்தின் வியத்தகு சாயல்கள் காரணமாக இந்த இடம் அங்குள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் கவருகிறது.

### பெருமாள் கோவில்

ஏலகிரியில் உள்ள கோவில்களில் ஒன்று பெருமாள் கோவில். ஆண்டு முழுவதும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். இந்தகோவில்உண்மையில்மலை பாதையில் இருந்து பாறைகளுக்கு இடையில் வெட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயம் பொதுவாக நுழைவாயில் முழுவதும் பிராந்திய கலைப்படைப்புகளை கொண்டுள்ளது. இந்த இடம் ஏலகிரியில் பார்க்க மிகவும் அழகான இடங்களில் ஒன்று இந்த நேர்த்தியான கோவில்.

### அர்மா மலை குகைகள்

ஜெயின்துறவிகளின்வாழ்க்கை மற்றும் இப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் மற்றும் டெட்ரோகிளிஃப்புகள் மற்றும் ஓவியங்கள். பெரும்பாலான ஓவியங்கள் காலத்தின் காரணமாக அழிக்கப் பட்டுவிட்டன. இன்னும் சில மட்டுமே இங்கு உள்ளன. ஆனால் குகைகளின் பழங்காலத்தை பார்க்க நீங்கள் ஆர்வமாக இருப்பீர்கள்.

### ஃபண்டேரா பூங்கா

இப்போது இது குழந்தைகள் விரும்பும் ஒரு இடம் கினி பன்றிகள் மற்றும் முயல்கள் குதிரைகள் மற்றும் கால்நடைகள் கோழிகள், மிகவும் வண்ணமயமான கிளிகள் போன்ற பல சிறிய விலங்குகளை கொண்ட ஒரு பண்ணையைப் போலவே பூங்கா உள்ளது.

மேலும் பூங்கா வினால் வழங்கப்படும் தீவனத்துடன் நீங்கள் அடைப்புக்குள் நுழைந்து விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு உணவளிக்கலாம். புகைப்படம் எடுப்பதற்காக பல வண்ணக்கிளிகளை உங்கள் கைகளில் உட்கார வைக்கலாம். மீன் ஸ்பா மற்றும் எழுபது அனிமேஷன் வீடியோ காட்சிகளும் உள்ளன.

## வேலைவாய்ப்பு கார்னர்

# ரூ.1,40,000 சம்பளத்தில் ரயில் டெல் நிறுவனத்தில் வேலை

பணி: Deputy Manager காலியிடங்கள்: 3 சம்பளம்: மாதம் ரூ.40,000 – ரூ.1,40,000

வயது வரம்பு: 21 –லிருந்து 30–க்குள் இருக்க வேண்டும். தகுதி: பொறியியல் துறையில் மின்னணுவியல் மற்றும் தொலைத்தொடர்பு, கணினி அறிவியல், கணினி மற்றும் தகவல் தொடர்பு, தொழில்நுட்பம், மின் மற்றும் மின்னணுவியல், இன்ஸ்ட்ருமெண்டேஷன் ஆகிய ஏதாவதொரு துறையில் பிஇ அல்லது பி.டெக் முடித்து 2 ஆண்டுகள் பணி அனு பவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Manager,Technical (Database Administration) காலியிடங்கள்: 4 சம்பளம்: மாதம் ரூ.50,000 – ரூ.1,60,000 வயது வரம்பு: 23–லிருந்து 31–க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: பொறியியல் துறையில் மின்னணுவியல் மற்றும் டெலிகாம், கணினி அறிவியல், கணினி மற்றும் தகவல் தொடர்பியல், தகவல் தொழில்நுட்பம், மின் மற்றும் மின்னணுவியல் ஆகிய ஏதாவதொரு துறையில் பிஇ அல்லது பி.டெக் முடித்து 3 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

பணி: Senior Manager(Technical (System Administration) காலியிடங்கள்: 2 (SC–1, EWS–1) சம்பளம்: மாதம் ரூ.60,000 – 1,80,000 வயதுவரம்பு: 27–லிருந்து 34–க்குள் இருக்க வேண்டும். தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, திறன் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். பொது மற்றும் ஓபிசி பிரிவினருக்கு ரூ. 1,200. எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி பிரிவினர்களுக்கு ரூ.600. இதனை “RailTel Corporation of India Limited”, New Delhi என்ற புதுதில்லியில் மாற்றத்தக்க வகையில் வங்கிவரைவோலையாக எடுத்து விண்ணபத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.

விண்ணபிக்கும் முறை: www.railtel.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணபத்தை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து, அதனுடன் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து கீழ்வரும் அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்ப தபால் கவர் மீது விண்ணப்பிக்கும் பணியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி: Sr.Deputy General Manager/ HR,RailTel Corporation of India Ltd., Plate-A, 6th Floor, Office Block-II, East Kidwai Nagar,New Delhi - 110 023.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள்: 6.4.2026

# மலையாள நடிகை பாலியல் புகார்: இயக்குனர் ரஞ்சித் கைது



**கொச்சி, ஏப்.3:**

பிரபல மலையாளத் திரைப்பட இயக்குனர் ரஞ்சித் ஷூட்டிங்கின் போது தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக நடிகை ஒருவர் குற்றம் சாட்டினார். இதையடுத்து நேற்று இரவு ரஞ்சித்தை போலீசார் கைது செய்தனர். உடனடியாக கொச்சியில் மாஜிஸ்திரேட்டு முன்பாக ரஞ்சித் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், அவரை 14 நாள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார். இதையடுத்து, இயக்குனர் ரஞ்சித் சிறையில் அடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக போலீசார் கூறியதாவது:

திரைப்பட படப்பிடிப்பின்போது இயக்குனர் தன்னை கேரவனுக்கு அழைத்து பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாக நடிகை குற்றம் சாட்டினார். இந்த புகாரின் அடிப்படையில், ரஞ்சித் மீது கொச்சி நகர போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த நடிகையின் வாக்குமூலம் மகளிர் போலீஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ரஞ்சித்தை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது” என்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu” என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# விழுப்புரம் அருகே 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்த மூத்ததேவி கொற்றவை சிற்பங்கள் கண்டுபிடிப்பு

**விழுப்புரம், ஏப்.3:**

விழுப்புரம் அருகே 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்த மூத்ததேவி மற்றும் கொற்றவை சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இதுபற்றி வரலாற்று ஆய்வாளர் கோ.செங்குட்டுவன் கூறியதாவது:

விழுப்புரம் அருகே உள்ள கஞ்சனூர் மற்றும் நெடி ஆகிய கிராமங்களில் அண்மையில் கள ஆய்வில் ஈடுபட்டோம். அப்போது பல்லவர் காலத்தைச் சேர்ந்த மூத்ததேவி மற்றும் கொற்றவை சிற்பங்கள் கண்டறியப்பட்டன. இங்குள்ள சிவாலயத்தின் எதிரே மரத்தடியில் பலகைக் கல்லில் பெண் தெய்வ சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. புலி அம்மன் என்று வணங்கப்பட்டு வருகிறார். இந்தச் சிற்பத்திற்கு உரியவர் மூத்ததேவி என்று அழைக்கப்படும் ஜேஷ்டா ஆவார். சிற்பத்தின் வலது மேல் மூலையில் காக்கைக் கொடி இடம்பெற்றுள்ளது. மேலும் வலது இடது புறங்களில் மகன் மாந்தன் மகள் மாந்தி காட்டப்பட்டுள்ளனர்.





இந்த சிற்பத்திற்கு அருகிலேயே கி.பி.16–17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த துர்க்கை சிற்பம் அமைந்துள்ளது. மேலும் கஞ்சனூர் ஏரிக்கரை அருகே இரண்டு துண்டுகளாக உடைந்த நிலையில் பல்லவர் கால கொற்றவை சிற்பம் காணப்படுகிறது. விக்கிரவாண்டி அடுத்துள்ள நெடி கிராமத்தில் கொற்றவை சிற்பம் காளி என வழிபாட்டில் இருந்து வருகிறது. 8 கரங்களுடன் கூடிய இந்தச் சிற்பம் எளிய முறையில் வடிக்கப்பட்டுள்ளது. இந்த சிற்றாலயத்தின் வெளியே பல்லவர் கால விநாயகர் சிற்பமும் காணப்படுகிறது. மேற்காணும் மூத்ததேவி, கொற்றவை சிற்பங்கள் பல்லவர் காலத்தைச் (கி.பி.7–8ஆம் நூற்றாண்டு) சேர்ந்தவை ஆகும். 1300 ஆண்டுகள் பழமைவாய்ந்தவை. ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் இவை வழிபாட்டில் இருந்து வருகின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் ஏப்.8 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

**சென்னை, ஏப்.3:**

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.8–ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தின் உள் மாவட்டங்களிலிருந்து மத்திய கொங்கன்வரை, கர்நாடகத்தில் உள்பகுதி வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக நாளை (ஏப்.3) தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், 4–ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

5, 6 தேதிகளில் தமிழகம், புதுச்சேரியில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

7–ம் தேதி தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

8–ம் தேதி தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் ஏப்.6–ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை, வழக்கத்தை விட கொஞ்சம் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 99 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 79 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

# ஆட்டிசம், அறிவுசார் குறைபாடு குழந்தைகளுக்கு ஸ்ரீ ராமச்சந்திராவில் இலவச சிகிச்சைக்கு பாராட்டு

**சென்னை, ஏப். 3:**

போரூர் ஸ்ரீ ராமச்சந்திராவிலுள்ள சிறப்புக் குழந்தைகளுக்கான கல்வி நிலையமான வித்ய சுதாவில் விளையாட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய தமிழ்நாடு அரசின் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை செயலாளர் எஸ். மதுமதி, அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் வாயிலாக சிறப்பு குழந்தைகளுக்கு பள்ளி கல்லூரிகளில் 5 சதவிகித ஒதுக்கீடும் வேலை வாய்ப்புகளில் 4 சதவிகிதமும் அளித்து வருகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற பெற்றோர்களும், சிறப்பு ஆசிரியர்களும் தேவையான திறன் பயிற்சியும், வழி நடத்தலும் இந்த குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும் என்றார். சிறப்பு குழந்தைகளின் தனித்துவமான திறமைகளை கண்டுபிடித்து பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நடிகரான சந்தானம் பேசுகையில், சமூக பொறுப்புடன் 22 வருடங்களாக சிறப்பு குழந்தைகளுக்கு இலவச சிகிச்சை, கல்வி, திறன் பயிற்சியை அளித்து வரும் ஸ்ரீ இராமச்சந்திரா நிறுவனத்தை பாராட்டினார்.

8 வயதிற்குள் உள்ள அறிவாற்றல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகள் கொண்ட 100க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவசேவைகள் அடங்கிய குழுவுடன் கூடியசிறப்பு சேவை அளிக்கப்படுகிறது. ஆட்டிசம், வளர்ச்சி குறைபாடு, தசை இயக்க பாதிப்பு, அறிவுசார் குறைபாடு போன்ற பாதிப்புகள் உள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு சேவைகளை வழங்குகிறது.

# செஞ்சிக்கோட்டையில் தீ விபத்து

**செஞ்சி ஏப். 3:**

விழுப்புரம் மாவட்டத்தில் தொல்லி யல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று சிறப்பு வாய்ந்த செஞ்சி கோட்டையின் உள்ளே யானைக்குளம் அருகே நள்ளிரவு திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

ஆரம்பத்தில் சிறிய அளவில் இருந்த தீயானது கடும் வெயிலின் தாக்கம் மற்றும் கோடை காலம் என்பதால் வேகமாக பரவி தீ எரிய தொடங்கியது. தகவல் கிடைத்ததும் செஞ்சி காவல் துறையினர் மற்றும் செஞ்சி தீயணைப்புத் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

செஞ்சிக் கோட்டையின் உள் வளாகம் குறுகிய பாதைகள் மற்றும் எளிதில் செல்லமுடியாத பகுதிகளாக இருப்பதால், தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு நேரடியாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் கடும் சிரமத்தை எதிர்கொண்டு தீயை அணைக்க முடியாமல் திரும்பி சென்றனர். மேலும் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருப்பதால், அருகிலுள்ள புல்வெளி மற்றும் செடிகள் முழுவதும் தீ பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. தீயை கட்டுப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், கோட்டை நிர்வாகத்தினர் சரிவர பராமரிப்பு மேற்கொள்ளாததே இதுபோன்ற தீ விபத்துகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான காரணமாக இருப்பதாக தெரிவித்தனர். இனி வரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறுமிக்கு நவீன கருவியை பொருத்தி மறுவாழ்வு ராஜீவ்காந்தி மருத்துவமனை மருத்துவர்கள் தகவல்

**சென்னை, ஏப்.3:**

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவ கண்காணிப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் கூறியதாவது: கடலூரை சேர்ந்த ஏழை தம்பதியின் மகள் 14 வயது சிறுமிக்கு கடந்த 2 ஆண்டுகளாக கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறும் பாதிப்பு இருந்து வந்தது.

பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும், அந்த பிரச்சினை சரியாகவில்லை. இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு அந்த சிறுமி அழைத்து செல்லப்பட்டார்.

அங்கு சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், சிறுமிக்கு நியூரோ ஜெனிக் ப்ளேடர் எனப்படும் சிறுநீர்ப் பை செயலிழப்பு பாதிப்பு இருந்ததை கண்டு பிடித்தனர். நரம்பு மண்டலங்களில் ஏற்படும் சேதத்தால் இந்த பிரச்சினை ஏற்படுகிறது.



நரம்புகளை முடுக்கி விடும் நியூரோ மாடுலேஷன் தெரபி சிகிச்சை தான் இதற்கு ஒரே தீர்வு ஆகும். இதய துடிப்பை சீராக்க பேஸ் மேக்கர் பொருத்துவதை போன்று, நரம்புகளின் செயல்பாட்டை சீராக்க நியூரோ மாடுலேஷன் சாதனத்தை அறுவை சிகிச்சை மூலம் பொருத்த வேண்டும்.

இதற்கு அந்த தனியார் மருத்துவமனையில் ரூ.25 லட்சம் செலவாகும் என்று தெரிவித்துள்ளனர். ஏழ்மை நிலையில் இருக்கும் பெற்றோரிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சிறுமி அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, சிறுமியிக்கு முதல் கட்ட அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மருத்துவர்கள் மேற்கொண்டனர்.

தொடர்ந்து, ரூ.7.5 லட்சம் மதிப்பிலான மின் முடுக்கி உபகரணம் சிறுமியின் உடலில் பொருத்தப்பட்டது. 15 ஆண்டுகள் செயல்படும் அந்த கருவி மற்றும் அதற்கான சிகிச்சை செலவை அரசு ஏற்று கொண்டது. தற்போது சிறுமி நலமுடன் உள்ளார். மகளை காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## க்ரைம் கார்னர்

### உ.பி.யின் கான்பூரில் சிறுநீரகம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மோசடியில் 6 பேர் கைது

**புதுடெல்லி, ஏப்.3:**

புதுடெல்லி: உத்தர பிரதேச மாநிலம் கான்பூரில் ஒரு மருத்துவத் தம்பதி தனியார் மருத்துவமனை நடத்தி வருகின்றனர். இவர்கள் பல்வேறு தரகர்கள் மூலம் சிறுநீரகம், கல்லீரலை சட்டவிரோதமாகப் பெற்று நோயாளிகளுக்கு பொருத்தி வந்துள்ளனர்.

இந்த தகவல் உ.பி. உளவுப்பிரிவுக்கு சில நாட்களுக்கு முன்பு கிடைத்துள்ளது. இதையடுத்து தனியார் மருத்துவமனையைத் தீவிரமாக கண்காணித்து வந்தனர். இதில், உடல் உறுப்புகளைப் பணத்துக்காக தானம் செய்தவரும், அதை பெற்றவரும் அறுவை சிகிச்சை செய்த போதே கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளனர். உத்தரா கண்டைச் சேர்ந்த ஆயுஷ் என்ற பெறுநரையும், ஒரு கொடையாளியையும் உ.பி. அதிகாரிகள் பிடித்து விசாரித்து வருகின்றனர். கொடையாளிக்கு யுபிஐ மூலம் ரூ.3.5 லட்சம், ரொக்கமாக ரூ.6 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மருத்துவத் தம்பதிகள் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது வரை சுமார் 60 உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றது தெரிந்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு ஆப்பிரிக்கா நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு சிறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது. இதனால், இந்த கும்பலுக்கு சர்வதேச தொடர்புகள் இருக்காலாம் என விசாரிக்கப்படுகிறது. இந்த மோசடியில் மருத்துவமனை ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஷிவாம் அகர்வால் முக்கிய பங்கு வகித்துள்ளார். இவர் ஸ்டெதஸ்கோப் சகிதம் மருத்துவராக வலம் வந்துள்ளார். ஒரு சிலரை பண ஆசை காட்டி மருத்துவமனைக்கும் அழைத்து வந்துள்ளார். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களது பெயர் விவரங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை.

உ.பி., பிஹார், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்களை குறிவைத்து இந்த மோசடி நடைபெற்றுள்ளது. உறுப்பு வழங்கியவர்களுக்கு ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், நோயாளிகளுக்கு ரூ.1 கோடி வரை விற்கப்பட்டுள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

### ஆதவ் அர்ஜுனா கார் ஏறி காவலர் கால் முறிவு!



திருச்சியில் தவெக தேர்தல் மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனாவின் கார் ஏறியதில் காவலரின் கால் முறிந்தது.

திருச்சி கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிட தவெக தலைவர் விஜய் வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தொடர்ந்து, திருச்சி மரக்கடை பகுதியில் பிரசார வாகனத்தின் நின்றபடி மக்கள் மத்தியில் உரையாற்றினார். விஜய்யுடன் கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில், பிரசாரம் நிறைவடைந்து விஜய்யுடன் பிரசார வாகனத்தில் ஆதவ் அர்ஜுனா பயணித்துக் கொண்டிருந்தார். பிரசார வாகனத்தை பின்தொடர்ந்து ஆதவ் அர்ஜுனாவின் காரை அவரது ஓட்டுநர் ஓட்டியுள்ளார்.

அப்போது எதிர்பாராத விதமாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சிறப்பு காவலர் சதீஷ் என்பவரின் கால் மீது ஆதவ் அர்ஜுனாவின் கார் ஏறியதில் முறிவு ஏற்பட்டது.

வலியால் துடித்த காவலரை சக காவலர்கள் மற்றும் தவெக தொண்டர்கள் இணைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### தரவரிசையில் அபிஷேக் முதலிடத்தில் நீடிப்பு

**துபாய், ஏப்.3:**

சர்வதேச டி20 கிரிக்கெட் பேட்ஸ்மேன்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவின் அபிஷேக் சர்மா முதலிடத்திலும் இஷான் கிஷன் 2-வது இடத்திலும் தொடர்கின்றனர். திலக் வர்மா 6-வது இடத்திலும் கேப்டன் சூர்யகுமார் யாதவ் 7-வது இடத்திலும் உள்ளனர். இங்கிலாந்தின் ஜாஸ் பட்லர் 8-வது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

நியூஸிலாந்தின் டிம் ஷெய்பர்ட் ஓர் இடத்தை இழந்து 9-வது இடத்தில் உள்ளார். மற்றபடி 10-ல் பெரிய மாற்றங்கள் இல்லை. பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் ஆப்கானிஸ்தானின் ரஷித் கான் முதலிடத்தில் உள்ளார். இந்தியாவின் வருண் சக்ரவர்த்தி 2-வது இடத்திலும், ஜஸ்பிரீத் பும்ரா 5-வது இடத்திலும் உள்ளனர்.

### கூப்பர் கனோலிக்கு பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் பாராட்டு

**சண்டிகர், ஏப்.3:**

10 அணிகள் பங்கேற்றுள்ள 19வது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் கடந்த 28ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் 4வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதையடுத்து 163 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 165 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் குஜராத் டைட்டன்சை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் கிங்ஸ் கடைசி ஓவரில் திரில் வெற்றிபெற்றது. பஞ்சாப் வீரர் கூப்பர் கனோலி (72 ரன்கள், 44 பந்து, 5 பவுண்டரி, 5 சிக்சர்) ஆட்ட நாயகன் விருது பெற்றார்.


இந்த நிலையில், கூப்பர் கனோலிக்கு பஞ்சாப் கேப்டன் ஷ்ரேயாஸ் அய்யர் பாராட்டு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, கூப்பர் கனோலி ஆடிய சில ஷாட்கள், குறிப்பாக ரஷித் கான் பந்து வீச்சில் ஆடிய ஷாட் நம்பமுடியாத வகையில் இருந்தது. நான் ஆட்டமிழந்ததும் எனது காயத்துக்கு ஐஸ் ஒத்தடம் கொடுத்து கொண்டிருந்த போது நாங்கள் அடுத்தடுத்து 2 விக்கெட்டுகளை இழந்தோம். இதுபோன்ற சூழலில் நிதானமாக இருக்க வேண்டியது அவசியம். அறிமுக வீரர் கூப்பர் கோனோலி விளையாடிய விதம் அருமையாக இருந்தது. முதல் போட்டியிலேயே இவ்வளவு நிதானமாகவும், அதேநேரத்தில் அதிரடியாகவும் ஆடியது பாராட்டுக்குரியது. 3-வது ஓவருக்கு பிறகு ஆடுகளம் மெதுவாக இருப்பதை உணர்ந்தோம். வைஷாக் விஜய்குமார் (3 விக்கெட்) கடந்த சீசனில் வெளிப்படுத்திய பார்மை இந்த ஆண்டிலும் தொடருகிறார்' என்றார்.

### ஐபிஎல் டிக்கெட்டை காட்டி இலவசமாக பயணிக்கலாம்

சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னை M.A.சிதம்பரம் விளையாட்டு மைதானத்தில் ஐபிஎல்-2026 கிரிக்கெட் போட்டியை காணவரும் பார்வையாளர்கள், தங்களது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான நுழைவுச் சீட்டை காண்பித்து மாநகர பேருந்துகளில் (குளிர்சாதன பேருந்து நீங்கலாக) பயணம் மேற்கொள்ளலாம்.

# எழும்பூரில் 5-ம் தேதி முதல் புறநகர் ரெயில் சேவை சீராகும்: அதிகாரிகள் தகவல்



**சென்னை, ஏப்.3:**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், மின்சார ரெயில் நடைமேடை 10, 11 ஆகியவற்றில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக கடந்த பிப்ரவரி 20-ந்தேதி முதல் ஏப்ரல் 5-ந்தேதி வரை 45 நாட்களுக்கு ரெயில் சேவையில் மாற்றம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த பணிகளை குறிப்பிட்ட தேதிகளுக்குள் முடிக்கும் வகையில், 600-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் சுழற்சி முறையில் இரவு பகலாகப் பணியமர்த்தபட்டனர்.

30 ஜே.சி.பி., 8 நவீன எந்திரங்கள், 3 கிரேன் மற்றும் கான்கிரீட் கலவை எந்திரங்கள் உதவியுடன் பார்சல் எடுத்து செல்வதற்கான நடைமேம்பாளத்திற்கு அடித்தளம் அமைக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. 72 மீட்டர் அகலம், 25 மீட்டர் உயரம் கொண்ட பார்சல் நடைமேம்பாலம் அமைக்க அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல, தண்டவாளங்கள் மறுசீரமைப்பு, நடைமேடையில் கூடுதல் வசதி போன்ற பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

ரெயில் இயக்க தொடங்குவதற்கான அனைத்து இறுதிகட்ட பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்றது. அதாவது, நடைமேடையை சுத்தம் செய்தல், நகரும் படிக்கட்டு இயக்கி பார்ப்பது, தண்டவாளங்களுக்கு கிரீஸ் தடவும் பணி, பயணிகள் அறிவிப்பு பலகை அமைப்பது, மின் அழுத்த வயர்களை சரிசெய்தல் உள்பட அனைத்து பணிகளும் மும்மரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், எழும்பூர் ரெயில் நிலையத்தில் மேம்பால அடித்தளப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதால் வரும் 5-ம் தேதியில் இருந்து புறநகர் ரெயில் சேவை வழக்கம்போல் இயங்கும் என சென்னை ரெயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேம்பால பணிகள் காரணமாக 10 மற்றும் 11வது நடைமேடைகள் மூடப்பட்டு, தற்காலிக அட்டவணை மூலம் ரெயில்கள் இயக்கப்பட்டன. மேம்பாலத்தில் நிழற்குடைகள் அமைக்கும் பணிகள் இரவு நேரத்தில் நடைபெறும் எனவும், சாய்வு பாலம் அமைக்கும் பணிகள் அடுத்த 15 நாட்களில் நிறைவு பெறும் என ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 100 சதவீதம் வாக்குப்பதிவு; கேஸ் சிலிண்டர் மூலம் விழிப்புணர்வு

**தூத்துக்குடி, ஏப்.3:**

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் 23ம் தேதி (23.4.2026) நடைபெற உள்ளதை முன்னிட்டு, வாக்காளர்கள் மத்தியில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாவட்டத்தில் புதுமையான முறையில் விழிப்புணர்வு பிரசாரம் தொடங்கப்பட்டது.




தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான இளம்பகவத் தலைமை வகித்தார். பொதுமக்கள் வீடுகளில் அன்றாடம் பயன்படுத்தும் சமையல் எரிவாயு உருளைகளின் மீது, "100 சதவீதம் தவறாமல் வாக்களிப்போம்" மற்றும் "என் வாக்கு விற்பனைக்கு அல்ல" போன்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை (ஸ்டிக்கர்கள்) கலெக்டர் ஒட்டி தொடங்கி வைத்தார். கேஸ் சிலிண்டர் விநியோகம் செய்யும் பணியாளர்களிடம் இந்த ஒட்டு வில்லைகளை வழங்கிய கலெக்டர், ஒவ்வொரு வீட்டிற்கும் சிலிண்டர் கொண்டு செல்லும் போது வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர், தேர்தல் பிரிவு அதிகாரிகள் மற்றும் எரிவாயு முகமை பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

# அத்தியாவசிய பணியாளர்கள் தபால் வாக்கு படிவம் பெற இன்று கடைசி நாள்: நெல்லை கலெக்டர் தகவல்

**திருநெல்வேலி, ஏப்.3:**

திருநெல்வேலி மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான சுகுமார் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

தேர்தல் நாளில் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி தபால் வாக்கு செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.



இதன் அடிப்படையில் தெற்கு ரெயில்வே, அகில இந்திய வானொலி, கடல்சார் துறை, இந்திய விமான நிலைய ஆணையம், செய்தி மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம், ஊடகவியலாளர்கள், சென்னை மெட்ரோ ரெயில் ஆணையம், தமிழ்நாடு போக்குவரத்து துறை, தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, சிறைத் துறை, போக்குவரத்து காவல்துறை அலுவலர்கள் வாக்குபதிவு நடைபெறும் நாளன்று அத்தியாவசிய பணிகளில், பணியில் இருக்கும் பணியாளர்கள் தபால் வாக்கு மூலம் வாக்களிப்பதற்கு சம்பந்தப்பட்ட தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் படிவம் 12-டி விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு இன்று 3ம் தேதி (வெள்ளிக்கிழமை) கடைசி நாள் ஆகும். தபால் வாக்குகளை செலுத்தும் மையத்தில் அவர்களது தபால் வாக்குகளை செலுத்தலாம்.

## வணிகச் செய்திகள்

### சுங்கச் சாவடிகள் கட்டண உயர்வு: கோவை தொழில் துறைக்கு தொடரும் நெருக்கடி!

**கோவை, ஏப்.3:**

சுங்கச்சாவடிகள் கட்டண உணர்வால் கோவை தொழில்துறைக்கு அடுத்தடுத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தொழில்துறையினர் தெரிவித்தனர். தமிழகத்தில் 6,600 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள், அண்டை மாநிலங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் வழியாக, தினசரி ஆயிரக்கணக்கான சரக்கு வாகனங்கள், அரசு மற்றும் ஆம்னி பேருந்துகள், பயணிகள் வாகனங்ள் உள்ளிட்டவை பயணித்து வருகின்றன. இச்சாலைகளைப் பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணத்தை வசூலிக்க 77 இடங்களில் சுங்கச்சாவடிகள் செயல்படுகின்றன. இவற்றில் சென்னை - கன்னியாகுமரி, திருச்சி - சேலம், சேலம் - கோவை உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைகள் முக்கிய மானவையாகும். சுங்கச்சாவடிகளில் ஒவ்வொரு ஆண்டும், 5 சதவீதம் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள, தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி அளித்துள்ளது. அதன்படி, நேற்று முதல் புதிய கட்டணம் அமலுக்கு வந்தது. வேன் மற்றும் டெம்போ போன்ற வாகனங்கள் சுங்கச்சாவடியை ஒருமுறை கடந்து செல்ல பழைய கட்டணமான ரூ.145-லிருந்து ரூ.150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பேருந்து மற்றும் லாரிகளுக்கான கட்டணம் ரூ.295-லிருந்து ரூ.310- ஆகவும், கனரக வாகனங்களுக்கான கட்டணம் ரூ.320-லிருந்து, ரூ.335 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# புதிய வருமான வரிச் சட்டம் அமலானது: வருமான வரித் துறை

புதுடெல்லி, ஏப்.3:

புதிய வருமான வரிச் சட்டம் ஏப். 1 முதல் அமலானது என்று வருமான வரித் துறை அறிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் : இந்தியாவின் நேரடி வரி செலுத்தும் முறையில் ஒரு மைல்கல் சீர்திருத்தமாக 'வருமான-வரி சட்டம், 2025' அமைந்துள்ளது.




நாட்டின் வருமன-வரி சட்டத்தை நவீனப்படுத்தவும் எளிமையாக்கவும் ஒரு பெரும் முயற்சியாக இது அமைந்துள்ளது. 60 ஆண்டுகள் பழமையான வருமான-வரி சட்டம், 1961-க்கு மாற்றாக இது அமைந்துள்ளது.

வரிகொள்கையில் மாற்றமின்றி, ஆனால், பெருந்தெளிவுடனும் எளிமையான மொழியடக்கம், வடிவம் மற்றும் வாசகர் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் கடந்தாண்டு, ஆகஸ்ட்டில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று வருமான-வரி சட்டம், 2025-ஆக வடிவம் பெற்றது. வருமான-வரி 2026-இன் விதிகள் அனைத்தும், நேரடி வரிகளுக்கான மத்திய வாரியத்தால் கடந்த மார்ச் 20-இல் குறிப்பிடப்பட்டன. அதில், புதுச் சட்டத்தின் விதிகளை செயல்படுத்துவதைப் பற்றி குறிப்பிடப்பட்டது.

அது தொடர்பான புதிய படிவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. படிவங்கள் எளிமையாக்கப்பட்டிருப்பதுடன் செயல்முறைகளும் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அச்சட்டம் ஏப். 1, 2026 முதல் அமலானதைத் தொடர்ந்து, வருமான-வரி சட்டம், 2025 இந்திய வரி நிர்வாகத்தில் ஒரு புதிய பாகத்தைக் குறிக்கிறது. அத்துடன், அகண்ட பாரதம் முயற்சிக்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகவும் அமைந்துவிட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானிடம் இருந்து மீண்டும் கச்சா எண்ணெய் இறக்குமதி? 6 லட்சம் பேரலுடன் குஜராத் வருகிறது கப்பல்



புதுடெல்லி, ஏப்.3:

ஈரானிடமிருந்து இந்தியா மீண்டும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்கிறது. 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெய் ஏற்றிய கப்பல் குஜராத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

மேற்கு ஆசியாவில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், இந்தியா - ஈரான் இடையிலான கச்சா எண்ணெய் வர்த்தகம் மீண்டும் உயிர் பெறத் தொடங்கியுள்ளது. சுமார் 6 லட்சம் பேரல் கச்சா எண்ணெயுடன் ஈரானிலிருந்து புறப்பட்ட கப்பல் ஒன்று நாளை மறுநாள் அதாவது வரும் 4-ம் தேதி குஜராத் துறைமுகத்திற்கு வரவுள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான எண்ணெய் வர்த்தக உறவு தற்காலிகமாகப் புதுப்பிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. ஈரானின் கார்க் தீவிலிருந்து 'பிங் ஷுன்' என்ற கப்பல் குஜராத்தின் வாடினார் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கச்சா எண்ணெயை வாங்குவது யார் என்பது குறித்து அதிகாரப்பூர்வத் தகவல்கள் இல்லை. எனினும், வாடினார் பகுதியில் ரஷ்யாவின் ஆதரவுடன் செயல்படும் நயாரா எனர்ஜி சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளது கவனிக்கத்தக்கது.

மேலும், இங்கிருந்துதான் மத்தியப் பிரதேசத்தின் பினா பகுதியில் உள்ள பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்களுக்குக் கச்சா எண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. சந்தைக் கணிப்பு நிறுவனமான 'கெப்லர்' தரவுகளின்படி, இந்தக் கப்பலின் இறுதி இலக்கு குஜராத் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது ஈரான் - அமெரிக்கப் போர்ச் சூழலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எரிசக்தித் தட்டுப்பாட்டைப் போக்க, ஏற்கெனவே ஏற்றப்பட்ட சரக்குகளுக்கு மட்டும் அமெரிக்கா ஏப்ரல் 19 வரை 30 நாள் அவகாசம் வழங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இந்தியா இந்த கச்சா எண்ணெயை வாங்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# கணக்கு எண்ணை மாற்றாமல் வங்கியை மாற்றும் வசதி: ரிசர்வ் வங்கி பரிசீலனை

மும்பை, ஏப்.3:

செல்போன் எண்ணை மாற்றாமல், செல்போன் இணைப்பை ஒரு நிறுவனத்தில் இருந்து மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றிக்கொள்ளும் வசதி தற்போது நடைமுறையில் இருக்கிறது. இதேபோல், வங்கி கணக்கு எண்ணை மாற்றாமல், ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு மாறிக்கொள்ளும் வசதியை அறிமுகப்படுத்த ரிசர்வ் வங்கி பரிசீலனை செய்து வருகிறது.

இது தொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள 2028-ம் ஆண்டுக்கான பேமெண்ட் தொலைநோக்கு ஆவணத்தில் கூறப்பட்டு ள்ளதாவது:- பேமெண்ட்ஸ் சுவிட்சிங் சர்வீஸ் எனும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதன் வாயிலாக, ஒரு வங்கியில் இருந்து மற்றொரு வங்கிக்கு சேவைகளை மாற்றும்போது உருவாகும் மிகப்பெரிய பிரச்சினைகளை களைய திட்டமிடப்பட்டுள்ளது.

வழக்கமாக ஒரு வங்கி கணக்கை மற்றொரு வங்கிக்கு மாற்றும்போது, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சம்பளம், மியூச்சுவல் பண்டு, கடன் தவணை மற்றும் இன்சூரன்ஸ் பிரீமியம் போன்ற அனைத்து விவரங்களையும் புதிய வங்கியில் ஒவ்வொன்றாக மாற்ற வேண்டிய சிரமம் உள்ளது. இந்த தடையை நீக்கி, வாடிக்கையாளர்களுக்கு முழு சுதந்திரம் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். வாடிக்கையாளர்கள் தங்களுக்கு சிறந்த வட்டி விகிதம் அல்லது மேம்பட்ட டிஜிட்டல் சேவைகளை வழங்கும் வங்கிகளுக்கு எந்தவித தடையுமின்றி மாறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்யும். இதன் வாயிலாக வங்கி துறையில் ஆரோக்கியமான போட்டி உருவாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக டில்லி மாறிவிட்டது:உயர் நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி, ஏப்.3:

தேசிய தலைநகா் குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக மாறிவிட்டது என டில்லி உயா்நீதிமன்றம் புதன்கிழமை கூறியது.

மேலும், இதுபோன்ற சம்பவங்களை எடுத்துரைக்கும் மனுவிற்கு பதிலளிக்குமாறு ரயில்வே, தில்லி காவல் துறை, தில்லி அரசு மற்றும் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆா்) ஆகியவற்றுக்கு உத்தரவிட்டது.

இது தொடா்பாக 'ஜஸ்ட் ரைட்ஸ் ஃபாா் சில்ட்ரன் அலையன்ஸ்' அமைப்பு தாக்கல் செய்த பொதுநல மனுவை விசாரித்த உயா்நீதிமன்ற நீதிபதி டி.கே. உபாத்யாயா மற்றும் நீதிபதி தேஜஸ் காரியா ஆகியோா் அடங்கிய அமா்வு கூறியதாவது: தில்லி இப்போது குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக மாறிவிட்டது. இது குறித்து நடவடிக்கை எடுக்க அரசுக்கு மனு தேவையில்லை; ரயில் நிலையங்களில் 2 மணிநேரம் செலவழித்தால் போதும்.

குழந்தைக் கடத்தல் குறித்து முந்தைய நீதிமன்ற உத்தரவுகள் இருந்தபோதிலும், இந்த அச்சுறுத்தல் தடையின்றி நடைபெறுகிறது. அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்திருந்தாலும், பலவீனமான அமலாக்கமே இந்தப் பிரச்னையை உயிா்ப்புடன் வைத்திருக்கிறது என தெரிவித்தனா்.

மனுதாரா் சாா்பில் ஆஜரான வழக்குரைஞா் பிரப்சஹாய் கௌா் கூறுகையில், 2018 முதல் 2024-ஆம் ஆண்டுக்குள் ரயில்வே பாதுகாப்புப் படை, ரயில்வே வளாகங்களில் 84,000-க்கும் மேற்பட்ட குழந்தைகளை மீட்டுள்ளதாகத் தெரிவித்தாா். ஆனந்த் விஹாா் ரயில் நிலையத்தில் இருந்து மீட்கப்பட்ட சிறுமி, குழந்தைகள் நலக் குழுவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்பே கடத்தல்காரா்களிடம் திருப்பி அனுப்பப்பட்டு, பின்னா் மீண்டும் மீட்கப்பட வேண்டியிருந்த ஒரு வழக்கையும் அவா் சுட்டிக்காட்டினாா்.

கடத்தப்பட்ட குழந்தைகளை மீட்பதற்கும் மறுவாழ்வளிப்பதற்கும் ரயில்வே அமைச்சகம் மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் வெளியிடப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் இருந்தபோதிலும், அதிகாரிகள் இந்த வழிகாட்டுதல்களை மீறுவதால் நீதி தவறுகிறது என்று அந்த மனு சுட்டிக்காட்டியது.

நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும், மீட்கப்பட்ட குழந்தைகள் மீண்டும் கடத்தப்படுவதைத் தடுக்கவும் நீதிமன்றத்தை அது வலியுறுத்தியது.

இதைத்தொடா்ந்து, உரிய நடவடிக்கைக்கான தரவுகளையும் பரிந்துரைகளையும் வழங்குமாறு தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திடம் நீதிமன்றம் உத்தரவிட்டதுடன், அடுத்த விசாரணையை ஜூலை 10-ஆம் தேதிக்கு பட்டியலிட்டது.

# 'வாக்காளர்களுக்கு அல்வா' முதல் முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி

திருவனந்தபுரம், ஏப்.3:

கேரளத்தில் முதல்முறை வாக்காளர்களை கவர அல்வா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல்முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளத்தில் வரும் 9-ம் தேதி சட்டப் பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் முதல்முறையாக வாக்களிக்க உள்ள இளம் வாக்காளர்களை கவர அவர்களுக்கு அல்வா வழங்கும் திட்டத்தை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி ரத்தன் யு. கேல்கர் இதற்கான அறிவிப்பை சில தினங்களுக்கு முன்பு வெளியிட்டார். இதன்படி கேரளத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் அல்வா பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குச்சாவடியில் வாக்களிக்க வரும் முதல்முறை வாக்காளர்களுக்கு அல்வா பாக்கெட்களை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

முதல்முறை வாக்காளர்கள் யார் என்பதை மாவட்ட தேர்தல் அதிகாரியும்(டிஇஓ), வாக்குச்சாவடி நிலை அதிகாரிகளும்(பிஎல்ஓ) கண்டறிந்து இதற்கான பணிகளில் ஈடுபடவுள்ளனர். இதற்காக கூடுதல் தன்னார்வலர்களையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையத்தின் புதுமையான முயற்சியால் முதல்முறை வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் தேக்கம்: மத்திய அரசு காரணம்-உச்சநீதிமன்றம்

புதுடெல்லி, ஏப்.3:

மத்திய தொழிலகப் பாதுகாப்புப் படையில் (சிஐஎஸ்எஃப்) சுமார் 10 ஆண்டுகள் பணியாற்றிய காவலர் ஒருவர் பணியில் இருந்து 11 நாள்கள் திடீரென மாயமானதாகவும், மற்றொரு சிஐஎஸ்எஃப் காவலரின் மகள் மும்பையில் இருந்து சத்தீஸ்கரின் ராய்பூருக்கு தப்பி வந்து திருமணம் செய்து கொள்ள, அந்தப் பெண்ணுடன் ரகசியமாக கூட்டுச் சேர்ந்து ஒழுங்கீனமாக செயல்பட்டதாகவும் பணிநீக்கம் செய்யப்பட்டார். இதுதொடர்பான வழக்கை பஞ்சாப் மற்றும் ஹரியாணா உயர்நீதிமன்றம் விசாரித்தது. அப்போது சிஐஎஸ்எஃப் காவலர் மாயமானதாக கூறப்பட்ட நாள்களில் அவர் மருத்துவ விடுப்பில் இருந்ததாக வாதிடப்பட்ட நிலையில், மும்பையில் இருந்து தப்பி வந்து அந்தக் காவலரின் தம்பியை மணந்துகொண்ட பெண், தனக்கு எந்தக் குறையும் இல்லை என்று தெரிவித்திருந்தார். இவற்றைக் கருத்தில் கொண்ட உயர்நீதிமன்றம் சிஐஎஸ்எஃப் காவலரின் பணிநீக்க ஆணையை ரத்து செய்து உத்தரவிட்டது. இந்த உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதி பி.வி. நாகரத்னா, உஜ்ஜல் புயான் ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை விசாரித்தது. அப்போது நீதிமன்றத்தில் மத்திய அரசே அதிக அளவு வழக்கு தொடுப்பதாகவும், இதன்மூலம் நீதிமன்றத்தில் அதிக அளவு வழக்குகள் தேங்குவதற்கு மத்திய அரசு காரணமாக இருப்பதாகவும் நீதிபதி பி.வி. நாகரத்னா சுட்டிக்காட்டினார்.

# மக்கள்தொகை கணக்கெடுப்புக்கு ஒத்துழைக்க வேண்டும்: மக்களுக்கு குடியரசு துணைத் தலைவர் வேண்டுகோள்

புதுடெல்லி, ஏப்.3:

மக்கள்தொகை கணக்கெடுப்பையொட்டி, குடியரசுதுணைத்தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனை தில்லியில் உள்ள அவரது மாளிகையில் இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் மற்றும் ஆணையர் மிருத்யுஞ்சய் குமார் நாராயண், இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் அலுவலக துணை தலைமை இயக்குநர் விஸ்வஜித் தாஸ் ஆகியோர் புதன்கிழமை சந்தித்தனர்.



அப்போது, 2027-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான சுய கணக்கெடுப்புப் படிவத்தை இணையவழியில் குடியரசு துணைத் தலைவர் பூர்த்தி செய்தார்.

மத்திய அரசின் "எண்ம இந்தியா' முன்முயற்சியுடன் "2027-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு' மேற்கொள்ளப்படுகிறது. இந்த நடவடிக்கை தரம், செயல்திறன், தரவு சேகரிப்பில் காலந்தவறாமை, தகவல் பகிர்வில் விரிவான எண்மத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திமேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த முன்முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தனது சுயகுறிப்பு வழங்கல் விவரம் மற்றும் படத்தை குடியரசு துணைத் தலைவரின் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய அரசின் மக்கள்தொகை கணக்கெடுப்பு முயற்சிக்கு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; அனைவரும் சுயகணக்கெடுப்பு நடவடிக்கையில் பங்கேற்று, தத்தமது மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தால் அறிவிக்கப்பட்ட காலத்துக்குள் HTTPS://SE.CENSUS.GOV.IN என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் தங்களின் குடும்ப உறுப்பினர்களின் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் இந்திய மக்கள்தொகை தலைமைப் பதிவாளர் மற்றும் அதிகாரிகள் சந்தித்து அவரது சுயவிவரக் குறிப்புகளை இணையவழியில் பதிவு செய்து கொண்டனர்.

# "முதல்வராக தொடர்வேன்" சித்தராமையா திட்டவட்டம்

பெங்களூரு, ஏப்.3:

கர்நாடக முதல்வர் பதவியை கைப்பற்ற துணை முதல்வர் டி.கே.சிவகுமார் முயற்சித்து வரும் நிலையில், அம்மாநில முதல்வர் சித்தராமையா தானே அடுத்த 2 ஆண்டுகளுக்கும் முதல்வராக தொடரப் போவதாக தெரிவித்தார்.

கர்நாடக முதல்வராக சித்தராமையா பொறுப்பேற்று வருகிற மே மாதத்துடன் 3 ஆண்டுகள் ஆகிறது. இதனால் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தனக்கு முதல்வர் பதவியை வழங்க வேண்டும் என காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார். அவரது ஆதரவு எம்எல்ஏக்கள் 10-க்கும் மேற்பட்டோர் இதே கோரிக்கையை வலியுறுத்தி போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இது குறித்து முதல்வர் சித்தராமையா நேற்று பாகல்கோட்டையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கர்நாடகாவில் முதல்வர் நாற்காலி காலியாக இல்லை. இப்போது அதனை பற்றி பேசுவது தேவையற்றது. முதல்வர் பதவிக்கு யார் வேண்டுமானாலும் ஆசைப்படலாம். ஆனால் மக்களின் ஆசீர்வாதம் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் தான் முதல்வராக முடியும். காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவதாக நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். ஊடகங்கள் எதற்காக முதல்வர் விவகாரத்தை பெரிதாக்குகின்றன. ஊடகங்களின் இத்தகைய செயல்பாட்டில் எனக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. என்னை பொறுத்தவரை மக்களின் ஆசீர்வாதமும், காங்கிரஸ் மேலிடத்தின் ஆதரவும் எனக்கு இருக்கிறது. எனவே அடுத்த 2 ஆண்டுகளுக்கும் நானே முதல்வராக தொடர்வேன். அதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். இவ்வாறு சித்தராமையா தெரிவித்தார். இந்த கருத்துக்கு டி.கே.சிவகுமாரின் ஆதரவாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# மார்ச் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடி: 9 சதவீதம் அதிகரிப்பு

புதுடெல்லி, ஏப்.3:

நாட்டில்கடந்தமார்ச்மாதம் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) ரூ.2 லட்சம் கோடிக்கு மேல் வசூலாகியுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தை (ரூ.1.83 லட்சம் கோடி) ஒப்பிடுகையில் இது 9 சதவீதம் உயர்வாகும்.

அதேசமயம் 2025-26 நிதியாண்டில் ஒரு மாதத்தில் வசூலான மூன்றாவது அதிகபட்சத் தொகையாகவும் இது திகழ்கிறது.

முன்னதாக 2025, ஏப்ரல் மாதம் இதுவரை இல்லாத அதிகபட்சமாக ரூ.2.36 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது. அதற்கு அடுத்தபடியாக 2025, மே மாதம் ரூ.2.01 லட்சம் கோடி வசூலானது.




மார்ச் 2026

| பிரிவு | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|
| மத்திய ஜி.எஸ்.டி., | 40,549 |
| மாநில ஜி.எஸ்.டி., | 53,268 |
| ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி., | 1,06,246 |
| மொத்த வசூல் | 2,00,064 |

| மொத்த ஜி.எஸ்.டி., வசூல் (நிதியாண்டு விபரம்) | |
|---|---|
| 2024 – 25 | ரூ.20.55 லட்சம் கோடி |
| 2025 – 26 | ரூ.22.27 லட்சம் கோடி |
| அதிகரிப்பு | 8.30% |

ஒட்டுமொத்தமாக 2025-26 நிதியாண்டில் ரூ.22.27 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலாகி 8.3 சதவீத வளர்ச்சியை பதிவுசெய்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், '2026, மார்ச் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.2 லட்சம் கோடியில் உள்நாட்டு பரிவர்த்தனைகள் மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் 5.9 சதவீதம் அதிகரித்து ரூ.1.46 லட்சம் கோடியாக பதிவாகியுள்ளது.

இறக்குமதி மூலம் கிடைக்கப் பெற்ற வருவாய் ரூ.53,861 கோடி. இது 17.8 சதவீதம் அதிகரிப்பாகும்.

திருப்பியளிக்கப்பட்ட மொத்த தொகை ரூ.22,074 கோடி (13.8சதவீத உயர்வு). மொத்த நிகர ஜிஎஸ்டி வருவாய் 8.2 சதவீதம் உயர்ந்து, ரூ.1.78 லட்சம் கோடியாக உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் ஜிஎஸ்டி விகிதங்கள் இரண்டாக (5%, 18%) குறைக்கப்பட்டதால் சுமார் 375 பொருள்களுக்கான விலை குறைந்தது.

அந்த மாதத்தில் ரூ.1.89 லட்சம் கோடி, அக்டோபரில் ரூ.1.96 லட்சம் கோடி, நவம்பரில் ரூ.1.70 லட்சம் கோடி, டிசம்பரில் ரூ.1.74 லட்சம் கோடி ஜிஎஸ்டி வசூலானது.

2026 ஜனவரியில் ரூ.1.93 லட்சம் கோடியும் பிப்ரவரியில் ரூ.1.83 லட்சம் கோடியும் வசூலானது.

# அமெரிக்க படையில் ஒருவர் கூட உயிர் பிழைக்க மாட்டார்! - ஈரானிய தலைமைத் தளபதி எச்சரிக்கை!

**தெஹ்ரான், ஏப்.3:**

ஈரான் மீது படையெடுத்தால் அமெரிக்காவின் ராணுவப் படைகளில் உள்ள ஒருவரும் உயிர் பிழைக்க மாட்டார்கள் என ஈரான் ராணுவத்தின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் அமிர் ஹடாமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அவர்களின் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரான் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.



இத்துடன், சர்வதேச அளவில் எரிபொருள் விநியோகத்தின் முக்கிய பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியுள்ளதால், தாக்குதல்களை அதிகரிக்கப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஈரானின் மீது படையெடுத்தால் அமெரிக்காவின் படையிலுள்ள ஒருவர்கூட உயிர் பிழைக்க மாட்டார்கள் என ஈரான் ராணுவத்தின் தலைமைத் தளபதி மேஜர் ஜெனரல் அமிர் ஹடாமி வியாழக்கிழமை (ஏப். 2) அன்று அறிவித்துள்ளார்.

இது குறித்து, ஈரானின் அரசு தொலைக்காட்சியில் வெளியான செய்தியில் கூறப்பட்டதாவது:

"நமது நாட்டின் மீதிருந்து போரின் நிழல் அகற்றப்பட வேண்டும். அனைவருக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

ஏனெனில், இடங்கள் பாதுகாப்பாகவும், மக்கள் பாதுகாப்பின்றி இருப்பதும் சாத்தியமற்றது" எனக் கூறியுள்ளார். முன்னதாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதல்களில் கடந்த பிப். 28 அன்று ஈரானின் தலைமை மதகுரு அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ளதால் அமெரிக்க போரில் இணைய தயாராகும் ஐக்கிய அரபு அமீரகம்




**துபாய், ஏப்.3:**

ஹார்முஸ் ஜலசந்தியை மூடியுள்ள ஈரானுக்கு எதிரான அமெரிக்க போரில் இணைய யுஏஇ தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க-இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும்வகையில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடி உள்ளது. இந்த சூழ்நிலையில், ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதற்காக ஈரானுக்கு எதிராக போரிடும் அமெரிக்கா மற்றும் பிற நட்பு நாடுகளுடன் ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) இணையத் தயாராகி வருவதாகக் கூறப்படுகிறது. வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்தி அறிக்கையின்படி, இத்தகைய ராணுவ நடவடிக்கைக்கு அனுமதி அளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டு வர யுஏஇ அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஹார்முஸ் ஜலசந்தியை பலவந்தமாகத் திறக்க ஒரு கூட்டணியை உருவாக்குமாறு அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளின் ராணுவ சக்திகளை யுஏஇ தூதர்கள் வலியுறுத்தியுள்ளனர். அமெரிக்க கடற்படையின் ஐந்தாவது படைப்பிரிவு அமைந்துள்ள பஹ்ரைன், இந்த அமெரிக்கத் தீர்மானத்துக்கு ஆதரவு அளிக்கிறது. இது குறித்த வாக்கெடுப்பு வியாழக்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹார்முஸ் ஜலசந்தியில் உள்ள ஈரானிய கண்ணிவெடிகளை அகற்றுவது உள்ளிட்ட ராணுவப் பங்களிப்பை எவ்வாறு வழங்கலாம் என்பது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக யுஏஇ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். போர் தீவிரமடைந்துள்ள நிலையில், ஈரானியர்கள் தங்கள் நாட்டுக்குள் நுழையவோ அல்லது கடந்து செல்லவோ அமீரகம் தடை விதித்துள்ளது.

இருப்பினும், 'கோல்டன் விசா' (10 ஆண்டு வசிப்பிட அனுமதி) வைத்திருப்பவர்கள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள். மேலும், துபாயில் நீண்டகாலமாகச் செயல்பட்டு வந்த ஈரானிய மருத்துவமனை மற்றும் ஈரானிய கிளப் ஆகியவையும் மூடப்பட்டுள்ளன. ஈரானில் உள்ள ஆட்சி வீழ்த்தப்படும் வரை போர் தொடர வேண்டும் என சவுதி அரேபியா உள்ளிட்ட இதர வளைகுடா நாடுகளும் விரும்புவதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனிடையே, ஈரானை எதிர்கொள்ள பிராந்தியத்தில் உள்ள முக்கியமான நாடுகளுடன் இஸ்ரேல் புதிய கூட்டணிகளை உருவாக்கி வருவதாக அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார். குறிப்பாக, சில அரபு நாடுகள் தங்களோடு இணைந்து போரிடுவது குறித்துப் பேசி வருவதாக அவர் அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## குவைத்தில் போர் உள்ளிட்ட பல காரணங்களால் உயிரிழந்த 20 இந்தியர்களின் உடல்கள் கொச்சி வந்தன

குவைத்தில் மேற்காசிய போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 20 இந்தியர்களின் உடல்கள் நேற்று அதிகாலையில் கேரளாவில் உள்ள கொச்சி சர்வதேச விமான நிலையம் வந்தடைந்தன.

மேற்காசிய நாடான ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி போர் தொடுத்தன. இதற்கு பதிலடியாக ஐக்கிய அரபு அமீரகம் உட்பட வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் உள்ள நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் குவைத்தில் உள்ள ஒரு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மீது ஈரான் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய தாக்குதலில் தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரை சேர்ந்த சந்தானசெல்வம் கிருஷ்ணன் (37) என்பவர் உயிரிழந்தார். இவரை தவிர மேலும் 19 இந்தியர்கள் வெவ்வேறு சம்பவங்கள் மற்றும் இயற்கை காரணங்களால் உயிரிழந்தனர்.

என்றாலும் போர் காரணமாக அவர்களின் உடல்களை தாயகம் கொண்டுவரும் பணி தாமதமானது. இந்நிலையில் குவைத்தில் இறந்த 20 இந்தியர்களின் உடல்களும் சிறப்பு விமானம் மூலம் நேற்று அதிகாலையில் கேரளாவில் கொச்சி சர்வதேச விமான நிலையம் வந்தடைந்தன. இதையடுத்து அவரவர் சொந்த ஊர்களுக்கு உடல்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

## "ஈரான் போர் முடிவை நெருங்குகிறது" - நாட்டு மக்களுக்கு ட்ரம்ப் உரை

**வாஷிங்டன், ஏப்.3:**

ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் இலக்குகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும், அமெரிக்கா வெற்றிக்கு மிக அருகில் இருப்பதாகவும் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மேற்கொண்ட போர் ஒரு மாதத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முதல்முறையாக நாட்டு மக்களுக்காக உரை நிகழ்த்தினார். வெள்ளை மாளிகையில் இருந்து 19 நிமிடம் அவர் ஆற்றிய தொலைக்காட்சி உரையில், "ஈரானுக்கு எதிரான போர் முடிவடையும் தருவாயில் உள்ளது. நாங்கள் இதை முடிக்கப் போகிறோம். மிக வேகமாக முடிக்கப் போகிறோம். நாங்கள் இலக்கை நெருங்கிவிட்டோம்.

ஈரான் ராணுவத்தை நசுக்க வேண்டும், ஈரானிய மதகுருமார்களின் அரசு பிராந்திய ஆயுதக் குழுக்களுக்கு அளிக்கும் ஆதரவை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், ஈரான் அணு ஆயுதம் பெறுவதை தடுக்க வேண்டும் ஆகிய நோக்கங்களுக்காகவே இந்த போரில் அமெரிக்கா இணைந்தது. இந்த முக்கிய நோக்கங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்கு வாரங்களில் நமது ஆயுதப் படைகள் போர்க்களத்தில் விரைவான, தீர்க்கமான, மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளன. இதுபோன்ற வெற்றிகளை இதற்கு முன் மிகச் சிலரே கண்டிருக்கிறார்கள்.

ஈரானில் உள்ள அவர்களின் தலைவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டுவிட்டனர். அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களில் அவர்கள் இருக்க வேண்டிய கற்காலத்துக்கே அவர்களை திரும்ப அழைத்துச் செல்லப் போகிறோம். அமெரிக்க பேச்சுவார்த்தையில் ஈரான் தீர்வை எட்டாவிட்டால், அவர்களின் ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்தையும் நாங்கள் தாக்குவோம். எல்லா வாய்ப்புகளும் எங்களிடம் உள்ளன. அவர்களிடம் (ஈரானிடம்) எதுவும் இல்லை. அமெரிக்காவுக்கு ஆதரவாக இருக்கும் அரபு நாடுகள் காயப்படவோ அல்லது தோல்வியடையவோ நான் அனுமதிக்க மாட்டேன்" என தெரிவித்தார்.

## ஹார்முஸ் ஜலசந்தியில் 2,000 கப்பல்கள், 20,000 மாலுமிகள் அவதி

**டெஹ்ரான், ஏப்.3:**

ஈரான் - அமெரிக்க, இஸ்ரேல் போர் நடந்து வருவதால் ஹார்முஸ் ஜலசந்தியில் 2 ஆயிரம் கப்பல்கள் 20 ஆயிரம் மாலுமிகளுடன் தவித்து வருகின்றன. கப்பல்களின் கையிருப்பில் உள்ள உணவு, குடிநீர் குறைந்து வருவதால் அவர்களுக்கு இக்கட்டான சூழல் ஏற்பட்டுள்ளது.



ஈரான் - அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப் படைகளுக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடந்து வருகிறது. இந்நிலையில் ஹார்முஸ் ஜலசந்தி வழியே செல்லும் கச்சா எண்ணெய் கப்பல்களை ஈரான் முடக்கியுள்ளது. இந்த ஜலசந்தியில் ஏராளமான கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஈரானின் அனுமதி பெறும் கப்பல்கள் மட்டுமே இந்த ஜலசந்தியைக் கடந்து வெளிநாடுகளுக்குச் செல்கின்றன.

இந்நிலையில் ஈரானின் முடக்கம் காரணமாக ஜலசந்தியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கப்பல்கள், 20 ஆயிரத்துக்கு மேலான மாலுமிகளுடன் தவித்து வருவதாகத் தெரிய வந்துள்ளது. மேலும் கப்பல்களில் உள்ள உணவு, குடிநீர் போன்றவை குறைந்து வருவதால் அவர்கள் இக்கட்டான சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதையடுத்து தங்களுக்கு உதவி கேட்டு அவர்கள் இ-மெயிலை தாங்கள் சார்ந்த நிறுவனங்களுக்கும், நாடுகளுக்கும் அனுப்பி வருகின்றனர். இ-மெயிலில் உதவி கப்பல்களில் உள்ள ஊழியர்களுக்கு உடனடியாக உணவு, குடிநீர், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு அந்த இ-மெயிலில் உதவி கோரப்பட்டுள்ளது.

இதை சர்வதேச போக்குவரத்து தொழிலாளர்கள் சம்மேளனத்தின் (ஐடிஎஃப்) கடற்பயணிகள் ஆதரவுக் குழு தெரிவித்துள்ளது. இதுகுறித்து ஐடிஎஃப்பின் நிர்வாகி முகமது அர்ராசேடி கூறும்போது, "இங்கு அசாதாரணமான சூழல் நிலவுகிறது. தங்களுக்கு தேவையான உணவு, குடிநீர் கிடைக்குமா என கப்பல் மாலுமிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் அவர்களிடையே பீதி ஏற்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான உதவியை ஈரான் உள்ளிட்ட நாடுகள் வழங்க வேண்டும்" என்றார்.

## 'ஓரியன்' விண்கலனை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது அமெரிக்கா

**புளோரிடா, ஏப்.3:**

நிலவை ஆய்வு செய்யும் பணிக்காக நாசாவின் 'ஆர்டெமிஸ்-2' மிஷன் மூலம் நான்கு விண்வெளிவீரர்களுடன் இந்திய நேரப்படி இன்று காலை 4.05 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது 'ஓரியன்' விண்கலம். இவர்கள் இந்த பயணத்தில் நிலவை சுற்றி வரவுள்ளனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா கடந்த 1969-ல் முதன் முறையாக மனிதர்களை நிலவுக்கு அனுப்பி சாதனை படைத்தது. இந்நிலையில், மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அனுப்புவதற்கான, 'ஆர்டெமிஸ்' திட்டத்தை நாசா துவங்கியது. 2025-க்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டது. இருப்பினும் அந்த முயற்சி பல்வேறு காரணங்களால் தாமதமானது. இந்த சூழலில் அந்த தடைகளை எல்லாம் தாண்டி இன்று 'ஆர்டெமிஸ் -2' விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டு வரலாறு படைக்கப்பட்டுள்ளது. இந்த விண்வெளி பயணத்தில் மூன்று அமெரிக்க மற்றும் கனடா நாட்டை சேர்ந்த விண்வெளி வீரர் ஒருவரும் பயணித்துள்ளனர். அவர்களது பயணம் 10 நாட்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரீட் வைஸ்மேன், விக்டர் குளோவர், கிறிஸ்டினா கோச் (விண்வெளி வீராங்கனை) மற்றும் கனடாவின் ஜெர்மி ஹன்சன் ஆகிய விண்வெளி வீரர்கள் அடங்கியுள்ளனர். கென்னடி விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து இந்த ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது. ராக்கெட் செலுத்தப்பட்ட சில நிமிடங்களுக்கு பின்னர், மைய பகுதியில் உள்ள இயந்திரம் ராக்கெட்டில் இருந்து பிரிந்து தனியாக சென்றது. இதனை அடுத்து, ராக்கெட்டுடன் இணைக்கப்பட்டு இருந்த 'ஓரியன்' விண்கலம் நிலவை நோக்கி வெற்றிகரமாக பயணிக்கிறது என்று நாசா விஞ்ஞானிகள் கூறினர்.

## உலகளாவிய மொபைல் சேவையில் இரண்டாம் இடம் பிடித்த ஏர்டெல்!

மொபைல் தகவல்களுக்கான உலகளாவிய அமைப்பாக செயல்படும் ஜிஎஸ்எம்ஏ - வின் தரவுகளை மேற்கோள் காட்டி, பார்தி ஏர்டெல் நிறுவனம் 65 கோடி சந்தாதாரர்களுடன் உலகின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமாக உருவெடுத்துள்ளதாக வியாழக்கிழமை தெரிவித்துள்ளது. மேலும், அதன் செயல்பாடுகள் இந்தியா மற்றும் ஆப்பிரிக்கா முழுவதும் பரவியுள்ளன என்றும் அந்நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. "ஒவ்வொரு வாடிக்கையாளரின் தொடர்பு மற்றும் நம்பிக்கையைப் பெறுவதற்கும் மதிப்புமிக்க இணைப்பை வழங்குவதற்கும் ஒரு வாய்ப்பாக அமையும் வகையில், புதுமை, நம்பகத்தன்மை மற்றும் அனுபவத்தின் தரத்தை உயர்த்த நாங்கள் பாடுபடுவோம்" என பார்தி ஏர்டெல் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் கோபால் விட்டல் கூறினார்.

நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "இந்தத் தரவுகள் அனைத்தும் மார்ச் 31 ஆம் தேதி வரை உள்ள தகவலின் அடிப்படையில் பெறப்பட்டது" எனத் தெரிவித்தார். மேலும், இந்தியாவில் 36.8 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களையும், ஆப்பிரிக்காவில் உள்ள 14 நாடுகளில் 17.9 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களையும் கொண்டிருப்பதாக ஏர்டெல் நிறுவனம் தெரிவித்துள்ளது. சீனா மொபைல் என்ற நிறுவனம் சுமார் 100 கோடிக்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக் கொண்டு உலகளவில் மொபைல் சேவையில் முதலிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## ஊழியர்கள் வீட்டில் இருந்தே பணியாற்றலாம்: மலேசியா அரசு அனுமதி

ஈரான் - அமெரிக்கா போரால் மத்திய கிழக்கில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் எண்ணெய் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், எரிபொருள் விலைகள் உயர்ந்துள்ளன. எரிபொருள் செலவுகளை குறைப்பதற்காக உலக நாடுகள் பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்டு வருகின்றன. அந்த வகையில், மலேசியாவில் வீட்டில் இருந்தே பணியாற்ற அரசு அனுமதி அளித்துள்ளது. அரசு ஊழியர்கள் இந்த மாதம் முதல் வீட்டிலிருந்து பணியாற்றத் தொடங்குவார்கள் என்று பிரதமர் அன்வார் இப்ராஹிம் தெரிவித்துள்ளார். ஏப்ரல் 15 முதல் இந்த விதி அமலுக்கு வரும். அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு தொடர்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இது பொருந்தும். எரிபொருள் பயன்பாட்டை குறைத்து,விநியோகத்தை நிலையாக வைத்து இருக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மலேசிய அரசு கூறியுள்ளது. ஈரான் - அமெரிக்கா போர் மேலும் தீவிரம் அடையும் என்று சொல்லப்படும் நிலையில், உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் இப்போது இருப்பதை விட பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என அச்சம் எழுந்துள்ளது. இத்தகைய சூழலில்தான், மலேசியா சிக்கன நடவடிக்கையாக வொர்க் பிரம் ஹோம் முடிவை கொடுத்துள்ளது.

# அமெரிக்கா நிரந்தர அவமானத்தை சந்திக்கும் வரை போர் தொடரும்: ஈரான் திட்டவட்டம்

**தெஹ்ரான், ஏப்.3:**

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்த கருத்துகளுக்கு, ஈரான் ராணுவம் கடுமையான பதிலடி கொடுத்துள்ளது. அமெரிக்கா நிரந்தர அவமானத்தை சந்திக்கும் வரை தற்போதைய போர் நீடிக்கும் என்று ஈரான் எச்சரித்துள்ளது.



ஈரான் அரசு ஊடகமான பிரஸ் டிவியில் கதம் அல்-அன்பியா மத்திய தலைமையகத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், 'எங்கள் ராணுவ ஆற்றல் மற்றும் எங்கள் ஆயுதங்கள் குறித்த அமெரிக்காவின் உளவுத் தகவல் முழுமையற்றது.

எங்களின் உண்மையான ஆற்றலைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது. எங்களின் முக்கியமான ஏவுகணை உற்பத்தித் தளங்கள், நீண்ட தூரத் தாக்குதல் ட்ரோன்கள், நவீன வான் பாதுகாப்பு அமைப்புகள், மின்னணுப் போர் மற்றும் சிறப்பு ஆயுதங்களை நீங்கள் அழித்துவிட்டதாக எண்ண வேண்டாம்.

அத்தகைய அனுமானங்கள் நீங்கள் சிக்கியுள்ள சகதியை மேலும் ஆழமாக்கும். நீங்கள் தாக்கியதாக நினைக்கும் எங்கள் தளங்கள் முக்கியமற்றவை; எங்களின் முக்கிய ராணுவ உற்பத்தி, உங்களுக்குத் தெரியாத மற்றும் உங்களால் ஒருபோதும் அடைய முடியாத இடங்களில் நடைபெறுகிறது. எங்களின் ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் ஆயுத தளங்களை அடைய நீங்கள் முயற்சி செய்ய வேண்டாம்; நீங்கள் தவறாகவே அதனை கணிப்பீர்கள். உங்களால் எதையும் சாதிக்க முடியாது. எங்கள் கண்ணியமிக்க, அன்புக்குரிய, முஸ்லிம் தேசத்துக்கு எதிராக நீங்கள் தொடங்கிய போருக்கு நீங்கள் விலை கொடுக்க வேண்டும். நீங்கள் நிரந்தர அவமானத்தையும், வருத்தத்தையும்,சரணடைதலையும் சந்திக்கும் வரை இந்தப் போர் தொடரும்.

நீங்கள் ஏற்கெனவே பெற்ற கடுமையான அடிகளின் தொடர்ச்சியாக, எங்களிடமிருந்து மேலும் பேரழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களை எதிர்பார்க்கலாம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கதம் அல்-அன்பியா தலைமையகம் என்பது ஈரானின் கட்டளையிடும் மிக முக்கிய அமைப்பாகும். இது ஈரான் ராணுவம் மற்றும் இஸ்லாமியப் புரட்சிகர காவல் படை (IRGC) ஆகியவற்றுக்கு இடையேயான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறது.

முன்னதாக நாட்டு மக்களுக்கு ட்ரம்ப் ஆற்றிய உரையில், "ஈரானுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் தீர்க்கமான தாக்குதல்களை நடத்தியது. இந்த ராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கம் நிறைவடையும் தருவாயில் உள்ளது. இப்போது ஈரானின் கடல்சார் மற்றும் வான்வழித் திறன்கள் முறையாகச் சிதைக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் பரந்த அளவிலான ராணுவக் கட்டமைப்பும் கடுமையாகப் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டின் பெரும்பாலான தலைவர்கள் தற்போது கொல்லப்பட்டுவிட்டனர்.

இந்த தாக்குதலில் ஈரானின் ஆயுதத் தொழிற்சாலைகளும், ராக்கெட் ஏவுதளங்களும் துண்டு துண்டாகச் சிதறடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் மிகச் சிலவே எஞ்சியுள்ளன. அமெரிக்கா முன்னெப்போதையும் விடப் பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்று வருகிறது" என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

## பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும், அதிமுக ஆட்சிக்கும் பெரிய வரலாறே உள்ளது



## “கேரள மக்கள் பாஜகவை உற்சாகமாக ஆதரிக்கின்றனர்”





## தி.மு.க. பா.ஜ.க. கள்ளக்கூட்டணி: திருச்சியில் விஜய் தாக்கு

## தமிழகத்தில் ஏப்.8 வரை சில இடங்களில் மழை வாய்ப்பு

## குழந்தைக் கடத்தலுக்கான சந்தையாக டில்லி மாறிவிட்டது:உயர் நீதிமன்றம் கருத்து


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 03.04.2026 வெள்ளிக்கிழமை | இலவச இ-பேப்பர்